விலை: 30.00
பக்கங்கள்: இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2050 மார்கழி 07 திங்கட்கிழமை (23.12.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 04

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள
உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

## சர்வதேசத்தின் அழுத்தங்களுக்கு நாம் அடிபணியப் போவதில்லை

### அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

சர்வதேச சக்திகளின் அழுத்தங்களுக்கு தாம் அடி பணியப் போவதில்லை எனத் தெரிவித்த அமைச்சர் நிமல் சிறிபால டிசில்வா, ஜெனிவா பிரேரணையை ஒரு போதும் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என்றும் கூறினார்.

கடந்த ஐந்து ஆண்டுகளில் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் சர்வதேச சக்திகளுக்கு அடிபணிந்தே ஆட்சி செய்தனர்.

சர்வதேச கட்டுப்பாடுகளை ஏற்றுக்கொண்டு சர்வதேச சக்திகளுக்கு முன்னால் மண்டியிட்டு நாட்டினை தவறான திசையில் 23

## சர்வாதிகார ஆட்சியை முன்னெடுக்க கோட்டாபய அரசாங்கம் தீவிர முயற்சி

### ஐக்கிய தேசியக் கட்சி குற்றச்சாட்டு

(கொழும்பு)

நாட்டின் தேசிய பிரச்சினைகளை திசைதிருப்பவும் சர்வாதிகார ஆட்சியை முன்னெடுக்கவுமே தீவிர அரசியல் பழிவாங்கல்களில் தற்போதைய அரசாங்கம் ஈடுபடுகின்றது. சம்பிக்க ரணவக்கவின் கைது உள்ளிட்ட விடயங்கள் குறித்து கலந்துரையாட இன்று சபாநாயகரை சந்திக்க தீர்மானித்துள்ளதாக ஐக்கிய தேசிய கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஆசுமார சிங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் முதல் சிம்மாசன பிரசங்கம் ஜனவரி மாதம் 3ம் திகதி இடம் பெற்றதை தொடர்ந்து பாராளுமன்ற கூட்டத் 23

## நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும்

# ஆயுதம் ஏந்திய இராணுவம்

# சுற்றிவளைப்பு சோதனை

### வர்த்தமானியை வெளியிட்டார் கோட்டாபய

(கொழும்பு)

நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் ஆயுதம் ஏந்திய இராணுவத்தினரை கடமையில் ஈடுபடுத்துவதுடன் தொடர்புடைய உத்தரவை நீடிக்கும் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. (23ஆம் பக்கம் பார்க்க)



## உடன்படிக்கையின்றி ஜனாதிபதிக்கு ஒத்துழைப்பு

### சுதந்திரக் கட்சி

(அம்பாந்தோட்டை)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எந்தவொரு உடன்படிக்கையும் இல்லாமல் ஒத்துழைப்பு வழங்கத் தயார் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அறிவித்துள்ளது.

அம்பாந்தோட்டையில் இடம் பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றுகையிலேயே அந்தக் கட்சியின் பேச்சாளரும், அமைச்சருமான மஹிந்த அமரவீர இதனைக் குறிப்பிட்டுள்ளார். (ஞா)

## மயக்கமடைந்து விழுந்தவர் உயிரிழப்பு

### நவாலியில் சோகம்

(யாழ்ப்பாணம்)

வேலைகத்குச் சென்ற குடும்பஸ்தர் மயக்கமடைந்து உயிரிழந்துள்ளார்.

இச் சம்பவத்தில் மானிப்பாய் நவாலி வடக்கைச் சேர்ந்த சண்முகராஜா அம்பிகைபாலன் (வயது 64) என்ற குடும்பஸ்தரே உயிரிழந்துள்ளார். மேலும் நேற்று முன்தினம் சனிக்கிழமை 23

## ஜெனிவா பிரேரணையை வாபஸ் பெற அரசு நடவடிக்கை எடுக்கும்

### தினேஸ் குணவர்தன தெரிவிப்பு



(கொழும்பு)

கடந்த 2015 இல் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் கொண்டுவரப்பட்ட 30/1 பிரேரணையை மீளாய்வு செய்ய வெளிவிவகாரத் துறை அமைச்சு நடவடிக்கை எடுத்து வருவதாக வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குண 23

## மோ.சைக்கிள் விபத்தில் காயமடைந்தவர் உயிரிழப்பு

### கைதடிப் பகுதியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிள் விபத்தில் படுகாயமடைந்தவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இச் சம்பவத்தில் யாழ்ப்பாணம், கைதடி பகுதியைச் சேர்ந்த சோமசுந்தர சர்மா ராமலிங்க சர்மா என்பவரே உயிரிழந்தவராவார். 23

## அரசின் வரவு - செலவுத் திட்டத்திற்கு ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவளிக்கும்



### சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு

(கொழும்பு)

தேர்தல் காலத்தின் போது, வழங்கிய வாக்குறுதிக்கமைவாக வரவு - செலவுத் திட்டத்தை அரசாங்கம் கொண்டுவருமாக இருந்தால், அதற்கு பூரணமான ஆதரவை வழங்கத் தயாராகவே உள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் 23

## மட்டக்களப்பில் கன மழை மக்கள் கடும் அவதி





16

## சட்டத்தின் முன் அனைவரும் சமம் நான் கூட இதற்கு விதிவிலக்கல்ல

### பிரதமர் மகிந்த தெரிவிப்பு

(கொழும்பு)

அரசியல் குற்றச்சாட்டிற்கும், சிவில் குற்றச்சாட்டிற்கும் இடையில் பாரிய வேறுபாடுகள் காணப்படுகின்றன. இன்று சட்டம் முறையாக செயற்படுகின்றது. சட்டத்தின் முன்னிலையில் அனைவரும் சமம். பாட்டலி, ராஜித, ரணில் ஏன் நான் கூட விதிவிலக்கல்ல என பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

வாத்துவ பிரதேசத்தில் நேற்று இடம் பெற்ற நிகழ்வில் கலந்துக் கொண்டு கருத்துரைக்கையில் அவர் மேற்கண்ட 23

## கூட்டமைப்பு 16 ஆசனங்களை இம்முறை பெறுவது கடினம்


### சித்தார்த்தன் எம்.பி தெரிவிப்பு

(வவுனியா)

கடந்த காலங்களைப்போல் தமிழ் தேசியக்கூட்டமைப்பு 16 ஆசனங்களைப் பெறுவது கேள்விக்குறியாக இருந்தாலும் அதிகளவான ஆசனங்களைப்பெறும் என நம்பிக்கை வெளியிட்ட புளொட் அமைப்பின் தலைவரும் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான த.சித்தார்த்தன் 23

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# ஓராண்டு நினைவஞ்சலி



மண்மகிழ 1950 - 06 - 28

கண் நெகிழ 2019 - 01 - 02

## அமரர் வைரமுத்து காந்தன் (ஐயா)

திதி: 23.12.2019

அப்பா இன்று உங்கள்
நினைவு நாள்
ஆனால் என்றும் எங்கள் நினைவில்
வாழ்வீர்கள் அப்பா
நீங்கள் எங்கள் தெய்வம்
நம் குடும்பம் என்னும் கோயிலை
உருவாக்கிய கடவுள் நீங்கள்
பணம், பொருள் மேல் பற்றில்லா
பொருள் நீங்கள்
தன்னலத்தைவிட பிறர் நலம் பேணிய
பெருமான் நீங்கள்

இமையாணன் கிழக்கு,
உடுப்பிட்டி.

நினைவுகளுடன்:
குடும்பத்தினர்

(C-8626)

---

ANDRA BOOKS

உங்கள் பிள்ளைகளின்
பரீட்சை மதிப்பெண்களை
அதிகரிக்க வேண்டுமா?

அன்றாவின்
# யாழ் அருவி

பயிற்சிப் பரீட்சை வினாத்தாள்கள் விடைகளுடன்...

2020 ஆண்டுக்குரிய **தவணை-1**
தரம் - 1 தொடக்கம் தரம் - 11 வரை ...

## இப்போது விற்பனையில்....!

அனைத்துப் புத்தகக் கடைகள் மற்றும்
உள்ளூர் சுப்பர் மார்கெட்டுகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.



(C-8631)

இளைப்பாறிய உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் முன்னணி ஆசிரியர்களைக் கொண்டு உருவாக்கப்பட்டது.!

ANDRA PUBLICATIONS

Hotline: 0763604891

---

# துறவற அர்ப்பணிப்பு வாழ்வின் ஆண்டுகள்

வது
## 50 பொன்விழா நாயகியே!

## சகோதரி மேரி லூட்ஸ் யோசப் அவர்களே!



பணி விடை கண்டோம் பாசம் கண்டோம் அன்பைக் கண்டோம்
கொண்ட கொள்கையில் வீரம் கண்டோம்
அஞ்சா நெஞ்சைக் கண்டோம். வரம் பெற்று நலம் நல்கக் கண்டோம்
வேற்றுமையற்ற பணியைக் கண்டோம் சோர்வுறா முயற்சி கண்டோம்
உயிர்களிடத்தில் மனிதம் கண்டோம்
ஆற்றல்மிக்க செயலைக் கண்டோம் கிராம மட்டத்திலான புனர்வாழ்வு
திட்டத்தை (CBR) முதன் முதலில்
கிளிநொச்சி மாவட்டத்தில் வித்திட்ட நாயகியே
மாற்றீடானவரை மீட்கத் துணிந்தவரே
பற்பல நிறுவனங்களை மாற்றீடானவர்களுடன் இணைத்தவரே
அவர்களை உலகோடு இணைத்தவரே
விடாமுயற்சியால் அவர்களுக்கென்றே
காணி நிலம் கட்டடமும் பெற்றுத் தந்தவரே
மானிட அங்கீகாரத்தை / மாற்றீடானவர்களுக்கு வழங்கிய பேறே
தாயாகத் தந்தையாக, நண்பியாக உற்ற உறவினராக,
வைத்தியராக, தாதியாக, சேவகியாக, காக்கும் கடவுளாகத்
தன்னை அர்ப்பணித்தவரே உங்கள் பணியோங்க உங்கள் நலமோங்க
சமூகம் கைகோர்க்க இறையாசி வேண்டி
பணிகின்றோம் வாழ்த்துகின்றோம்
வாழி! வாழி!! வாழி!!!

உங்கள் பணியில்
18.12.
2019


வாழ்த்துவோர்:
பயனாளிகள், பணியாளர்கள்,
விசேட தேவைக்குட்பட்டோர் மகிழ்வகம் (மாங்குளம்)

(C-8629)

# காங்கேசன்துறை வீமன்காமம் பகுதியில் காணிகள் விடுவிக்கப்பட்ட போதும் தொடரும் பௌத்த ஆக்கிரமிப்பு

## கம்பெரலிய பெயர்ப்பலகை நாட்டியோர் கவனிக்கவில்லையா?






(யாழ்ப்பாணம்)

வலி.வடக்கில் இராணுவத்தினரால் விடுவிக்கப்பட்ட தனியாருக்குச் சொந்தமான காணியில் உள்ள முருகன் ஆலய வளாகத்திலும் அதனைச் சூழவுள்ள பகுதியிலும் பௌத்த மதம் சார்ந்த அடையாளங்களும் வழிபாடுகளும் இடம்பெற்று வருவதை அவதானிக்க முடிகிறது.

காங்கேசன்துறை வீமன்காமம் வடக்குப் பகுதி இராணுவத்தால் விடுவிக்கப்பட்ட போது அவர்கள் பின்பற்றிய மதம் சார்ந்த வழிபாட்டு அடையாளங்களை அகற்றாது அப்படியே விட்டுச் சென்றமை அப்பகுதி மக்களிடையே பல்வேறு சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளது.

நாட்டின் அரசியல் அமைப்பில் பௌத்தத்திற்கு முன்னுரிமை வழங்கப்பட்டாலும் ஏனைய மதங்களைப் பின்பற்றுவோருக்கு உரிய முக்கியத்துவம் வழங்கப்படும் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில் இராணுவத்தினர் தமது மத வழிபாடுகளை மேற்கொள்வதற்காக முருகன் ஆலயப் பகுதியில் விகாரை அமைத்து அவர்கள் அங்கிருந்து வெளியேறிய நிலையில் குறித்த வழிபாட்டு அடையாளங்களை அகற்றாமலோ அல்லது எடுத்துச் சொல்லாமலோ விட்டிருப்பது இந்து மதச் செயற்பாடுகளுக்கு இடையூறு விளைவிப்பதாக அமைகிறது.

நல்லாட்சி அரசாங்கத்தை பாதுகாத்த தமிழ்த் தலைமைகள் தமக்குப் பரிசாகக் கிடைத்தகம் பெரலிய திட்டத்தின் பெயர்ப்பலகையை குறித்த பகுதியில் உள்ள முருகன் ஆலய வளவில் நாட்டியுள்ள நிலையில் ஆலய வளாகத்திலுள்ள விகாரை தொடர்பில் நடவடிக்கை எடுக்காமை தமிழ் மக்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. (இ-10)

# சமூகவிரோதச் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த யாழில் நேற்று விசேட சுற்றிவளைப்பு சோதனை

(குப்பிழான்)

யாழ். குடாநாட்டில் இடம்பெற்று வரும் வாள்வெட்டுக் குழுக்களின் அட்டகாசம் மற்றும் சமூக விரோதச் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை முதல் யாழ். நல்லூர் அரசடிப் பகுதியை மையமாக வைத்து விசேட சுற்றிவளைப்பு மற்றும் சோதனை நட



வடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பாதுகாப்புச் செயலாளர் மூலமாக வடமாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபருக்கு விடுத்த பணிப்புரைக்கமைய குறித்த சுற்றி வளைப்பு சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

மேற்படி சுற்றிவளைப்பு நடவடிக்கையில் பொலிஸார், பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் மற்றும் இராணுவத்தினர் குவிக்கப்பட்டு ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டதுடன் பொதுமக்களின் வீடுகளும் சோதனையிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-18)

# சம்பிக்கவின் கைது மக்களின் ஆணையை மீறும் செயல்

## விக்கிரமபாகு கருணாரட்ன காட்டம்

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் சம்பிக்க ரணவக்கவை நாடாளுமன்ற சம்பிரதாயங்களை மீறிக் கைது செய்துள்ளமையானது, ஜனநாயகத்தையும் மக்களின் ஆணையையும் மீறும் செயற்பாடாகும் என நவசமசமாஜக் கட்சியின் செயலாளர் விக்கிரமபாகு கருணாரட்ன தெரிவித்தார்.

கொழும்பில், நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"விபத்தொன்றை ஏற்படுத்தியதாகக் கூறப்படும், விவகாரம் தொடர்பாக முன்னாள் அமைச்சர் சம்பிக்க ரணவக்க, தற்போது கைது செய்யப்பட்டுள்ளார்.


எனினும். நாடாளுமன்ற சம்பிரதாயங்களை மீறியே இவர் கைது செய்யப்பட்டுள்ளார். இந்த விடயத்தில் ஜனநாயக ரீதியாக சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதா? என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதியொருவரை கைது செய்வது என்பது மக்களின் ஆணையைப் புறந்தள்ளும் செயற்பாடாகவே நாம் கருதுகின்றோம். இது பாசிச காலத்தையே நினைவுபடுத்துகிறது.

இராணுவத்துக்கும் பொலிஸாருக்கும் பலத்தைக் கொடுத்து ஜனநாயகத்தை அழிக்கும் செயற்பாடுகள்தான் தற்போது இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன.

எனவே, ஜனநாயகத்தை காப்பாற்றும் நபர்கள் இருப்பார்களாயின்நாம்அவர்களுக்கு இவ்வேளையில் அழைப்பு விடுக்கின்றோம்.

இவ்வாறான புதிய கலாசாரங்களை அழிக்க அனைவரும்



ஒன்றிணைய வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றோம்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# பரபரப்பான போட்டியில் கோலியின் சிறப்பான ஆட்டத்தால் மே.தீவுகளை வீழ்த்தியது இந்தியா

## தொடர் இந்தியா வசமானது




இந்தியா - வெஸ்ட் இண்டீஸ் அணிகளுக்கு இடையிலான 3-வது மற்றும் கடைசி ஒருநாள் கிரிக்கெட் போட்டி கட்டாக் நகரில் நடைபெற்றது. டாஸ் வென்ற இந்திய அணி பந்து வீச்சை தேர்வு செய்தது. இந்திய அணியில் தீபக் சாஹருக்குப் பதிலாக நவ்தீப் சைனி சேர்க்கப்பட்டார்.

வெஸ்ட் இண்டீஸ் அணியின் மிடில் ஆர்டர் பேட்ஸ்மேன்களான பூரன் 64 பந்தில் 10 பவுண்டரி, 3 சிக்சருடன் 89 ரன்களும், கேப்டன் பொல்லார்டு ஆட்டமிழக்காமல் 51 பந்தில் 3 பவுண்டரி, 7 சிக்சர்களுடன் 74 ரன்களும் விளாச வெஸ்ட் இண்டீஸ் 50 ஓவரில் 5 விக்கெட் இழப்பிற்கு 315 ரன்கள் குவித்தது.

இந்திய அணி சார்பில் நவ்தீப் சைனி 2 விக்கெட்டும் சர்துல் தாகூர், முகமது ஷமி, ஜடேஜா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டும் வீழ்த்தினர்.

பின்னர் 316 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்குடன் ரோகித் சர்மா, லோகேஷ் ராகுல் ஆகியோர் தொடக்க வீரர்களாக களம் இறங்கினர். இருவரும் சிறப்பான தொடக்கத்தை கொடுத்தனர். இதனால் இந்தியாவின் ஸ்கோர் சீராக சென்று கொண்டிருந்தது.

49 பந்தில் 50 ரன்னைத் தொட்ட இந்தியா, 96 பந்தில் 100 ரன்னைத் தொட்டது. லோகேஷ் ராகுல் 49 பந்திலும், ரோகித் சர்மா 52 பந்தில் அரைச்சதம் அடித்தனர்.

இந்தியாவின் ஸ்கோர் 21.2 ஓவரில் 122 ரன்னாக இருக்கும்போது இந்த ஜோடி பிரிந்தது. ரோகித் சர்மா 63 பந்தில் 63 ரன்கள் சேர்த்து ஆட்டமிழந்தனார். அடுத்து விராட் கோலி களம் இறங்கினார். கோலி களம் இறங்கியதில் இருந்து அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தினார். மறுமுனையில் லோகேஷ் ராகுல் 89 பந்தில் 77 ரன்கள் சேர்த்து ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த ஷ்ரேயாஸ் அய்யர், ரிஷப் பந்த் தலா 7 ரன்களிலும், கேதர் ஜாதவ் 9 ரன்னிலும் ஆட்டமிழந்தனர். இதனால் இந்தியா 38.5 ஓவரில் 228 ரன்கள் சேர்த்து இக்கட்டான நிலைக்கு தள்ளப்பட்டது.

ஆனால் மறுமுனையில் விராட் கோலி 51 பந்தில் அரைச்சதம் அடித்தது அணியை முன்னோக்கி எடுத்துச் சென்றார். 6-வது விக்கெட்டுக்கு விராட் கோலியுடன் ஜடேஜா ஜோடி சேர்ந்தார். விராட் கோலிக்கு சப்போர்ட் கொடுக்கும் வகையில் ஜடேஜா விளையாடினார்.

கடைசி 24 பந்தில் 30 ரன்கள் தேவைப்பட்டது. 47-வது ஓவரை கீமோ பால் வீசினார். இந்த ஓவரின் முதல் பந்தில் விராட் கோலி க்ளீன் போல்டானார். அவர் 81 பந்தில் 85 ரன்கள் சேர்த்து ஆட்டமிழந்தார். கோலி ஆட்டமிழந்ததும் இந்திய ரசிகர்கள் அதிர்ச்சியடைந்தனர்.

அடுத்து ஷர்துல் தாகூர் களம் இறங்கினார். முதல் பந்தை பவுண்டரிக்கு விரட்டினார். இந்த ஓவரில் இந்தியாவுக்கு 8 ரன்கள் கிடைத்தது. இதனால் கடைசி 3 ஓவரில் 22 ரன்கள் தேவைப்பட்டது.

48-வது ஓவரை காட்ரெல் வீசினார். இந்த ஓவரின் 3-வது பந்தை சிக்சருக்கு தூக்கிய ஷர்துல் தாகூர், 4-வது பந்தை பவுண்டரிக்கு விரட்டினார். இதனால் இந்தியாவுக்கு 15 ரன்கள் கிடைத்தது. அத்துடன் இந்தியாவின் வெற்றி உறுதியானது.

இதனால் கடைசி 12 பந்தில் 7 ரன்கள் தேவைப்பட்டது. 49-வது ஓவரை கீமோ பால் வீசினார். 2-வது பந்தை ஜடேஜா பவுண்டரிக்கு விரட்டினார். 5-வது பந்தை நோ-பாலாக வீச இந்தியா 48.4 ஓவரில் 6 விக்கெட் இழப்பிற்கு 316 ரன்கள் அடித்து நான்கு விக்கெட் வித்தியாசத்தில் த்ரில் வெற்றி பெற்றது.

ஜடேஜா 31 பந்தில் நான்கு பவுண்டரிகளுடன் 39 ரன்களுடனும், ஷர்துல் தாகூர் 6 பந்தில் 2 பவுண்டரி, ஒரு சிக்சருடன் 17 ரன்களுடனும் களத்தில் இருந்தனர். வெஸ்ட் இண்டீஸ் அணி தரப்பில் கீமோ பால் 3 விக்கெட் வீழ்த்தினார்.

இந்த வெற்றியின் மூலம் இந்தியா தொடரை 2-1 எனக்கைப்பற்றியது.



# இலங்கைக்கெதிரான டெஸ்டில் பாகிஸ்தானின் முதல் நான்கு விரர்களும் சதம் அடித்து சாதனை



இலங்கை மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தானின் முதல் நான்கு துடுப்பாட்ட வீரர்கள் சதங்கள் குவித்து டெஸ்ட் கிரிக்கெட் சாதனையை நிலை நாட்டியுள்ளனர்.

பாகிஸ்தானுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி, தற்போது டெஸ்ட் கிரிக்கெட் தொடரின் இரண்டாவது போட்டியில் விளையாடி வருகிறது. இந்தப் போட்டி கராய்ச்சி தேசிய விளையாட்டரங்கில் நடைபெற்றுவருகிறது.


இந்நிலையில், டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் பாகிஸ்தானின் முதல் நான்கு வீரர்கள் சதம் குவித்தமை இதுவே முதல் தடவையாகும்.

மேலும் டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் பங்களாதேஷிக்கு எதிராக டாக்காவில் 2007இல் நடைபெற்ற டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் முதல் இன்னிங்ஸில் இந்தியாவின் முதல் நான்கு வீரர்கள்ான தினேஷ் கார்த்திக் (129), வசிம் ஜபார் (138), ராகுல் ட்ராவிட் (129), சச்சின் டெண்டுல்கர் (122 ஆட்டமிழக்காமல்) ஆகியோர் சதம் குவித்திருந்தனர்.

அதன் பின்னர் டெஸ்ட் இன்னிங்ஸ் ஒன்றில் முதல் நான்கு வீரர்கள் சதம் குவித்திருப்பது இது இரண்டாவது சந்தர்ப்பமாகும். இந்த இரண்டு சாதனைகளும் உபகண்ட அணிகளினால் நிலை நாட்டப்பட்டிருப்பது விடேச அம்சமாகும்.

போட்டியின் மூன்றாம் நாளான நேற்றுமுன்தினம், ஆரம்ப வீரரகளான ஷான் மசூத் (135), ஆபித் அலி (174) ஆகியோர் பாகிஸ்தானின் இரண்டாவது இன்னிங்ஸில் சதம் குவித்ததுடன் நேற்றைய தினம் அணித் தலைவர் அஸார் அலியும் பாபர் அஸாமும் சதம் குவித்தனர்.

அஸார்அலி 16 ஆவது டெஸ்ட் சதத்தைக் குவித்ததுடன் அணித் தலைவராக அவர் பெற்ற முதலாவது சதம் இதுவாகும். பாபர் அஸாம் நான்காவது சதத்தைப் பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.



# ஜெயசூர்யாவின் 23 வருட சாதனையை தவிடு பொடியாக்கிய ரோகித் சர்மா

ஒரே வருடத்தில் அதிக ரன்கள் அடி த்த வீரர் என்ற ஜெய சூர்யாவின் 22 வரு டகால சாத னையை முறியடித்தார் ஹிட் மேன் ரோகித் சர்மா.

இந்தியா - வெஸ்ட் இண்டீஸ் அணிகள் மோதும் 3-வது மற்றும் கடைசி ஒரு நாள் போட்டி ஒடிசா மாநிலம் கட்டாக்கில் நேற்று நடைபெற்றது.

இந்த போட்டிக்கு முன் இந்த ஆண்டில் ரோகித் சர்மா 3 வடிவிலான கிரிக்கெட் போட்டிகளில் தொடக்க வீரராக களம் இறங்கி இதுவரை 2,379 ரன்களை எடுத்திருந்தார்.

இன்னும் அவர் 9 ரன் எடுத்தால் ஒரே ஆண்டில் தொடக்க




வீரராக களம் இறங்கி அதிக ரன் எடுத்த வீரர் என்ற சாதனையை படைக்கும் வாய்ப்புடன் நேற்று களம் இறங்கினார். 316 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்குடன் ரோகித் சர்மா - லோகேஷ் ராகுல் ஜோடி களம் இறங்கியது.

ரோகித் சர்மா பத்து பந்தில் 9 ரன்களை எட்டினார். அப்போது 22 வருடகால ஜெயசூர்யாவின் சாதனையை முறியடித்தார். இலங்கை அணியின் முன்னாள் தொடக்க வீரரான ஜெயசூர்யா 1997-ம் ஆண்டில் 2387 ரன் எடுத்ததே சாதனையாக இருந்தது.

# தேர்தலில் தோற்றுப்போன கட்டமைப்பே கூட்டமைப்பு முடிந்தால் தனித்து நின்று வென்று காட்டட்டும்

## அமைச்சர் டக்ளஸ் சவால்

(யாழ்ப்பாணம்)

தேர்தல்களில் கட்டமைப்பு ரீதியாக மக்கள் பலம் குறைந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் முடிந்தால் தனித்தனிக் கட்சியாகத் தேர்தலில் போட்டியிட்டு மக்கள் ஆணையைப் பெற்றுக் காட்டட்டும் என ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா சவால் விடுத்தார்.


யாழ்ப்பாணத்தில் உள்ள அவரது கட்சித் தலைமையகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு சவால் விடுத்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஈ.பி.டி.பி.மீது இருக்கும் அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக இன்னும் ஏன் அமைச்சராக இருக்கிறார் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த எம்.பி. ஒருவர் கேள்வி எழுப்பியிருக்கிறார்.

நான் எனது அமைச்சை விரும்பிப் பொறுப்பேற்கவில்லை. ஆதரவாளர்களும் புத்திஜீவிகளும் என்னை மக்களுக்காக அமைச்சைப் பொறுப்பேற்குமாறு கேட்டுக் கொண்டனர்.

சிங்களமக்களின் பெரும்பான்மை வாக்குகளால் வென்ற ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, எனக்கு இன நல்லிணக்கத்தின் அடையாளமாக இலங்கை முழுவதற்குமான பாரிய பொறுப்புள்ள அமைச்சை வழங்கியுள்ளார்.

நல்லாட்சி அரசின் சகபாடிகளாக இருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தமது ஆட்சிக் காலத்தில் தமிழ் மக்களுக்கு உருப்படியான விடயங்கள் எதனையும் செய்யவில்லை. மாறாக தமது பதவிகளை பாதுகாப்பதற்கும் சொத்துக் களை அதிகரிக்கவுமே பாடுபட்டார்கள்.



நான் முன்னர் அமைச்சராக இருந்த காலத்தில் வடக்கு மக்களுக்கு என்ன அபிவிருத்தி செய்தேன் என்பது அனைவருக்கும் தெரியும்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் நல்லாட்சிக் காலத்தில் தமிழ் மக்களுக்குத் தேவையான பல விடயங்களை சாதித்திருக்க முடியும்.

ஆனால் அவர்கள் அவ்வாறு செய்யாமல் ஐ.நாவில் கால அவகாசத்தைப் பெற்றுக் கொடுத்தும் கம்பெரலிய அன்பளிப்புத் திட்டத்தில் பணத்தை உழைத்ததுமே மிச்சம்.

எனவே தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் பல கட்சிகளாக சேர்ந்து நின்று எனது கட்சியை எடை போடாமல் முடிந்தால் தனித்தனிக் கட்சியாக மக்களிடம் சென்று ஆணையைப் பெற்றபின் ஒன்று சேருங்கள் பார்ப்போம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-10-101)

## நாகர்கோவில் பகுதியில் மண் அகழ்வு; அடையாளப்படுத்தும் போராட்டம்



(கரணவாய்)

நாகர்கோவில் குடாரப்பு பகுதியில் மண் அகழ்வு இடம்பெறும் பகுதிகளை அடையாளப்படுத்தும் போராட்டம் நேற்றுக்காலை பருத்தித்துறை பிரதேச சபை உறுப்பினர் ஆ.சுரேஷ்குமார் தலைமையில் இடம்பெற்றது.

இவ் அடையாளப்படுத்தும் போராட்டத்தில் முன்னாள் மாகாணசபை உறுப்பினர் ச.சுகிர்தனும் கலந்து கொண்டார். (இ-10-60)

## பேருந்தில் கொழுவிய மோட்டார் சைக்கிள்

### தீப்பற்றியதால் மாணவன் பலி!



(காத்தான்குடி)

மட்டக்களப்பு காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிராங்குளத்தில் நேற்று முன்தினம் மாலை ஏற்பட்ட பாரிய வீதிவிபத்தில் மாணவன் ஒருவர் உயிரிழந்ததாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

அக்கரைப்பற்றிலிருந்து வாழைச்சேனை நோக்கிச் சென்ற தனியார் பேருந்து பின்பகுதியில் அதே திசையில் பயணித்த மோட்டார் சைக்கிள் கொழுவியதால் நீண்ட தூரம் இழுத்துச் சென்று விபத்துக்குள்ளானது.

இந்நிலையில் மோட்டார் சைக்கிளை பேருந்து இழுத்துச் சென்று கொண்டிருந்தபோது மோட்டார் சைக்கிள் தீப்பற்றி எரிந்தது. இதில் மோட்டார் சைக்கிளில் சென்ற இளைஞன் உயிரிழந்தார். உயிரிழந்த இளைஞன் கடுக்காமுனை கொக்கட்டிச்சோலையைச் சேர்ந்த ரகுநாத் அமரநாத் என்ற 20 வயது பாடசாலை மாணவன்என அடையாளம்காணப்பட்டார்.

இந்நிலையில் சம்பவ இடத்திற்கு விரைந்த காத்தான்குடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மற்றும் தடயவியல் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டனர்.

பலியான மாணவனின் சடலம் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்ட நிலையில். காத்தான்குடி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். இதேவேளை அப்பகுதியில் திரண்ட பொதுமக்கள் பேருந்து மீது தாக்குதல் மேற்கொண்டதால் பதற்றம் ஏற்பட்டது. (இ-7)


## பகிரங்க ஏல அறிவித்தல்-2020

### கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி

கரைச்சி பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள சந்தைகள், இறைச்சிக்கடைகள் உள்ளிட்ட குத்தகை நிலையங்களை 2020.01.01- 2020.12.31 வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு விடுவதற்கான பகிரங்க ஏலம் கீழ் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாக நடைபெறும். குத்தகை நிலையங்களின் விபரங்களை அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் பார்வையிடமுடியும்.

பகிரங்க ஏலம் நடைபெறும் திகதி, நேரம் :- 2019.12.27 காலை 10.00 மணி

பகிரங்க ஏலம் நடைபெறும் இடம் :- கரைச்சி பிரதேச சபை, தலைமை அலுவலகம், கிளிநொச்சி.

நிபந்தனைகள்

1)பகிரங்க ஏலத்தில் பங்குபற்றுபவர்கள் 26.12.2019 ஆம் திகதி பி.ப 3.00 மணிக்கு முன்னர் ரூபா.500.00 செலுத்தி பற்றுச்சீட்டினை பெற்றுக்கொள்ள வேண்டும். பற்றுச்சீட்டினை பெற்றுக்கொண்டவர்கள் மாத்திரமே பகிரங்க ஏலத்தில் பங்குபற்ற முடியும்.

2)சித்தியடையும் ஏலகாரர் கேள்வி தொகையின் மூன்றில் ஒரு பகுதி தொகையினை அன்றைய தினமே உடனடியாக செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் செய்தல் வேண்டும். குறித்த கேள்விகாரர் ஒப்பந்தத்திற்கு அமைவாக குத்தகை நிலையத்தை நடாத்தினால் குறித்த வைப்பு தொகை புரட்டாதி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி மாதங்களின் குத்தகை ஒப்பந்தமாக மாற்றம் செய்யப்படும்.

3)2019.10.19 ஆம் திகதி பத்திரிகையில் வெளியிடப்பட்ட கேள்வி அறிவித்தல் நிபந்தனைகளும் கருத்திற்கொள்ளப்படும்.

(C-8617)

தவிசாளர், கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி.



## வட இலங்கைச் சங்கீத சபை யாழ்ப்பாணம்

### எழுத்துப் பரீட்சை / செய்முறைப் பரீட்சைகளுக்கான. விண்ணப்ப முடிவுத் திகதி நீடிப்பு - 2020

மேற்படி பரீட்சைக்கான விண்ணப்பப்படிவங்களை சபையில் இருந்து பெற்றுக் கொள்வதற்கான இறுதித் திகதி 15.01.2020 வரை நீடிக்கப்பட்டுள்ளதோடு அப்படிவங்களைப் பூர்த்தி செய்து மீள சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி 25.01.2020 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

குறித்த திகதிக்குப் பின்னர் கிடைக்கப் பெறுகின்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் என்பதை அறியத் தருகின்றேன்.

**செல்வரட்ணம் சந்திரராஜா**
**தலைவர் ,**
**வட இலங்கைச் சாங்கீத சபை -யாழ்ப்பாணம்.**
**யாழ்ப்பாணம் வலயக் கல்விப் பணிப்பாளர்.**

(C-8622)

# கனவுகளும் பலன்களும்

## கனவில் குழந்தைகள் வந்தால்

குழந்தையைக் கனவில் காண்பது நல்லது. தொழில் விருத்தியாகும் பொருள் வரவு அதிகரிக்கும். ஒன்றுக்கு மேற்பட்ட குழந்தைகள் விளையாடுவது போலவோ அல்லது சிரித்து மகிழ்வது போலவோ கனவு கண்டால் நல்ல பலன்கள் நடக்கும். வாழ்க்கையில் மகிழ்ச்சி ஏற்படும்.

ஆனால் குழந்தை இடறி விழுவது போலவோ அல்லது சண்டையிட்டுக் கொண்டு அழுவது போலவோ கனவு கண்டால் தொழிலில் பிரச்சினைகளும் சங்கடங்களும் ஏற்படும்.

பெண்கள் வளர்ந்த குழந்தைகளைக் கனவில் கண்டால் அது அதிர்ஷ்டத்தைக் குறிக்கும். உறங்கிக் கொண்டிருக்கும் குழந்தையை கனவில் பார்த்தால் எதிர்காலத்தில் நிம்மதியான வாழ்க்கை ஏற்படும்.

குழந்தையைத் தொட்டிலில் இட்டுத் தாலாட்டுவது போலக் கனவு கண்டால் குடும்ப வாழ்க்கையில் இன்பம் பெருகும். திருமணமாகாதவர் இது போலக் கனவு கண்டால் விரைவில் அவருக்கு விருப்பமானவருடன் திருமணம் நடக்கும்.

வெறும் தொட்டிலைக் கனவில் கண்டால் முக்கியமான காரியம் நடப்பதில் தடங்கல்கள் ஏற்படும்.

குழந்தையை முத்தமிடுவது போலக் கனவு கண்டால் விரைவில் புதிய வருவாய் ஏற்படும். குழந்தையைத் தத்து எடுத்துக் கொள்வது போலக் கனவு கண்டால் வாழ்க்கையில் மாற்றம் ஏற்படும்.

குழந்தையைப் பிரசவிப்பது போல ஒரு பெண் கனவு கண்டால் சுகமான வாழ்க்கை அமையும். குழந்தை இறந்து விட்டது போலக் கனவு கண்டால் கெட்ட பலன்கள் ஏற்படும். குழந்தையை எடுத்து வைத்திருப்பது போலவோ அல்லது அழுகின்ற குழந்தையைச் சமாதானப்படுத்துவது போலவோ கனவு கண்டால் கவலையைத் தரும் சம்பவங்கள் நடக்கும்.

வேறொருவர் குழந்தைக்குப் பாலூட்டுவது போலக் கனவு கண்டால் காதலில் துரதிர்ஷ்டவசமான சம்பவங்கள் நிகழும். திருமணமாகாத பெண் இதுபோலக் கனவு கண்டால் காதலனால் கைவிடப் படுவாள். தன்னுடைய குழந்தைக்குப் பாலூட்டுவது போலக் கனவு கண்டால் காதலில் துரதிர்ஷ்டவசமான சம்பவங்கள் நிகழும். திருமணமாகாத பெண் இதுபோலக் கனவு கண்டால் காதலனால் கைவி டப்படுவாள்.

தன்னுடைய குழந்தைக்குப் பாலூட்டுவது போலக் கனவு கண்டால் நல்ல அதிர்ஷ்டம் ஏற்படும். அழுக்கடைந்த கிழிந்து போன ஆடைகளை அணிந்த மெலிந்து போல குழந்தைகளைக் கனவில் கண்டால் புகழுக்குக் களங்கம் ஏற்படும்.

# டெங்கு ஒழிப்பு நடவடிக்கை





(கரணவாய்)

கரவெட்டி மத்தியில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் அண் மையில் முன்னெடுக்கப்பட்டன. கரவெட்டி சுகாதாரப் பகுதியினரும் கரவெட்டி மத்தி கிராம உத்தியோகத்தர், மகேசன் விளையாட்டு கழக இளைஞர்கள், கிராம மக்கள் ஆகியோர் டெங்கு ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர். (இ-60)

# நடமாடும் சேவை நாளை

(யாழ்ப்பாணம்)


யாழ்.மாநகரசபையின் வரியிறுப்பாளர்களின் நலன்கருதி ஆதனவரி நிலுவை அறவீடுகளை மேற்கொள்ளும் பொருட்டும், பெயர்மாற்றப் படிவம் வழங்கல், 2020 ஆம் ஆண்டிற்கான ஆதனவரி அறிவித்தல்களை (KForm) வழங்கல், தண்ணீர் வரி அறவீடு ஆகிய செயற்பாடுகள் நாளை 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணிவரை வட்டாரம் 22,23 க்கான நடமாடும் சேவை தட்டாதெருவிலுள்ள கலாஜோதி சனசமூக நிலையத்தில் நடைபெறும். (இ)

# சாரணர் "மாவட்டத் திரள் அணி-2019"



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்ட சாரணர் சங்கத்தினரின் ஒழுங்கமைப்பில் "மாவட்டத் திரள் அணி 2019" கடந்த 17,18,19 ஆம் திகதிகளில் வேலணை மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.



யாழ்ப்பாண மாவட்ட சாரணர் சங்கத்தின் ஆணையாளர் இ.தவகோபால் தலைமையில் நடைபெற்ற குறித்த பாசறை நிகழ்வில் பன்னிரண்டுக்கும் மேற்பட்ட கல்லூரிகளின் இருநூறுக்கும் மேற்பட்ட சாரண மாணவர்கள் கலந்து கொண்டனர். குறித்த பாசறை நிகழ்வில் பல பயிற்சி செயற்பட்டறைகள், மற்றும் போட்டிகள் வளவாளர்களால் நடத்தப்பட்டன.

பல்வேறு போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றியீட்டிய சாரண மாணவ ர்களுக்கான வெற்றிக் கேடயங் களும், வெற்றிச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. (இ-18)

# ஒளிவிழா

(யாழ்ப்பாணம்)

கலட்டி ஐக்கிய சனசமூக நிலையத்தால் நடத்தப்படும் ஒளி விழா நிகழ்வு நாளை மறுதினம் 25 ஆம் திகதி புதன்கிழமை இரவு 7 மணியளவில் ஜெயச்சந்திரன் கலையரங்கில் கணேசன் திருமாலழகன் தலைமையில் நடைபெறும். இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக நெல்லியடி மெதடிஸ்த திருச்சபை போதகர் ஜோய் பாலசுப்பிரமணியம் கலந்து கொள்வார். (இ-2)

## இராசி பலன்

23.12.2019

மார்கழி 07,திங்கட்கிழமை

சூரிய உதயம் காலை 6.23 மணிக்கு

துவாதசி பிற்பகல் 2.12 மணிவரை

விசாகம் முன்னிரவு 6.29 மணிவரை

சுபநேரம் 12.25-1.25 மணிவரை

இராகுகாலம் 7.55-9.25 மணிவரை

பிரதோச விரதம்

வளவன்

கிரகநிலை: ராகு; சுக்; சனி,சூரி புத, குரு,கேது; செவ், சந்

சந்திராஷ்டமம்: மகம்

**மேடம்** காலையில் கலகலப்பும் மாலையில் சலசலப்புமாக அமையும், இறை வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**இடபம்** அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், ஆடம்பரப் பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள், மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.

**மிதுனம்** ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் இருந்த குழப்பங்கள் தீரும், வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், வம்பு வழக்குகளை சமாளித்து வளம் காண்பீர்கள்.

**கடகம்** தொழிலில் புதிய பொறுப்புக்கள் வந்து சேரலாம், உடல்நலன் சீராகும், மனதிற்கினிய சம்பவங்கள் இடம் பெறலாம், எதிர்கால நலனில் அக்கறை காட்டுவீர்கள்.

**சிம்மம்** அடிப்படை வசதி வாய்ப்புக்களை பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், சிந்தித்து செயற்பட்டு சிறப்புக்களைக் காண வேண்டிய நாள், பயணங்களால் பலனுண்டு.

**கன்னி** எடுத்த காரியத்தை எளிதில் செய்து முடிப்பீர்கள், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும், உறவினர்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும்.

**துலாம்** பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரலாம், உங்கள் பொறுமைக்கு இன்று பரிசு கிடைக்கும், புதிய பொறுப்புக்கள் வந்து சேரலாம்.

**விருச்சிகம்** வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும் நாள், வழிபாடு குதூகலம் தரும், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**தனுசு** இடமாற்றம், ஊர்மாற்றம் என்பன இடம்பெறலாம், வழிபாடு குதூகலம் தரும், பக்குவமாகப் பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள், எடுத்த காரியத்தில் திருப்பங்கள் ஏற்படலாம்.

**மகரம்** பெரிய மனிதர்களின் சந்திப்புக்கள் உங்களின் தகுதியை உயர்த்தும், தனவரவு திருப்திகரமாக அமையும், மனதிற்கினிய சம்பவங்கள் இடம் பெறலாம், தேவைகள் பூர்த்தியாகும்.

**கும்பம்** நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும், நீண்ட நாளைய விருப்பம் ஒன்று நிறைவேறலாம், பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மீனம்** தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், வரவேண்டிய பாக்கிகள் வந்து சேரலாம், அன்பால் சாதித்துக் காட்டும் நாள்.

# Trade Finance (Investments PLC) YAMAHA உடன்

## இணைந்து வழங்கும் நத்தார் மற்றும் புத்தாண்டுப் பரிசு மழை.

சிறப்பு விலைத் தள்ளுபடி
15,000/= முதல்
125,000/= வரை

இடம்: நல்லூர் றியோ ஐஸ்கிறீம் முன்பாக
காலம்: 20ஆம் திகதி தொடக்கம்
24 ஆம் திகதி வரை மட்டும்

Fascino Scooter
ஒன்றை கொள்வனவு செய்து



20000/=
பெறுமதியான
Oppo AIK
2 Gb Ram 32 Gb
Memory ஒன்றை
இலவசமாக பெற்றுக் கொள்ளுங்கள்

Fz-SV.3
ஒன்றை கொள்வனவு செய்து



25,000/=
பெறுமதியான
Oppo A5S
(Finger Print)
ஒன்றை
இலவசமாக பெற்றுக் கொள்ளுங்கள்

நிபந்தனைக்குட்பட்டது.
தெரிவு செய்யப்பட்ட மாதிரிகளுக்கு மட்டுமே...

இச் சலுகை டிஜிட்டல் எலக்ரோனிக்ஸ் இடம் இருந்து மட்டுமே.
உடன் பதிவுக்கு: 077 554 5843/077 662 3824
காட்சியறை: 62/16, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(C-8625)

# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1977இந்து
நட்சத்திரம்: விசாகம் 1செவ் 2 இல்
தகைமை/தொழில்:A/L,கட்டட மேற்பார்வையாளர்
எதிர்பார்ப்பு:படித்தபெண்(உள்நாடு, வெளிநாடு)
தொ.இ: B/10315

பிறப்பு: 1978 இந்து
நட்சத்திரம்: உத்தரட்டாதி 3
கி.பா: செவ் 1 இல்
உயரம்:5'6''
தகைமை/தொழில்:Doctor
எதிர்பார்ப்பு:பட்டதாரி, சைவபோசனம் (உள்நாடு, வெளிநாடு)
தொ.இ: B/10317

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: பரணி 3
கி.பா: 34
உயரம்: 5'2''
தகைமை/தொழில்: O/L, CANADA
எதிர்பார்ப்பு: உள்நாடு, வெளிநாடு
தொ.இ: B/10319

பிறப்பு: 1975 கிறிஸ்தவம்
உயரம்:5'11''
தகைமை/தொழில்: A/L, கணனி நிறுவன உரிமையாளர்,விரிவுரையாளர்
எதிர்பார்ப்பு:படித்ததொழில் புரிபவர்(உள்நாடு)
தொ.இ: B/10320

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: மூலம் 2
கி.பா: 50 செவ் 2 இல்
தகைமை/தொழில்:M.Scஆசிரியர்
எதிர்பார்ப்பு:பட்டதாரி (உள்நாடு, வெளிநாடு)
தொ.இ: G/10327

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: கேட்டை 3
கி.பா: 37 ¾ செவ் 8 இல்
உயரம்: 5'4''
தகைமை/தொழில்:Business Management, முகாமைத்துவ உதவியாளர்
எதிர்பார்ப்பு:பட்டதாரி, அரசஉத்தியோகம்
தொ.இ: G/10328

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: ரோகிணி 3 செவ் 1 இல்
உயரம்:5'7''
தகைமை/தொழில்:A/L, BA following, நூலகர்
எதிர்பார்ப்பு:அரச,தனியார் சொந்ததொழில். விவாகரத்து ஏற்கப்படும் (உள்நாடு, வெளிநாடு)
தொ.இ: G/10329

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: ரேவதி
கி.பா: 17 ½
உயரம்:158cm
தகைமை/தொழில்: B.Scபட்டதாரி, அபிவிருத்தி உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு: வெளிநாடு
தொ.இ: G/10330

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# சாவகச்சேரி நகராட்சி மன்றம் ஆதனப் பெயர் மாற்றம்

சாவகச்சேரி நகராட்சி மன்றத்திற்குட்பட்ட வட்டாரம் - 09, கண்டி வீதி, 361,361A என்னும் வரிமதிப்பீட்டு இலக்கங்களைக் கொண்ட ஆதனம் T.சிவானந்தம் என்னும் பெயரில் ஆதனவரிப்பதிவேட்டில் காணப் படுகிறது. விண்ணப்பதாரியால் சமர்ப்பிக்கப்பட்ட ஆரம்ப உறுதியின் பிரகாரம் குறித்த ஆதனத்தினை சாவகச்சேரி தெற்கு வல்லிபுரம் தாமோதரம்பிள்ளையும் பெண் இலட்சுமிப்பிள்ளையும் பிரசித்த நொத்தாரிசு இராமலிங்கம் டானியல் சிவகுரு முகதாவில் 18.06.1958 ஆம் திகதியிடப்பட்ட 860ஆம் இலக்கத்தில் நிறைவேறிய உறுதிமூலம் தாமோதரம்பிள்ளை சிவானந்தம் என்பவருக்கு நன்கொடையாக வழங்கியுள்ளார்.

பின்னர் மோகன் சிவானந்தன், முரளி சிவானந்தன் ஆகியோர் 12.07.2010ஆம் திகதிய S.இராமலிங்கம் பிரசித்த நொத்தாரிசு அவர்களது அற்றோனித்தத்துவத்தின் பிரகாரம் இல. 29-4/2, லில்லி அவனியு, வெள்ளவத்தை, கொழும்பு 06 என்னும் முகவரியைக்கொண்ட நீதா சதாசிவம் மூலம் பிரசித்த நொத்தாரிசு S.இராமலிங்கம் முகதாவில் 11.10.2010 ஆம் திகதியிடப்பட்ட 565ஆம் இலக்க வெளிப்படுத்தல் உறுதி மூலம் தந்தை இறந்த பின்னர் தாம் இருவரும்தான் இவ் ஆதனங்களின் உரித்தாளர்களெனவும் வேறு உரித்தாளர்கள் இல்லையெனவும் வெளிப்படுத்தி "காக்கையன் வளவும் கரடிக்குளியும்" நிலப்பரப்பு (2) இரண்டும் "நினைவன் வளவும் பறையன் வளவும் தோப்பு வளவும்" நிலப்பரப்பு (4) நான்குமாக இரு ஆதனங்களையும் தமக்குள் இருசம பங்காக பிரிவிட்டுள்ளனர்.

பின்னர் மோகன் சிவானந்தன், முரளி சிவானந்தன் ஆகியோர் 12.07.2010ஆம் திகதிய பிரசித்த நொத்தாரிசு S.இராமலிங்கம் அவர்களது அற்றோனித்தத்துவத்தின் பிரகாரம் இல.29-4/2, லில்லி அவனியு, வெள்ளவத்தை, கொழும்பு 06 என்னும் முகவரியைக்கொண்ட நீதா சதாசிவம் மூலம் பிரசித்த நொத்தாரிசு S.இராமலிங்கம் முகதாவில் 09.03.2012 ஆம் திகதியிடப்பட்ட 761ஆம் இலக்க காணிமாற்று உறுதி மூலம்"காக்கையன் வளவும் கரடிக்குளியும்" நிலப்பரப்பு (2) இரண்டை மோகன் சிவானந்தனும் "நினைவன் வளவும் பறையன் வளவும் தோப்பு வளவும்" நிலப்பரப்பு (4) நான்கை முரளி சிவானந்தனும் ஒருவருக்கொருவர் காணி மாற்றம் செய்துள்ளனர்.

பின்னர் நோர்வேயை வசிப்பிடமாகக்கொண்ட மோகன் சிவானந்தன் 11.07.2019ஆம் திகதி பதிவு செய்யப்பட்ட பிரசித்த நொத்தாரிசு K.குலசிங்கம் அவர்களது அற்றோனித்தத்துவத்தின் பிரகாரம் இல.29-4/2, லில்லி அவனியு, வெள்ளவத்தை, கொழும்பு 06 என்னும் முகவரியைக்கொண்ட நீதா சதாசிவம் மூலம் பிரசித்த நொத்தாரிசு பவித்திரா ராகவன் முகதாவில் 08.08.2019ஆம் திகதியிடப்பட்ட 35ஆம் இலக்கஅறுதி உறுதி மூலம் நடேசன் குகதாசனுக்கும் மனைவி அனுஷா குகதாசனுக்கும் அறுதியாக வழங்கியுள்ளார்.

**ஆதன விபரம்**

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் தென்மராட்சிப்பகுதி சாவகச்சேரி, கோவிற்பற்று, சாவகச்சேரி இறை "காக்கையன் வளவும் கரடிக்குளியும்" நிலப்பரப்பு (2) இரண்டு. இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் வ.சிவராசா 05.08.2019 ஆம் திகதியில் அளந்து வரைந்த 7083 ஆம் இலக்கப்படத்தின்படி துண்டு 1 எனச்சுட்டப்பட்ட பாகம் நிலப்பரப்பு ஒன்று(1) குளி பூச்சியம் ஐந்து தசம் ஐந்து ஐந்தும்(05.55) இதற்குள்ளிருக்கும் கட்டடமும் இதைச் சேர்ந்தவைகளும் இதற்கு எல்லை

**கிழக்கு: றோட்டு**
**வடக்கு: வல்லிபுரம் தாமோதரம்பிள்ளைக்கும் பெண் இலட்சுமிப்பிள்ளைக்கும் உரிய ஆதனம்**
**மேற்கு: சண்முகம் கைம்பெண் தங்கத்துக்குரிய ஆதனம்**
**தெற்கு: சண்முகம் கைம்பெண் தங்கத்துக்குரிய ஆதனமும் றோட்டும்**

தற்போது நடேசன் குகதாசனும் மனைவி அனுஷா குகதாசனும் இவ்வாதனத்தை தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளனர். எனவே இவ்வாதனம் தொடர்பாக ஏதாவது ஆட்சேபனை தெரிவிக்க இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த நாளிலிருந்து 30 நாட்களுக்குள் நேரடியாகவோ தபாலிலோ சட்டபூர்வ ஆவணங்களுடன் எழுத்து மூலம் தெரிவிக்கமுடியும். வெளிநாடுகளில் வசிப்பவர்களானால் இங்குள்ள உறவினர்களூடாக தெரிவிக்கலாம். ஆட்சேபனை எதுவும் தெரிவிக்காத பட்சத்தில் மேற்குறித்த ஆதனத்திற்கான உரிமையாளரது பெயருக்குப் பதிலாக விண்ணப்பதாரரின் பெயரை உட்புகுத்த நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வுட்புகுத்தல் தொடர்பாக ஏற்படும் எவ்வித பிரச்சினைகளுக்கும் நகராட்சிமன்றம் பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தவிசாளர்
நகராட்சி மன்றம், சாவகச்சேரி.

(C-8618)

# சாவகச்சேரி நகராட்சி மன்றம் ஆதனப் பெயர் மாற்றம்

சாவகச்சேரி நகராட்சி மன்றத்திற்குட்பட்ட வட்டாரம் - 09, தேவாலய ஒழுங்கை, 33/1 என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் நல்லப்பா பாக்கியம் என்னும் பெயரில் ஆதனவரிப் பதிவேட்டில் காணப்படுகிறது. விண்ணப்பதாரியால் சமர்ப்பிக்கப்பட்ட ஆரம்ப உறுதியின் பிரகாரம் குறித்த ஆதனத்தினை சாவகச்சேரி தெற்கு ஐயன் கணபதியும் பெண் தெய்வியும் நாகன் அப்பாக்குட்டியும் பிரசித்த நொத்தாரிசு சிவகுரு சிவராசா முகதாவில் 14.09.1956 ஆம் திகதியிடப்பட்ட 1924ஆம் இலக்கத்தில் நிறைவேறிய உறுதி மூலம் நல்லப்பு பெண் பாக்கியத்திற்கு சீதனமாக வழங்கியுள்ளனர்.

பின்னர் தேவாலய வீதி, சாவகச்சேரியைச் சேர்ந்த தர்மலிங்கம் பெண் தெய்வீகராணி பிரசித்த நொத்தாரிசு தம்பையா வேலாயுதம் முகதாவில் 07.10.2001 ஆம் திகதியிடப்பட்ட 2133ஆம் இலக்கத்தில் நிறைவேறிய உருத்துவிளம்பல் உறுதி மூலம்நல்லப்புவும் பெண் பாக்கியமும் பிரசித்த நொத்தாரிசு எஸ். சுரேந்திரன் முகதாவில் 15.12.1979 ஆம் திகதியிடப்பட்ட 45ஆம் இலக்கத்தில் நிறைவேறிய ஒற்றி உறுதி மூலம் டச்சு வீதி, சாவகச்சேரியைச் சேர்ந்த தைப் ஜஸ்மினாவுக்கு ஒற்றி ஈடாகக் கொடுத்து ஆண்டனுபவித்து வந்துள்ளபடியாலும் நல்லப்புவுக்கும் பெண் பாக்கியத்துக்கும் தானே ஏகவாரிசாக இருக்கின்றபடியாலும் இவ்வாதனத்தையும் வீடு வளவையும் ஆண்டனுபவித்து தனக்கே விட்டிறந்தபடியாலும் இவ்வாதனத்தின் உருத்தாளரும் சொந்தக்காரரும் தானே என்று வெளிப்படுத்தியுள்ளார்.

பின்னர் சாவகச்சேரியைச்சேர்ந்த தர்மலிங்கம் கைம்பெண் தெய்வீகராணி பிரசித்த நொத்தாரிசு காயத்திரி குமாரதேவன் முகதாவில் 07.05.2019 ஆம் திகதியிடப்பட்ட 1179ஆம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் இல. 34/3C Ellie house வீதி, கொழும்பு-15 ஐச்சேர்ந்த றெங்கநாதன் மகள் திவாணிக்கு அறுதியாக விற்றுள்ளார்.

பின்னர் தர்மலிங்கம் கைம்பெண் தெய்வீகராணியும் றெங்கநாதன் மகள் திலானியும் பிரசித்த நொத்தாரிசு காயத்திரி குமாரதேவன் முகதாவில் 30.08.2019 ஆம் திகதியிடப்பட்ட 1259ஆம் இலக்கத்தில் நிறைவேறிய திருத்தல் உறுதி மூலம் குறித்த 1179ஆம் இலக்க உறுதியில் அறுதி வாங்குபவரின்பெயர் றெங்கநாதன் மகள் திலானி என்பதற்குப் பதிலாக றெங்கநாதன் திவாணி என குறிப்பிடப்பட்டமையாலும் றெங்கநாதன் மகள் திலானி என்றே குறிப்பிடப்பட வேண்டும் என வெளிப்படுத்தியுள்ளார்கள்.

**ஆதன விபரம்**

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் தென்மராட்சிப்பகுதி சாவகச்சேரி கோவிற்பற்று சாவகச்சேரி இறை "நம்பியார் வளவு" நிலப்பரப்பு (3)மூன்று. ஆனால் தற்போது இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் மு.ஆறுமுகம் அவர்கள் 04.05.2019 ஆம் திகதியில் அளந்து வரைந்த 5530 ஆம் இலக்கப்படத்தின்படி துண்டு 1 எனச்சுட்டப்பட்ட பாகம் நிலப்பரப்பு இரண்டு(2) குளி பதினைந்து தசம் நான்கு இரண்டு(15.42). இதற்கு எல்லை.

**கிழக்கும் வடக்கும்: ஒழுங்கை**
**மேற்கு: சின்னப்பு நாகேந்திரத்தின் ஆதனம்**
**தெற்கு: அரியநாயகம் பெண் தோமஸ்சின் ஆதனம்**

இதடங்கலும் இன்னும் வடக்கொழுங்கைக்கு அருகாமையில் இருக்கும் கிணற்றில் இதற்குரிய தண்ணீர்ப்பங்கும் வழிவாய்க்கால் பாவித்துரித்தும்.

தற்போது றெங்கநாதன் மகள் திலானி இவ்வாதனத்தை தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனம் தொடர்பாக ஏதாவது ஆட்சேபனை தெரிவிக்க இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த நாளிலிருந்து 30 நாட்களுக்குள் நேரடியாகவோ தபாலிலோ சட்டபூர்வ ஆவணங்களுடன் எழுத்து மூலம் தெரிவிக்கமுடியும். வெளிநாடுகளில் வசிப்பவர்களானால் இங்குள்ள உறவினர்களூடாக தெரிவிக்கலாம். ஆட்சேபனை எதுவும் தெரிவிக்காத பட்சத்தில் மேற்குறித்த ஆதனத்திற்கான உரிமையாளரது பெயருக்குப் பதிலாக விண்ணப்பதாரரின் பெயரை உட்புகுத்த நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வுட்புகுத்தல் தொடர்பாக ஏற்படும் எவ்வித பிரச்சினைகளுக்கும் நகராட்சிமன்றம் பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.


தவிசாளர்
நகராட்சிமன்றம், சாவகச்சேரி.

(C-8619)

# அம்பாந்தோட்டை துறைமுக உடன்பாடு

# ஒருபோதும் மீளாய்வு செய்யப்படாது

## ஜனாதிபதி கோட்டாபய உறுதி



(கொழும்பு)

**அம்பாந்தோட்டை துறைமுக உடன்பாட்டை ஒரு போதும் மாற்றியமைக்க தாம் விரும்பவில்லை என்றும் ஆனால் துறைமுகத்தின் பாதுகாப்புக் கட்டமைப்பை மாற்ற வேண்டியிருக்கலாம் என்றும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.**

கொழும்பில் வெளிநாட்டுச் செய்தியாளர்களுடன் நேற்று முன்தினம் நடத்திய சந்திப்பின் போதே அவர் இந்த தகவலை வெளியிட்டார்.

அம்பாந்தோட்டை துறைமுகம் குறித்த 99 ஆண்டு குத்தகை உடன்பாட்டை மாற்ற விரும்புகிறீர்களா? என்று எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த ஜனாதிபதி "அதை மாற்ற முயற்சிக்கவில்லை, ஏனெனில் இது முன்னைய அரசாங்கம் செய்து கொண்ட வணிக உடன்பாடு.

முன்னைய அரசாங்கம் இந்த உடன்பாடு குறித்து பேச்சு நடத்தியபோது, பொதுஜன பெரமுன கடும் எதிர்ப்புத் தெரிவித்தது.

இது மீள் பேச்சுவார்த்தை அல்ல, இது ஒரு வணிக உடன்பாடு என்பதால், அதன் வணிக அம்சங்களைப் பற்றி நான் கவலைப்படவில்லை.

பாதுகாப்பு குறைபாடுகள் குறித்து நான் கவலைப்படுகிறேன், அது குறித்தே நாங்கள் அவர்களுடன் பேசவுள்ளோம்.

துறைமுகத்தின் கட்டுப்பாட்டு பொறிமுறை குறித்து ஆராய்கிறோம். ஏனைய துறைமுகங்களைப் போலவே, அம்பாந் தோட்டை துறைமுகத்தின் கட்டுப்பாட்டையும் அரசாங்கமே வைத்திருக்க வேண்டும்.

குறிப்பாக எல்லைக் கட்டுப்பாடு மற்றும் பாதுகாப்பு ஆகிய விடயங்கள், அரசாங்கத்திடம் தான் இருக்க வேண்டும்.

கொழும்பு துறைமுகத்தைப் போல, எந்தக் கப்பல்கள் வரும் அல்லது செல்ல வேண்டும் என்பதை அரசாங்கமே தீர்மானிக்க வேண்டும். அந்த அதிகாரம் எங்களிடம் தான் இருக்க வேண்டும்.

சீனப் பிரதிநிதிகளுடன் பாதுகாப்பு அம்சங்கள் குறித்து விவாதித்தேன். துறைமுகத்தின் பாதுகாப்பு, அரசிடம் வழங்கப்பட வேண்டும் என்பதற்கு அவர்கள் உடன்பட்டுள்ளனர்.

கொழும்பு துறைமுகத்திற்கு ஒரு கப்பல் வரும்போது, பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் உள்ளன. இதே நடைமுறை, காங்கேசன்துறை, திருகோணமலை அல்லது அம்பாந்தோட்டையிலும் பின்பற்றப்பட வேண்டும்.

நான் பதவியேற்ற பின்னர், என்னைச் சந்தித்த சீன சிறப்பு பிரதிநிதியுடன் இந்த விடயம் பற்றி கலந்துரையாடினேன்.

அம்பாந்தோட்டை துறைமுகத்தின் பாதுகாப்பு மற்றும் துறைமுக கட்டுப்பாடு தொடர்பான விடயங்களில் திருத்தம் செய்வதற்கு அவர் இணங்கினார்.

ஒரு அரசாங்கத்துடன் கையெழுத்திடப்பட்ட வணிக உடன்பாடுகள், அடுத்த அரசாங்கத்தால் மதிக்கப்படுவதில்லை, அதனை மாற்றி விடும் என்ற எண்ணத்தை முதலீட்டாளர்களிடம் ஏற்படுவதற்கு நான் விரும்பவில்லை. அது பிரச்சினையல்ல.

துறைமுகத்தை ஒரு முக்கிய மூலோபாய பொருளாதார மையமாகும். இது ஒரு இறையாண்மை கொண்ட அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டிய ஒரு சொத்து. உலகளாவிய அதிகாரப் போட்டிகளின் ஒரு பகுதியாக மாற நாங்கள் விரும்பவில்லை.

உடன்பாடுகளை ஆய்வு செய்ய ஒரு குழுவை நியமித்துள்ளோம். அதன் கண்டறிவுகளின் அடிப்படையில், துறைமுகத்தின் பாதுகாப்பு மற்றும் கட்டுப்பாட்டு பொறிமுறையை மறுசீரமைக்க முயலக்கூடும்" என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## ஜனாதிபதியின் நிலைப்பாட்டை வரவேற்று பாராட்டிய சீனா

(கொழும்பு)

அம்பாந்தோட்டை துறைமுகம் தொடர்பான வணிக உடன்பாடு குறித்து மீளாய்வு செய்யப் போவதில்லை என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வெளியிட்ட கருத்தை, சீனா வரவேற்றது.

கொழும்பிலுள்ள சீனத் தூதரகம் வெளியிட்ட அறிக்கையில்,

"ஜனாதிபதி கோட்டாபயவின் இந்தக் கருத்துக்களை சீனத் தூதரகம் மிகவும் பாராட்டுகிறது.

சீனா, உடன்பாட்டை விரைவாக நடைமுறைப்படுத்துவதற்கும் அம்பாந்தோட்டை துறைமுகத்தின் செழிப்பு மற்றும் வளர்ச்சியை மேலும் மேம்படுத்துவதற்கும் இலங்கைத் தரப்புடன் இணைந்து செயற்பட பொருத்தமான நிறுவனங்களுக்கு வழிகாட்டத் தயாராக உள்ளது.

இலங்கையின் இறையாண்மையையும் பிராந்திய ஒருமைப்பாட்டையும் மிகவும் சீனா மதிக்கிறது என்பதை மீண்டும் வலியுறுத்துகிறது.

அம்பாந்தோட்டை துறைமுகத்தின் பாதுகாப்பும் கட்டுப்பாடும் முற்றிலும் இலங்கை அரசாங்கம் மற்றும் இலங்கைக் கடற்படையின் கட்டுப்பாட்டில் தான் உள்ளது. இது இலங்கையின் ஏனைய பிற துறைமுகங்களிலிருந்து வேறுபடவில்லை" என்றும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-7)

## கர்நாடக சங்கீதப் போட்டியில் மாணவர்கள் இருவர் முதலாமிடம்



(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை ரீதியில் பாடசாலைகளுக்கு இடையில் அண்மையில் கண்டியில் நடைபெற்ற கர்நாடக சங்கீதப் போட்டியில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மாணவர்கள் இருவர் முதலாமிடம் பெற்றுள்ளனர்.

ஆண்களுக்கான தனியிசை கனிஷ்ட பிரிவுப் போட்டியில் ஜோ.கிஷாந்த், சிரேஷ்ட பிரிவில் ம.சனோஜிகன்ஆகியோர் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளனர்.(இ-7)

## உப்பாறு கடல் நீரேரியில் பாரிய முதலை

(கிண்ணியா)

கிண்ணியா உப்பாறு கடற்கரைப் பகுதியில் முதலை ஒன்றும் டொல்பின் ஒன்றும் உயிரிழந்த நிலையில் நேற்று முன்தினம் காலை மீட்கப்பட்டதாக கிண்ணியா பொலிஸார் தெரிவித்தனர் . 17 அடி நீளமுடைய முதலையும் , 06 அடி நீளமுடைய டொல்பினும் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.(இ-7)



## தனி இசையில் மாணவி முதலிடம்

(கண்டி)

அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட கர்நாடக சங்கீத தனி இசைப் போட்டிகள் கண்டி சுவர்ணமாலி மகளிர் கல்லூரியில் அண்மையில் நடைபெற்றது.

இதில் கர்நாடக சங்கீத தனி இசைப் போட்டியில் யா/நெல்லியடி மெதடிஸ்த மிசன் தமிழ்க் கலவன் பாடசாலையைப் பிரதிநிதித்துவம் செய்த கங்காதரன் வர்ஷா முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார். (இ-7)



## மத்தியஸ்தர் சபை அமர்வு நடைபெறாது

(யாழ்ப்பாணம்)

யாழ். நாவாந்துறை றோ.க. த.க. பாடசாலையில் இயங்கி வரும் யாழ்ப்பாணம் மத்தியஸ்தர் சபை அமர்வானது எதிர்வரும் 29 ஆம் திகதி நடைபெறாது.

அவ் அமர்வு 05.01.2020 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முதல் வழமை போல் நடைபெறும் என தவிசாளர் அறிவித்துள்ளார். (இ-2)

தர்மத்தின் குரலாய் ஒலிக்கும்
வலம்புரி 20 ஆவது ஆண்டு நிறைவு மலர்

## வலம்புரி நாளிதழே ! வளமுடனே வாழியவே!!



வாசகர்களின் அபிமானப் பத்திரிகையான தமிழ் வளர்க்கும் நாளிதழ் வலம்புரிக்கு இன்று வயது 20. இப்பொழுது நாட்டில் நிலவும் பல்வேறு சம்பங்களையும் அரசு சம்பந்தமான விடயங்களையும் சுடச் சுடத் தருவதில் வலம்புரிக்கு நிகர் வலம்புரியே!

இன்றைய காலகட்டத்தின் அத்தியாவசியத் தேவைகளை அறிந்து அவ்வப்போது அவற்றை நடைமுறைப்படுத்த ஆவன செய்யும் வழிமுறைகளை முறையாகத் தரும் உண்மையான உயர்ந்த நல்ல பத்திரிகை வலம்புரி எனில் மிகையாகாது.

அழகாக அச்சாகி தெளிவாகத் தெரியும் படி நல்ல முறையில் வெளிவரும் வலம்புரி நாளிதழின் அளப்பரிய சேவை போற்றுதற்குரியது.

இப்பொழுது வெளிவருவது போலவே இனிமேலும் தொடர்ந்து வெளிவர வேண்டுமென்று ஆசிகள் நல்கி வண்ணை வேங்கடேசப் பெருமாளின் அருள் வேண்டிப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றோம்.

ஈழமணித் திருநாட்டின் அபிவிருத்தி மிகுந்த வளர்ச்சிப் பாதையிலே நல்லபடி பங்கேற்று முன்னேற்றங்காண தம்மாலான வழிவகைகளைக் காட்டி நிற்கும் வலம்புரி பத்திரிகையானது நீடு வாழ வேண்டுமென்று வாழ்த்தி மகிழ்கின்றோம்.

வலம்புரி நாளிதழ் வளமுடனே வாழ்க! வாழ்க...!!

**கலைமாமணி கலைக்குரிசில்**
**கலாபூஷணம் இராசையா ஸ்ரீதரன்**
**(ஆன்மீக எழுத்தாளரும் நல்லை ஆதீன சமயப் பிரசாரகரும்)**

## வலம்புரியின் ஆன்மீகப் பணி தொடரட்டும்!

இருபதாவது ஆண்டை நிறைவு செய்துள்ள வலம்புரி தினமும் பல செய்திகளை தாமதமின்றித் தருவதுடன் வாசகர்களை ஆன்மீக வழிக்கும் அழைத்துச் செல்கிறது.

நாள்தோறும் வலம்புரியில் பிரசுரமாகும் நற்சிந்தனைகள்,வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள், இன்று ஒரு தகவல் ஆகியன வாசகர்களை ஆன்மீகம் பற்றியே சிந்திக்க வைக்கின்றன.

வலம்புரியின் ஆசிரியர் தலையங்கங்கள் கூட மகாபாரதம், இராமாயணம் போன்ற கதைகளிலிருந்தே உதாரணங்களை எடுத்தியம்பி தர்மத்தின் வழியையே வாசகர்களுக்கு உணர்த்துகிறது.

இவ்வாறே வலம்புரியின் வாரமலரான சங்குநாதத்தில் பிரசுரிக்கப்படும் கட்டுரைகள், கதைகள், கவிதைகள் ஆகியனவையும் வாசகர்களுக்கு ஆன்மீகச் சிந்தனையை வளர்ப்பதாகவே உள்ளன.

இதையெல்லாம் பார்க்கும் போது சண்டை சச்சரவில்லாத ஒரு சமாதானமான சமூகத்தை உருவாக்குவதே வலம்புரியின் நோக்கமாகும்.

இப்பணி இருபத்தோராவது ஆண்டிலும் சிறப்புற எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**கலாபூஷணம்**
**சி.காசிப்பிள்ளை**
**கொடிகாமம்.**

## மௌலவியின் ஆசி உரை



தமிழ் மண்ணில் தளைத்து யாழ் மண்ணைத்திளைக்க வைத்த நாளிதழாம் வலம்புரியும் வலம்வந்து திறம்கொண்டு தொடர்ந்திட்ட நாட்கள் பலவாகி, வருடங்களாகி இன்று அகவை இருபதில் கால் பதித்துள்ளது காலத்தால் மறக்கப்படாத சந்தோஷமான முயற்சி!

காரணம் சுடச் சுடச் செய்திகளை வழங்குவதிலும் உண்மை நிலைமையை பேணுவதிலும் தர்மத்துக்கு தலை வணங்கி நடு நிலைமை கொள்வதிலும் முன்னிலை வகித்து பொறுப்புடனும் பொறுமையுடனும் வளர்ந்திட்டதன் உயர்ச்சியே என்றால் அது மிகையாகாது.

நிச்சயமாக என்றும் மனிதனுக்கு தேவையான அன்றாட வாழ்வின் கோணங்களையும் கொள்கைகளையும் திக்குகளையும் திருப்பங்களைய்யும் சுடச்சுட தந்து வலம் வரும் இவ் வலம்புரிச் சுடர்விட்டு பிரகாசிப்புதன் சூட்சுமமும் இதுவே என்பது வெள்ளிடைமலை. ஆதலால் இந்நாளிதழ் தரம் பத்தரை மாற்று தங்கமாக அழகான தமிழில் எளிய நடையில் மனித சமுதாயத்தின் உண்மையை உணர வைப்பதற்காய் கருக்கொடுத்து உருக்கொடுப்பது பாராட்டப்பட வேண்டிய இவ்வேளையில் இந்நாளிதழ் இன்னும் ஓங்கி வளர்ந்து உயர்வுபெற என் வாழ்த்துக்களையும் ஆசியையும் தெரிவித்து பல்லாண்டு காலம் பல பேர் போற்ற வளமுடன் வாழ வாழ்த்துகிறேன்.

இந்நாளிதழின் வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்குமாக அயராது உழைக்கும் ஆசிரியர்குழாம் அனைவருக்கும் ஆலோசகர்கள், அலுவலர்கள் அனை வருக்கும் அவர் தம் குடும்பத்தினருக்கும் வள்ள அல்லாஹ் நல் அருள் ஈலிப்பானாக என்று பிரார்த் தித்து வலம்புரி எனும் சங்குநாதம் பற்பல உள்ள ங்களை வென்று எண்ணிலடங்கா இல்லத்தை நிறைத்து அவர் தம் எண்ணங்களை கவர்ந்து வாழ் வாங்கு வாழ மீண்டும் என் ஆசி கூறி விடை பெறு கின்றேன்.

**வஸ்ஸலாம் -வரஹ்மதுல்லாஹி வபரஹாதுஹு**
**அல்ஹாஜ் மௌலவி ஏ.எம்.ஏ. அஸீஸ் (ஹாஸிமி)**
**யாழ். கிளி. மாவட்ட உலமா சபை.**

## "வலம்புரி" வாழ்க வளமுடன்



செய்திகளை நடுவுநிலை தவறாது மக்கள் மத்தியில் சேர்ப்பதில் வலம்புரி தனித்துவமானது மட்டுமல்லாது கடந்த கால எதிர்கால நடப்புகளோடு ஆசிரியர் தலையங்கம், நேரில் நடப்பது போன்ற ஆலடி மகாநாடு, சிந்தனைக்குரிய சிறுவர் பகுதியோடு இன்று ஓர் தகவல், மருத்துக் குறிப்புகள், ஆன்மீக கட்டுரைகள், தாங்கி நிறைந்த ஓர் நாளேடாக வெளிவருகின்ற வலம்புரி–சங்குநாதம் எதிர்காலத்தில் மேன்மையுற எனது ஆசிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவிப்பதில் மகிழ்வடைகிறேன்.

**Dr.சாமஸ்ரீ, தேசமானிய,**
**க.லோகேஸ்வரன் J.P.**
**தொல்புரத்தூர்.**

## வலம்புரியின் நாதம் ஓங்கி முழங்குக

ஊடகத் துறையில் தனக்கென ஓர் இடத்தை தனித்துவமாய் பெற்று இருபது வருடங்களாக சிறப்போடு வீறுநடை போட்டு வரும் வலம்புரியின் நாதம் மென்மேலும் ஓங்கி முழ ங்கி நல்வழி பிறக்க ஆண்டவன் ஆசியுடன் மனதார வாழ்த்துகின்றேன்.

**திரு. ந.சோதிநாதன்**
**ஸ்தாபகரும் தலைவரும்**
**கிழவன் காடு கலாமன்றம்**
**காரைநகர்.**

## நடுவுநிலை தவறாத வலம்புரிக்கு மனமுவர்ந்த வாழ்த்துக்கள்

20.12.2019 அன்று தனது 20 ஆவது வருடத்தை பூர்த்தி செய்ததற்காக எமது வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனம் மனமுவர்ந்து வாழ்த்துகின்றது. மேலும் வடமாகாணம் மட்டும் இல்லாமல் இலங்கை பூராகவும் மற்றும் உலகம் பூராகவும் வலம் வரவேண்டுமென்று வாழ்த்துகின்றோம்.

**தலைவர்/செயலாளர்**
**வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனம்,**
**சங்கானை**

## வடபகுதி மக்களின் வாழ்வோடு ஒன்று கலந்த "வலம்புரி"

நானறிந்த வரையில் வடபகுதி மக்கள் செய்திகளையும் ஏனைய விடயங்களைப்பற்றி அறிந்து கொள்வதிலும் அதிக ஆர்வம் கொண்டவர்கள். அதனால் அதிகாலையிலேயே பலர் பத்திரிகைகளைப் படிப்பதில் நாட்டம் கொண்டவர்களாக உள்ளார்கள்.

பத்திரிகை வழியாகப்பெற்றுக்கொள்ளும் செய்திகள் பக்கச்சார்பற்றதாகவும் நம்பத்தகுந்தவையாகவும் இருக்க வேண்டுமெனவே பெரும்பாலான வாசகர் கள் விரும்புகின்றார்கள். மக்களின் விருப்பத்தை நிறை வேற்றும் அதேவேளை அறிவூட்டலையும் ஆக்கபூர் வமாக "வலம்புரி" செய்து வருவதை நன்கறிவேன். நாட்டு நடப்புகளை நல்ல தமிழ் மொழியில் வெளியிட்டு வரும் வலம்புரி கதை, கட்டுரை, கவிதை என பல கருவூலங்களையும் அவ்வப்போது பிரசுரித்து படைப்பாளிகளை ஊக்கு விப்பதுடன் வாசகர்களுக்கும் பெறுமதியான விட யங்களை வழங்கி வருவது யாவரும் அறிந்ததே. மொத்தத்தில் வடபகுதி மக்களின் வாழ் வோடு ஒன்று கலந்த பத்திரிகையாக இருபது ஆண்டு களாக வெளிவருவது பாராட்டுதலுக்கு உரியதாகும்.

இன்றைய சூழ்நிலையில் தமிழ் பேசும் மக்கள் பல பகுதிகளிலும் பரந்து வாழ்வதாலும், ஊடகங்கள் பல்கிப் பெருகியுள்ளதாலும், கணனி, இணையத்தளம் போன்ற நவீன நுட்பங்கள் விரிவடைந்து வருவதாலும் "வலம்புரி" எல்லாவற்றையும் உள்வாங்கி எதிர்காலத்தில் ஏற்றமிக்க சேவையை எல்லோருக்கும் வழங்கவேண்டுமென வாழ்த்துகின்றேன்.

**உடுவை.எஸ்.தில்லைநடராசா**
**முன்னாள் வவுனியா-கிளிநொச்சி அரச அதிபர், கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர்**

# கூட்டமைப்பு தலைமை செயலிழந்துள்ளது புதிய அரசியல் தலைமை தேவை

## சிவசக்தி ஆனந்தன் எம்.பி

(குருமன்காடு)

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தலைமை செயலிழந்துள்ளது. அந்த வெற்றிடத்தை நிரப்ப தமிழ் மக்களுக்கு புதிய அரசியல் தலைமை தேவை என்பதை வவுனியா மாவட்டத்தில் உள்ள முக்கியஸ்தர்கள் மற்றும் புத்திஜீவிகளுக்கு வலியுறுத்தியுள்ளதாக ஈ.பி.ஆர்.எல்.எப்.கட்சியின் செயலாளரும், வன்னிப் பாராளுமன்ற உறுப்பினருமான சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.**



வவுனியாவில் உள்ள அவரது அலுவலகத்தில் மாவட்டத்தின் முக்கியஸ்தர்கள் மற்றும் புத்திஜீவிகளுடனான சந்திப்பு ஒன்று இடம்பெற்றது. இதன் பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இங்கு கலந்து கொண்ட முக்கிய பிரமுகர்களின் கருத்தின் படி தமிழ் மக்கள் ஒரு தனி நாட்டுக்காக போராடிய இனம். இன்றைக்கு வாழ்வாதாரத்திற்காக போராட வேண்டிய ஒரு துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாக கருத்து தெரிவித்துள்ளார்கள். புதிய ஜனாதிபதியை தேர்தலுக்கு பிற்பாடு சந்திப்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பல தடவை முயற்சி எடுத்தது. அந்த முயற்சிகள் வெற்றியளிக்கவில்லை. இராஜதந்திர மட்டாங்களுடனும் அவர்கள் பேசியிருக்கிறார்கள். புதிய அரசாங்கத்தை சந்திப்பதற்காக மேற்கொண்ட அந்த முயற்சிகளும் கைகூடவில்லை.

ஆகவே எதிர்வருகின்ற 5 ஆண்டுகள் காலம் தமிழ் மக்களுடைய அரசியல் தீர்வு உட்பட ஏனைய விடயங்களை கையாள்வதற்கு நாங்கள் ஒரு மாற்று வழியை கையாள வேண்டியவர்களாகவுள்ளோம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இராஜதந்திர தோல்வி காரணமாக நாங்கள் மாற்று வழியை கண்டுபிடிக்க வேண்டும். அதற்கான விடயம் தொடர்பில் பகிர்ந்து கொண்டோம். தமிழ் மக்களுக்கு ஒரு மாற்றுத் தலைமை தேவை என்பதை இங்கு வந்தவர்கள் வலியுறுத்தியுள்ளார்கள். ஆகவே அதை நோக்கி செல்வதன் ஊடாகத்தான் நாங்கள் எதிர்காலத்தில் எங்களுடைய சகல விதமான பிரச்சினைகளையும் அரசாங்கத்துடனும், இராஜ்தந்திரிகளுடனும் பேசி கையாளக்கூடிய நிலைமை ஏற்படும். இன்றைக்கு இருக்கக்கூடிய கூட்டமைப்பு தலைமை செயலிழந்துள்ளது. அந்த வெற்றிடத்தை நிரப்ப தமிழ் மக்களுக்கு பதிய அரசியல் தலைமை தேவை என்பதையும் வலியுறுத்தியுள்ளோம் என மேலும் தெரிவித்தார். (9-250)




# சூரியகிரகணத்தில் அவதானமாக இருங்கள்!

## அந்தணர் ஒன்றியம் அறிவிப்பு

(நெளுக்குளம்)

சூரிய கிரகண நாளான எதிர்வரும் 26 ஆம் திகதி வியாழக்கிழமை பொது மக்கள் அவதானத்துடன் நடந்து கொள்ளுமாறு வவுனியா மாவட்ட அந்தணர் ஒன்றிய செயலாளர் சிவஸ்ரீ ஜெ.மயூரக் குருக்கள் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் அனுப்பியுள்ள ஊடக அறிக்கையில்,

எதிர்வரும் 26 ஆம் திகதி வியாழக்கிழமை சூரிய கிரகணம் இடம்பெற இருக்கின்றது. இலங்கை நேரப்படி காலை 08.09 மணி முதல் பகல் 11.22 மணி வரையுள்ள காலப்பகுதிகளில் இது இடம்பெறும். இலங்கையில் சூரிய கிரகணம் தெளிவாக தென்படும். அன்றைய தினம் ஆஞ்சநேயர் ஜெயந்தி தினமுமாதலினால் காலை பூஜைகள் காலை 8 மணிக்குள் முடிக்கப்பட வேண்டும்.

பின்னர் காலை 8.05 மணியளவில் ஆலயங்கள் நடைசாத்தப்பட்டு பகல் 11.30 மணிக்குப் பின்னர் பரிகார வழிபாடுகளின் பின்னர் திறக்கப்படும். எனவே அதற்கு இடைப்பட்ட காலப்பகுதிகளில் ஆலயங்களில் எவ்விதமான வழிபாடுகளும் இடம்பெறமாட்டாது எனவும் இந்தக் கிரகண காலப் பகுதிகளில் உணவுகள் சமைப்பது அல்லது உட்கொள்ளுவதை தவிர்த்துக் கொள்ளவும்.

இக்காலத்தே உண் ணும், சமைக்கும் உணவுகள் சூரியனில் இருந்து வரும் செவ்வூதாக் கதிர்களால் நஞ்சாகும் தன்மை உடையன. அதனால் அவற்றை முடிந்த வரை தவிர்க்கவும். அவ்வாறு உணவுகள் இருந்தால் அவற்றைத் தர்ப்பை புல்லினால் மூடி வையுங்கள். அதன் பின்னர் அவற்றைப் பாவிக்கலாம்.

வெற்றுக்கண்ணினால் சூரியனை இக்காலப்பகுதிகளில் பார்ப்பதனைத் தவிர்க்கவும். ஈரத்துணி கொண்டு பார்க்கலாம். கர்ப்பிணிப் பெண்கள் இக்காலப்பகுதிகளில் வெளியில் செல்வதையோ அல்லது சூரிய கிரகணத்தினைப் பார்ப்பதனையோ தவிர்க்கவும் எனவும் குறித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (9-299)

# வவுனியா காணி மத்தியஸ்தர் சபையிடம் ஒரு வருடத்தில் 833 முறைப்பாடுகள் பதிவு

(குருமன்காடு)

வவுனியா மாவட்டத்தில் காணிப்பிணக்குகள் தொடர்பாக ஒருவருடத்தில் 833 முறைப்பாடுகள் விசேட காணி மத்தியஸ்தர் சபையிடம் பதிவு செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட அரச அதிபர் ஐ.எம். ஹனீபா தெரிவித்துள்ளார்.

வவுனியா விசேட காணி மத்தியஸ்தர் சபையின் ஓராண்டு பூர்த்தி நிகழ்வு சபையின் தவிசாளர் இ.நவரட்ணம் தலைமையில் குடியிருப்பு கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது. இதன்போது பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வவுனியா மாவட்டத்தில் 833 காணிப்பிணக்குகள் விசேட காணி மத்தியஸ்தர் சபையிடம் கிடைக்கப்பெற்றுள்ளன. அதில் 132 பிணக்குகள் இரு பகுதியினரின் சம்மதத்துடன் தீர்த்து வைக்கப்பட்டுள்ளன. வவுனியா பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட 333 பிணக்குகளுக்கு தீர்வு காண்பதற்கு அரச உத்தியோகத்தர்களின் ஒத்துழைப்பு கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

எனக்கு கீழ் உள்ள உத்தியோகத்தர்களின் ஒத்துழைப்பு கிடைக்கவில்லை என தெரிவிக்கும் போது நான் கவலையடைகிறேன். அதற்கு பல காரணங்கள் இருக்கலாம். ஆனால் 2020 ஆம் ஆண்டில் அவ்வாறான நிலைமைகள் இருக்காது எனவும் தெரிவித்தார்.

விசேட காணி மத்தியஸ்தர் சபையின் ஓராண்டு பூர்த்தியை முன்னிட்டு நடைபெற்ற நிகழ்வில் வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் க.பரந்தாமன், வெண்கல செட்டிகுளம் பிரதேச செயலாளர் க.சிவகரன், வவுனியா தெற்கு பிரதேச செயலாளர் எம்.எஸ். ஜானக, மத்தியஸ்தர் சபைகளின் சட்ட ஆலோசகர் சட்டத்தரணி எம். திருநாவுக்கரசு, மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்கள உதவிப்ப ணிப்பாளர் இ.விஜயகுமார், வனவள திணைக்கள மாவட்ட பொறுப்பதிகாரி கே.நாணயக்கார, மத்தியஸ்தர் சபைகளின் பயிற்சி உத்தியோகத்தர் எஸ்.விமலராஜா, விசேட காணி மத்தியஸ்தர் சபை உறுப்பினர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (9-250)



வவுனியா மாவட்ட புகைப்படக்கலைஞர்கள், சங்க உறுப்பினர்களின் ஒன்றுகூடல் நிகழ்வும் கலைஞர்களுக்கான அடையாள அட்டைகள் வழங்கும் நிகழ்வும் சங்கத்தலைவர் இரங்கசாமி தலைமையில் வவுனியா பிரதேச கலாசார மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் விருந்தினராக வவுனியா பிரதேச கலாசார உத்தியோகத்தர் வீ.பிரதீபன் கலந்து கொண்டு கலைஞர்களுக்கான அடையாள அட்டைகளை வழங்கிவைத்தார். (படம்-நெளுக்குளம் செய்தியாளர்)

# குடியிருப்புக்குள் நுழைந்த முதலை

(நெளுக்குளம்)

வவுனியா நெளுக்குளத்தில் குடியிருப்பிற்குள் நேற்று அதிகாலை நுழைந்த முதலை ஒன்று மீட்கப்பட்டுள்ளது. வவுனியா நெளுக்குளம் பகுதியில் அமைந்துள்ள வீட்டினுள் முதலை ஒன்று நுழைவதை வீட்டில் உள்ளவர்கள் அவதானித்துள்ளனர்.

அதனையடுத்து அயலவர்களின் துணையுடன் குறித்த முதலையை பிடித்துள்ளனர். பின்னர் இது தொடர்பாக வனஜீவராசிகள் திணைக்களத்திற்கு தகவல் வழங்கப்பட்டதை அடுத்து திணைக்க ளத்தின் முதலையை மீட்டுச் சென்றனர்.

அண்மைக்காலமாக நாட்டில் ஏற்பட்ட சீரற்ற காலநிலை காரணமாக முதலைகள் குடியிருப்பு பகுதிகளிற்குள் நுழைகின்ற சம்பவங்கள் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (9-299)

# கிளி.வைத்தியசாலையில் நோயாளர்கள் சிரமமின்றி சிகிச்சைகளை பெறுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

(கிளிநொச்சி )

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் நோயாளர்கள் சிரமங்களின்றி இலகுவாக சிகிச்சைகளைப்பெற்றுக் கொள்வதற்கான வழிவகைகளை புதிய வைத்தியசாலைப்பணிப்பாளர் மற்றும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆகியோர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பல்வேறு தரப்பினரும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுக்கொள்வதற்கு பல்வேறு இடங்களிலும் இருந்து வருகின்ற நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் போக்குவரத்து வசதிகளற்ற வன்னேரிக்குளம், அக்கராயன், கோணாவில், வட்டக்கச்சி, தருமபுரம் உள்ளிட்ட வைத்தியசாலையில் சிகிச்சைக்காக வருகின்ற பெருமளவான நோயாளர்கள் உரிய நேரத்தில் சிகிச்சை பெற்றுக்கொள்ள முடியாத நிலையில் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்குகின்றனர்.

இதனை விட விடுதிகளில் தங்கியிருக்கின்ற நோயாளர்களை பார்வையிடுகின்ற பார்வையாளர்களை உரியவாறு பார்வையிடுவதற்கு அனுமதிக்காது இடையூறுகள் விளைவிப்பதாகவும் பார்வையாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

ஆகவே பின்தங்கிய பிரதேசங்களில் இருந்து போக்குவரத்து வசதிகள் இன்றி பெரும் நெருக்கடிகளுக்கு மத்தியில் வைத்தியசாலைக்குச் சென்று இவ்வாறு தாங்கள் சிரமத்தை எதிர்கொள்வதாகவும் புதிதாக கடமைகளை பொறுப்பேற்றிருக்கின்ற வைத்தியசாலைப்பணிப்பாளர் மற்றும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆகியோர் இதில் கவனம் எடுத்து நோயாளர்கள் இலகுவாக சிகிச்சை பெற்றுச் செல்லக் கூடிய வழிவகைகளை ஏற்படுத்தித்தருமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (9-315)



கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள வறுமைக்கோட்டுக்குட்பட்ட 100 மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு வட மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் கிளிநொச்சி மாவட்ட அலுவலகத்தில் நடைபெற்றது.

பிரித்தானியாவில் வசிக்கும் சிவஞானசூரியர் ஐயர் தனது துணைவியார் அமரர் குமாரராணியின் நினைவாக வழங்கிய குறித்த உபகரணங்களை ஓய்வுநிலை அதிபரும் சமூக சேவையாளருமாகிய க.இராசேந்திரம் துணைவியாருடன் மாணவர்களுக்கு வழங்கி வைத்தார்.

# காணாமல் ஆக்கப்பட்டவர்கள் எங்கே?

## கிளிநொச்சியில் 30 ஆம் திகதி போராட்டம்

(முறிகண்டி)

**வடக்கு-கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் நீதியை வழங்கக் கோரி எதிர்வரும் 30 ஆம் திகதி காலை 10 மணிக்கு கிளிநொச்சி கந்தசாமி கோவில் முன்றலில் மாபெரும் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளது**

வடக்கு-கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளுடைய சங்கத்தின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்படவுள்ள இந்தப் போராட்டத்தில் கட்சி பேதமின்றி அனைவரையும் கலந்து கொள்ளுமாறு உறவுகள் சார்பில் சங்கத்தின் செயலாளர் லீலாதேவி கோரிக்கை விடுத்துள்ளார்.

வடக்கு-கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் 1000 நாட்களை கடந்தும் தமது உறவுகளை தேடி போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்த நிலையில் புதிய அரசிடம் தமது கோரிக்கைகளை முன்வைக்கும் வகையிலும் சர்வதேசத்துக்கு தமது கோரிக்கையை தெரியப்படுத்தும் முகமாகவும் இந்த போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளனர்.

எனவே பாதிக்கப்பட்ட உறவுகளுக்கு நீதி கிடைக்க வேண்டும் எனவும் உறவுகளின் குரலுக்கு வலுச்சேர்க்கும் வகையிலும் அரசியல் பேதமின்றி அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (9-100)

# வெள்ள நிவாரணம் வழங்கல்



(பனிக்கன்குளம்)

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் கடந்த வாரத்தில் ஏற்பட்ட வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட வறுமைக்கோட்டுக்குட்பட்ட மாணிக்கபுரம் சுதந்திரபுரம் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளைச் சேர்ந்த 50 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

புதுக்குடியிருப்பு பிரதேச இளைஞர் கழக சம்மேளன பொருளாளர் கே.தனுசன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வுக்குரிய முழுமையான நிதி அனுசரணையினை தாயக உறவுகளுக்கு கைகொடுக்கும் செண்பக அமைப்பின் ஊடாக வழங்கப்பட்டது. (9-281)

# பரிசோதனைக்குட்படுத்தப்பட்ட மன்னார் முச்சக்கரவண்டிகள்



(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் உள்ள அனைத்து முச்சக்கரவண்டிகளையும் பாதுகாப்பு பரிசோதனைக்கு உட்படுத்தி பதிவுகளை மேற்கொள்ளும் நடவடிக்கை மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பந்துல வீரசிங்க தலைமையில் நேற்று மன்னார் பொது விளையாட்டு அரங்கில் இடம்பெற்றது.

நாடளாவிய ரீதியில் பாதுகாப்பை பலப்படுத்தும் விதமாக பொலிஸ் திணைக்களத்தின் அறிவித்தலின் படி பாவனையில் உள்ள முச்சக்கரவண்டிகளை பதிவு செய்வதுடன் புதிய பதிவு இலக்கம் வழங்கப்பட்டு அடிப்படை பாதுகாப்பு தொடர்பான அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டு வருகின்றன.

குறித்து செயற்றிட்டத்தின் முதல் கட்டமாக மன்னார் நகர் பகுதிகளில் தொழில் ரீதியாக பாவனையில் உள்ள சுமார் 100 இற்கு மேற்பட்ட முச்சக்கர வண்டிகளுக்கு பதிவுகள் மேற்கொள்ளப்பட்டதுடன் பதிவு இலக்கங்களும் வழங்கப்பட்டுள்ளன. அத்துடன் தொடர்ச்சியாக மாவட்டம் முழுவதும் உள்ள முச்சக்கரவண்டிகள் பதிவு செய்யப்பட இருப்பதுடன் உரிமையாளர்கள் தொடர்பான விபரங்களும் திரட்டப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.(9-285)




# வீட்டுத்திட்டத்துக்கான நிதியை விடுவியுங்கள்

## பிரதமரிடம் செல்வம் எம்.பி.கோரிக்கை

(குருமன்காடு)

வீடமைப்பு அதிகார சபையின் ஊடாக நாடு முழுவதும் உள்ள மக்களுக்கு வீட்டுத்திட்டங்கள் வழங்கப்பட்டுள்ள வீடுகளுக்கான நிதியை வழங்குமாறு பிரதமரிடம் வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கேட்டுள்ளார். பிரதமருக்கு அவர் அனுப்பியுள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கையில்,

வீடமைப்பு அதிகார சபையின் ஊடாக நாடு முழுவதும் உள்ள மக்களுக்கு வீட்டுத்திட்டங்கள் வழங்கப்பட்ட அவ்வீடுகளை மக்கள் தமது பங்களிப்புடன் கட்ட ஆரம்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டிருந்தனர்.

அவற்றுக்குரிய நிதி அரசினால் வழங்கப்படும் என உத்தரவாதம் வழங்கப்பட்டிருந்தது. அதனை நம்பி எமது மக்கள் தமது சொத்துக்களை அடகு வைத்தும் கடன் வாங்கியும் வீடுகளை கட்ட தொடங்கியிருந்தனர். அரசாங்கத்தினால் அவற்றிற்குரிய நிதி இது வரை வழங்கப்படவில்லை. இதனால் மக்கள் நிதி நெருக்கடிக்குள்ளாகியுள்ளனர்.

மேலும், அநேகமான வீடுகள் நிதிப்பற்றாக்குறையினால் பாதி கட்டப்பட்ட நிலையில் உள்ளன. தற்போது ஏற்பட்ட கனமழை வெள்ளத்தின் காரணமாக மக்கள் பல்வேறு இன்னல்களை எதிர் நோக்கியுள்ளனர்.

வாழ்விடம் இன்றி அல்லலுறுகின்றனர். வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த மக்களே அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். இது நாடுமுழுவதும் உள்ள ஒரு பாரிய பிரச்சினையாகும்.

எனவே வீடமைப்பு அமைச்சராக உள்ள தாங்கள் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு தேவையான நிதியினை வழங்கி பாதி கட்டி முடிக்கப்பட்ட வீடுகளை முழுமையாக கட்டுவதற்கும் கட்டி முடிக்கப்பட்ட வீடுகளின் உரிமையாளர்கள் நிதி நெருக்கடியில் இருந்து மீள்வதற்கும் விரைந்து நடவடிக்கை எடுத்து உதவுமாறு அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (9-250-299)



வவுனியா நாற்சதுர சுவிசேஷ சபை மற்றும் வைத்தியசாலை கிறிஸ்தவ ஐக்கிய அமைப்பின் ஏற்பாட்டில் கிறிஸ்மஸ் தின நிகழ்வு வவுனியா வைத்தியசாலையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதில் நோயாளர்களுக்கு சிற்றுண்டிகள் வழங்கப்பட்டதுடன், கிறிஸ்மஸ் பாடல்கள் இசைத்து சிறுவர்களுக்கு கிறிஸ்மஸ் பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டதுடன் சிறப்பு பிரார்த்தனைகளும் இடம்பெற்றன.(படங்கள்: குருமன்காடு செய்தியாளர்)

# மன்னாரில் அருட்தந்தையை தாக்கிய பொலிஸ் அதிகாரி இடமாற்றம்

(மன்னார்)

மன்னார் தோட்டவெளி பகுதியில் இடம்பெற்ற மணல் மீட்புப் போராட்டத்தில் அருட்தந்தை ஒருவரை தாக்கி மக்களை அச்சுறுத்தியதாகக் கூறப்படும் மன்னார் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் சிறு குற்றத் தடுப்புப்பிரிவு பொலிஸ் அதிகாரி உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

குறித்த பொலிஸ் அதிகாரி உயிலங்குளம் பொலிஸ் நிலையத்திற்கு மாற்றப்பட்டு பின்னர் வவுனியாவிற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (9-285)

# காணொலி பாடல் வெளியீட்டு விழா

(முரசுமோட்டை)

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலகத்தின் அனுசரணையுடன் கவிஞர் வவுனியூர் ரஜீவனின் கவி வடிவில் உருவான "அலையின் வரிகள்" என்னும் காணொலி பாடல் வெளியீட்டு விழா இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு கிளிநொச்சி மத்திய கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

முல்லைத்தீவு முத்தையன்கட்டு வலதுகரை மகா வித்தியாலயத்தின் அதிபர் சின்னப்பா நாகேந்திரராசா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கரைச்சி பிரதேச செயலாளர் த.முகுந்தன், சிறப்பு விருந்தினராக கண்டாவளை பிரதேச செயலாளர் த.பிருந்தாகரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (9-318)

# சர்வமத குழுவினரின் பரஸ்பர பரிமாற்ற விஜயம்



(குருமன்காடு)

தென்பகுதியிலிருந்து சர்வமத குழுவினர் பரஸ்பர பரிமாற்று விஜயமொன்றினை மேற்கொண்டு கடந்த வெள்ளிக்கிழமை வவுனியாவினை வந்தடைந்தனர்.

தேசிய சமாதான பேரவை மற்றும் கிராம அபிருத்தி நிறுவனத்தின் ஏற்பாட்டில் மதங்கள், இனங்களுக்கிடையிலான நல்லிணக்கத்தினை வலுப்படுத்தும் முகமாக கண்டி அக்குரணை, நீர்கொழும்பு பகுதியினை சேர்ந்த சர்வமத குழு அங்கத்தவர்கள் வவுனியா மாவட்டத்திற்கு மூன்று நாள் நல்லிணக்க விஜயத்தினை மேற்கொண்டுள்ளனர். அவர்களை வரவேற்கும் நிகழ்வு வவுனியா இரண்டாம் குறுக்குத்தெருவில் அமைந்துள்ள விருந்தினர் விடுதியில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.


இந் நிகழ்வில் மதத்தலைவர்கள், பொலிஸார், தேசிய சமாதான பேரவை மற்றும் கிராம அபிருத்தி நிறுவனத்தின் அங்கத்தவர்கள், கிராம சேவையாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு வரவேற்பு வழங்கினார்கள்.

பரஸ்பர பரிமாற்று விஜயத்தினை மேற்கொண்டுள்ள குழுவினர் வவுனியாவிலுள்ள அனைத்து மதத்தலங்களுக்கும் விஜயம் மேற்கொண்டதுடன் வவுனியா வாழ் மக்களுடனும் கலந்துரையாடலை மேற்கொண்டனர். (9-250)

# பாரதம்

## குடியுரிமைச்சட்டத்திற்கு எதிராக வலுக்கும் போராட்டங்கள்

### உ.பியில் 15 பேர் பலி



(டில்லி)

இந்தியாவின் புதிய குடியுரிமைத் திருத்தச் சட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து உத்தர பிரதேசத்தில் இடம்பெற்றுவரும் ஆர்ப்பாட்டங்கள் காரணமாக 15 பேர் உயிரிழந்தனர்.

இந்தியாவின் பல மாநிலங்களில் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றுவரும் அதேவேளை உத்தரபிரதேசத்திலும் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெறுகின்றன.

நேற்று ஆர்ப்பாட்டங்களில் பெருமளவு மக்கள் ஈடுபட்ட வேளை அவர்களை கட்டுப்படுத்த முயன்ற பொலிஸாருக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் இடையில் மோதல்கள் இடம்பெற்றன.

இதன் போது பொலிஸார் கண்ணீர்புகை குண்டு வீச்சு மற்றும் தடியடியில் ஈடுபட்டதால் ஐந்து பேர் உயிரிழந்தனர்.

இதன் காரணமாக காயமடைந்தவர்களில் மேலும் பத்து பேர் உயிரிழந்துள்ளதை தொடர்ந்து உத்தர பிரதேசத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 15 ஆக அதிகரித்துள்ளது. (ஜ-2)

## குடியுரிமை திருத்தச்சட்டம் இஸ்லாமியர்களுக்கெதிரானது அல்ல

### மத்திய அமைச்சர் தெரிவிப்பு

(டில்லி)

குடியுரிமை சட்டத் திருத்தம் இஸ்லாமியர்களுக்கு எதிரானது அல்ல என்றும், அது தவறாக புரிந்து கொள்ளப்பட்டுவிட்டது எனவும், மத்திய அமைச்சர் ஜிதேந்திர சிங் தெரிவித்தார். டில்லியில் செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவித்த போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து தெரிவித்த அவர், சிறுபான்மையினர் மனதில் அச்சம் விதைக்கப்பட்டுள்ளதாகவும், இது வேண்டு



மென்றே திட்டமிட்டு செய்யப்பட்டுள்ளதாகவும் குற்றம்சாட்டினார்.

குடியுரிமை சட்ட திருத்தத்தில் ஓரிடத்தில் கூட இந்திய இஸ்லாமியர்களை புறக்கணிக்கும் வகையிலான வார்த்தைகள் இடம்பெற்றிருக்காது என்றும் அவர் தெரிவித்தார்.

குடியுரிமை சட்டத் திருத்தத்திற்கு எதிராக நாடு முழுவதும் பல்வேறு இடங்களில் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

போராட்டத்தில் ஏற்பட்ட வன்முறையின் காரணமாக இது வரை 15 பேர் வரையில் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

## ஒடுக்குமுறைகள் இருக்கும் வரையில் போராட்டமும் இருக்கும் - வைரமுத்து

(சென்னை)

குடியுரிமை சட்டத் திருத்தம் இந்தியாவின் அடிப்படையை பொடிப் பொடியாக்கி இருப்பதாக கவிஞர் வைரமுத்து தெரிவித்தார்.

அத்துடன், 'ஒடுக்குமுறைகள் இருக்கும் வரை போராட்டம் இருக்கும் என்றும் சிலர் போராட்டம் என்றும், சிலர் வன்முறை என்றும் பேசுகிறார்கள் எனவும் சுட்டிக்காட்டினார்.

சென்னையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது தொடர்ந்து தெரிவித்த அவர், "இந்தியாவின் அடிப்படையை குடியுரிமை சட்டத் திருத்தம் பொடிப் பொடியாக்கி இருக்கிறது. அறிவுலகினர் அனைவரின் கருத்தும் இதுவே.

மத்திய அரசு இச்சட்டத்தை உடனடியாக திரும்பப் பெற வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைக்கிறேன்" எனத் தெரிவித்தார். (ஜ-2)

## அரசபடைகள்-கிளர்ச்சிய

### 61 பேர் பரிதாபமா

(டமாஸ்கஸ்)

**சிரியாவில் அரச படைகளுக்கும் கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே நடைபெற்ற மோதலில் 61 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.**

சிரியாவில் கடந்த 2011 ஆம் ஆண்டில் இருந்து கிளர்ச்சியாளர்களுக்கும் அரச படைகளுக்கும் இடையே உள்நாட்டுப் போர் நடை பெற்று வருகிறது.

இந்தப் போரில் இதுவரை 3 இலட்சத்து 70 ஆயிரத்திற்கும் அதிகமான மக்கள் பலியாகியுள்ளனர்.

இதற்கிடையில், அந்நாட்டில் கிளர்ச்சியாளர்கள் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருந்த இட்லிப் மாகாணத்தை கைப்பற்ற அரச படைகள் முயற்சி மேற்கொண்டு வருகின்றனர்.

இதனால், அரச படைகளுக்கும் கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே அவ்வப்போது மோதல் நடைபெற்று வருகிறது.

இந்நிலையில், மாரெட் அல் நுமன் மற்றும் இட்லிப் பகுதிகளில் கடந்த


## பஸ்-லொறி மே

### 20 பேர் பலி;




## ஆயுதத் தடைச் சட்டத்தி

### ஐம்பதாயிரம் துப்பா



(வெலிங்டன்)

நியூசிலாந்தில் இடம்பெற்ற கிறிஸ்ட்சர்ச் தாக்குதலைத் தொடர்ந்து வெள்ளிக்கிழமை நள்ளிரவு முதல் வரையான காலப் பகுதியில் சுமார் 50 ஆயிரத் துக்கும் மேற்பட்ட துப்பாக்கிகள்ள பறிமுதல் செய்துள்ளதாக நியூசிலாந்து பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த மார்ச் மாதம் நியூசிலாந்தின் கிறிஸ்ட்சர்ச்சில் உள்ள பள்ளிவாசல்கள் மீது தனி நபர் ஒருவர் மேற்கொண்டகோ துப்பாக்கிச் சூட்டில் 51 பேர் வரை உயிரிழந்தனர். அதன் பின்னர் நியூசிலாந்தில் கொண்டுவரப்பட்ட ஆயுத தடை சட்டத்தின்மூலம் பொது மக்கள் உள்ளிட்ட மேலும் பல தரப்பினரிடமிருந்து துப்பாக்கிகளை பறிமுதல் செய்யும் நடவடிக்கையை அந்நாட்டு அதிகாரி


# வெளிநாடு

## ...ச்சியாளர்கள் மோதல் ...மாக உயிரிழப்பு!

...பாட
...த்தை
...பற்சி

...க்கும்
...டயே
...பற்று

...மன்
...டந்த



வியாழக்கிழமை முதல் கிளர்ச்சியாளர்களுக்கும் பாதுகாப்பு படையினருக்கும் இடையே கடுமையான மோதல் நடைபெற்றது.

இந்தப் போரில் 38 கிளர்ச்சியாளர்கள் மற்றும் 23 அரசுப் படையினர் என மொத்தம் 61 பேர் உயிரிழந்தனர். (ஜ-2)

## ...கோர விபத்து ...பி; பலர் காயம்



(கௌவுதமாலா சிட்டி)

கௌவுதமாலா நாட்டில் பயணிகள் பஸ் ஒன்று விபத்தில் சிக்கியதில் 20 பேர் பரிதாபமாக பலியானது அங்கு சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

கௌதமாலா நாட்டில் வட கிழக்கு பீட்டன் பகுதியில் இருந்து தலைநகர் நோக்கி பயணிகள் பஸ் ஒன்று சென்று கொண்டிருந்தது.

இந்நிலையில், கௌவுதமாலா சிட்டியில் இருந்து கிழக்கே 150 கி.மீ. தொலைவில் கவுலான் நகராட்சி பகுதியில் சென்றபோது, பஸ்சின் பின்புறம் லொறி ஒன்று வேகமாக மோதி விபத்தை ஏற்படுத்தியது.


இந்த கோர விபத்தில் 20 பேர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக பலியாகினர். மேலும் பலர் படுகாயம் அடைந்தனர்.

தகவலறிந்து அங்கு சென்ற மீட்புக்குழுவினர் காயமடைந்தவர்களை மீட்டு அருகிலுள்ள பல்வேறு மருத்துவமனைகளுக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தனர். (ஜ-2)

## ...த்தின் கீழ் நியூசிலாந்தில் ...ப்பாக்கிகள் பறிமுதல்

...ஸ்ட்
...ளிக்
...பான
... துக்
...தல்
...ஸார்

...தின்
...கள்
...ண்ட
...வரை
...யூசி
...டை
... உள்
...ந்து
...யும்
...காரி



களும் பொலிஸாரும் ஆரம்பித்திருந்தனர்.

இந்நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை முதல் நேற்று வரையான காலப் பகுதியில் சுமார் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட துப்பாக்கிகள் பறிமுதல் செய்யப்பட்டன. (ஜ-2)


## பிரேசில்-சீனாவின் செயற்கைக்கோள் விண்ணில் செலுத்தப்பட்டது

(பிரேசில்)

பிரேசில் மற்றும் சீனா ஆகிய நாடுகள் இணைந்து உருவாக்கிய செயற்கைக்கோள் விண்ணில் செலுத்தப்பட்டது.

கடந்த வெள்ளிக்கிழமை இந்த செயற்கைக்கோள் விண்ணில் செலுத்தப்பட்டுள்ளதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

பிரேசிலின் அமேசான் காடுகளையும் நாட்டின் சுற்றுச் சூழலையும் கண்காணிக்கும் நோக்கில் இந்த செயற்கைக்கோள் வடிவமைக்கப்பட்டது.



பிரிக்ஸ் வலையமைப்பு நாடுகளுக்கிடையிலான ஒத்துழைப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் அடிப்படையில் இந்த செயற்கைக் கோள் உருவாக்கப்பட்டது. (ஜ-2)

## அமெரிக்காவில் ஆறாவது படையாக விண்வெளிப்படை உருவாக்கம்

### ட்ரம்ப் அதிரடி



(வோஷிங்டன்)

அமெரிக்கா புதிதாக விண்வெளிப் படையை உருவாக்கியுள்ளது.

அமெரிக்காவில் இராணுவம், மெரைன் கார்ப்ஸ், கடற்படை, விமானப்படை, கடலோரக் காவல்படை என 5 படைப் பிரிவுகள் உள்ளன.

தற்போது ஆறாவது படைப் பிரிவாக, விண்வெளிப்படையை அமெரிக்கா புதிதாக உருவாக்கியுள்ளது.


இதற்காக, 738 பில்லியன் டொலர்கள் தொகையை ஒதுக்குவதற்கான சட்டத்தில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கையெழுத்திட்டுள்ளார். அதிகபட்சமாக 16 ஆயிரம் பேரை மாத்திரமே கொண்ட அமெரிக்காவின் மிகச்சிறிய படைப் பிரிவாக இது அமைகிறது.

ஏனைய படைகளைப்போன்று வீரர்களின் எண்ணிக்கையை வைத்து விண்வெளிப் படையை எடைபோடக் கூடாது எனவும், தொழில்நுட்பங்கள் மற்றும் அவற்றின் திறன்களே முக்கியம் எனவும் விமானப்படை செயலாளர் குறிப்பிட்டுள்ளார். (ஜ-2)

## 2019 ஐ விட 2020 மோசமானதாகவிருக்கும்

### காலநிலை மாற்றம் குறித்து ஐ.நா. அதிகாரி அச்சம்






2019 ஆம் ஆண்டு மிகவும் மோசமானது. அடுத்த வருடம் அதனை விட மோசமானதாக காணப்படும் என தெரிவித்துள்ள ஐநாஅதிகாரியொருவர் 2020 இல் காலநிலை மாற்றம் மோதல்கள் காரணமாக பெருமளவானவர்கள் பாதிக்கப்படுவார்கள். அவர்களிற்கு மனிதாபிமான உதவிகள் தேவைப்படும் என குறிப்பிட்டார்.

இந்த வருடம் 145 மில்லியன் மக்களிற்கு மனிதாபிமான உதவி தேவைப்படலாம் என கடந்த வருடம் நான் எதிர்பார்த்தேன். ஆனால் 165 மில்லியன் மக்களிற்கு மனிதாபிமான உதவி தேவைப்பட்டது என அவர் குறிப்பிட்டார்.

என்னிடம் மாயக்கண்ணாடியில்லை, அடுத்த வருடம் நாங்கள் எதனை எதிர்கொள்ளப் போகின்றோம் என்பது தெரியாது. ஆனால் 2020 குறித்து என்னிடம் மோசமான எதிர்பார்ப்புகள் உள்ளன என ஐக்கிய நாடுகளின் நிவாரண ஒருங்கிணைப்பாளர் மார்க்லொவ்கொக் தெரிவித்தார்.

அடுத்த வருடம் நிலைமை மிக மோசமானதாகயிருக்கும் என நான் நினைக்கின்றேன், அஞ்சுகின்றேன் என அவர் தெரிவித்தார்.

உதவிகள் தேவைப்படும் மக்களிற்கு அவை சென்றடையுமா என்பதை பூகோள அரசியல் போட்டியே தீர்மானிக்கும் என குறிப்பிட்டுள்ள அவர் சிரியா மற்றும் வெனிசுவெலா மக்களின் நிலைமை குறித்து கவலை வெளியிட்டார்.

நாங்கள் கையாள்கின்ற ஒவ்வொரு நெருக்கடியிலும் பெண்களும் யுவதிகளும் அங்கவீனர்களுமே மோசமாக பாதிக்கப்படுகின்றனர் என அவர் தெரிவித்தார். இவர்களே அதிகளவிற்கு மறக்கப்பட்டவர்களாகவும் உள்ளனர் என அவர் தெரிவித்தார். (ஜ-2)

# நாட்டார் பாடல் போட்டியில் தங்கப்பதக்கம்



(கண்டி)

அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையில் அண்மையில் கண்டியில் நடைபெற்ற கர்நாடக சங்கீத தேசிய மட்ட நாட்டார் பாடல் போட்டியில் யாழ்.கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலய மாணவர்கள் தங்கப்பதக்கத்தை வென்றனர். (இ-7)

# மத்தள விமான நிலையம் இந்தியாவுக்கு வழங்கப்படாது

## ஜனாதிபதி கோட்டாபய திட்டவட்டம்

(கொழும்பு)

மத்தள விமான நிலையம் இந்தியாவுக்கு வழங்கப்படாது என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

வெளிநாட்டுச் செய்தியாளர்களை நேற்று முன்தினம் ஜனாதிபதி சந்தித்த போது, மத்தள விமான நிலையம் இந்தியாவின் உதவியுடன் அபிவிருத்தி செய்யப்படுமா? என்று கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்கு அவர், "மத்தள விமான நிலையம், நாட்டின் மாற்று அனைத்துலக விமான நிலையமாக இலங்கை விமான நிலைய அதிகார சபையால் அபிவிருத்தி செய்யப்படும்.

இந்தத் திட்டம் குறித்து இந்தியாவுடன் எந்தக் கலந்துரையாடலும் நடத்தப்படவில்லை.

அதேவேளை, இந்திய நிறுவனங்கள் குறிப்பாக, தகவல் தொழில்நுட்பத் துறையில் முதலீடு செய்வதை வரவேற்கின்றோம்" என்றும் அவர் தெரிவித்தார். (இ-7)

# ஏழு வாகனங்கள் மோதி விபத்து

## 15 பேர் படுகாயம்!

## நால்வர் கவலைக்கிடம்



(கலேவெல)

கலேவெல - தம்புள்ளை பிரதான வீதியின் யடிகல்பொத்த பிரதேசத்தில் நேற்று முன்தினம் அதிகாலை ஏழு வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி இடம்பெற்ற விபத்தில் 15 பேர் படுகாயமடைந்து தம்புள்ளை மற்றும் கலேவெல வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கார் ஒன்றும் லொறி ஒன்றும் மோதி வீதியை விட்டு விலகிய நிலையில் அது தொடர்பில் பொலிஸார் வந்து விசாரணைகளை மேற்கொண்டிருந்த போது மேலும் 5 வாகனங்கள், குறித்த இடத்திலேயே ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகின.

இந்த விபத்துக்களில் படுகாயமடைந்த 15 பேர் கலேவெல மற்றும் தம்புள்ளை வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டதாகவும் அதில் நான்கு பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாகவும் வைத்தியசாலை வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

விபத்துக்குள்ளான அனைத்து வாகனங்களும் பொலிஸாரின் பொறுப்பின் கீழ் கொண்டு வரப்பட்ட நிலையில், இவ்விபத்து தொடர்பில் கலேவெல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)




அரசியல் தீர்வை வலியுறுத்துவதற்கான மக்கள் இயக்கத்தால் "இலங்கையின் புதிய சூழலை தமிழ்த் தேசமாக எவ்வாறு எதிர்கொள்வது என்ற தலைப்பில் கலந்துரையாடல் நல்லூர் பவன் விடுதியில் அண்மையில் இடம்பெற்றது. இதில் அரசியல் ஆய்வாளர் ஆ.யதீந்திரா கருத்துரை வழங்கினார்.

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## சிறை

ஒருவன் சொன்னான். "நான் எங்கள் அப்பாவை விட்டு எப்போதும் பிரிவது இல்லை. அவர் எங்கே இருக்கிறாரோ அங்கேதான் நானும் இருப்பேன்" அப்படி என்றான். "உங்கள் அப்பா எங்கு இருக்கிறார்" என்று கேட்டால்... "அவர் ஜெயிலில் இருக்கிறார்" என்கிறான்! ஜெயிலுக்குப் போனாலும் சேர்ந்தே போயிட்டு வருகிற அளவுக்கு அப்படி ஒரு பந்தம். அது இருக்கட்டும்!

இந்தக் காலத்தில் இவர்கள் எல்லாம் ஜெயிலுக்குப் போவது என்றால் ஏதோ மாமியார் வீட்டுக்குப் போயிட்டு வருவது மாதிரிப் போயிட்டு வந்துவிடுகிறார்கள். ஆனால்... அந்தக் காலத்திலே எல்லாம் இப்படி முடியாது! ஒரு காலத்தில் ஜெயிலுக்குப் போவது என்றால் பயந்து நடுங்கினவர்களும் உண்டு. தெரியுமோ?

1403 இல் இங்கிலாந்தில் சிறைச்சாலை ஏற்பட்டது! அது அரசாங்கத்தின் நேரடி நிர்வாகத்தில் இருந்தது. ஆனால் அதற்கு முன்னால் சங்க காலத்திலேயே நமது நாட்டிலே சிறைகள் இருக்கிறது. அதுபற்றி பல குறிப்புக்கள் இருக்கிறது. கணைக்கால் இரும்பொறை சிறையிலிருந்து தண்ணீர் கேட்டு அதைக் கொடுக்காததால் அவமானம் தாங்காமல் ஒரு பாடல் எழுதி (புறம் 74) இறந்ததாக குறிப்பு இருக்கிறது. "குணவாயில் கோட்டத்து சிறை வைத்தான்!" என்று சொல்லுவார்கள்.

அந்த வாயிற் கோட்டம் – கும்பகோணமாக இருக்க வேண்டும். அல்லது திருச்சி மலைக் கோட்டையாக இருக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். சிறையிலே குற்றவாளிகளை மிகவும் கஷ்டப்படுத்துவார்கள். அதனாலே சிறைக்குப் போவது என்றால் எல்லோருக்கும் பயம்.

இந்தப் பயம் இருந்தால் தான் மனிதன் தவறு செய்ய மாட்டான் என்று நினைத்தார்கள். ஆனால் காலப் போக்கிலே... கணக்குப் பார்த்தால்... இதனாலே குற்றம் குறைகிற மாதிரி தெரியவில்லை. அதனாலே பெரிய குற்றத்திற்கு "மரண தண்டனை" என்று கொண்டு வந்தார்கள்.

1550 ஆம் வருடத்திற்குப் பிறகு இங்கிலாந்திலேயும் இன்னும் சில ஐரோப்பிய நாடுகளிலேயும் சிறைச்சாலைகள்ள நிறுவினார்கள். அதற்கு எல்லாம் என்ன பெயர் தெரியுமா? Work houses - Houses of Correction இப்படியெல்லாம் அதற்குப் பெயர்.

பிச்சைக்காரர்கள் – கடன்காரர்கள் – குடும்பத்தைத் தவிக்க விட்டு ஓடியவர்கள் – சும்மா திரிகிறவர்கள் இவர்களை எல்லாம் இங்கே பிடித்துக் கொண்டு வந்து அடைத்து வைப்பது வழக்கம். ஆனால் பெரிய தவறு செய்பவர்களுக்கு இது சரியான இடமேயில்லை... அதனாலே அவர்களுக்காக... அதிக பாதுகாப்போடு இருக்கிற மாதிரி "சிறைகள்" கட்டினார்கள். இருந்தாலும் எல்லா விதமான குற்றவாளிகளையும் ஒரு அறையில் போட்டு அடைத்து வைத்தார்கள். அவர்களுக்கு ஒரு வேலையும் கிடையாது. சரியான சாப்பாடும் கிடையாது... சும்மா ஆடு, மாடு மாதிரி அடைந்து கிடந்தார்கள்.

18 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலே தான் கைதிகளெல்லாம் நல்ல முறையில் நடத்தப்பட வேண்டும். சிறைகள் சுத்தமாகவும் சுகாதாரமாகவும் இருக்க வேண்டும் என்கிற சுக்குரல் எழுந்தது. பின்னர் காலப் போக்கில் பலவிதமான சீர்திருத்தங்கள் எல்லாம் செய்ய ஆரம்பித்தார்கள்.

இப்போது எல்லாம் நிலைமை மிகவும் மாறிப் போய்விட்டது. சிறையில் கைதிகளெல்லாம் சும்மா இருக்க வேண்டியதில்லை. அவர்களுக்கு எல்லாம் வேலை கொடுக்கிறார்கள். படிக்கலாம், தொழிற்கல்வி கற்றுக் கொள்ளலாம், வைத்திய வசதி, பொழுது போக்கு வசதி எல்லாம் இருக்கிறது. சிறைச்சாலைகள் இன்னும் சீர்திருத்தம் செய்ய வேண்டும் என்று எவ்வளவோ யோசனை எல்லாம் செய்து கொண்டிருக்கிறாங்க! எல்லாம் எதற்காக?


சிறைக்குப் போகிறவர்கள் எல்லாம் மனிதாபிமான அடிப்படையிலே சீர்திருத்த வேண்டும் என்பதற்காகத்தான். நீண்ட காலத்திற்கு முன்னால் எல்லாம் குற்றவாளிகளைப் பிடித்து முதலில் ஜெயிலில் அடைத்துவிடுவார்கள். வழக்கு விசாரணைக்கு வரும் வரைக்கும் அவர்கள் அங்கு தான் இருக்க வேண்டும். விசாரித்து தீர்ப்பு வழங்கியாச்சு என்றால் உடனே தண்டனையை நிறைவேற்றி விடுவார்கள். வைத்துக்கொண்டிருப்பது இல்லை. தண்டனை என்றால் எப்படி ? மரண தண்டனை – இல்லை என்றால் கசையடி – சித்திரவதை அபராதம் இப்படி ஏதாவது இருக்கும்.

தண்டனைக்காக சிறையிலே அடைத்து வைக்கும் பழக்கம் அப்போது எல்லாம் கிடையாது. ராஜா, ராணி காலத்திலே ஒரு ராணியை ஒருவன் கடத்திக் கொண்டு போய் விட்டான் சேர்! உடனே ராஜாவிடம் எல்லோரும் ஓடி வந்து இந்த விடயத்தைச் சொன்னார்கள். "கடத்திக் கொண்டு போனவன் எங்கேயிருந்தாலும் உடனே கண்டு பிடித்து என் முன்னால் கொண்டு வந்து நிறுத்துங்கள்!" என்று உத்தரவு போட்டார் ராஜா!

"அவனை என்ன செய்யப் போகிறீர்கள்!" என்று கேட்டார் அமைச்சர். "அவனுக்கு என்னுடைய பாராட்டையும் நன்றியையும் தெரிவிக்கப் போகிறேன்!" என்றார் ராஜா.

# மார்கழி மாத இராசி பலன்கள்

## 17.12.2019-14.01.2020



விகாரி வருடம் மார்கழி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் குரு, இராசியிலேயே சஞ்சரிப்பது யோகம்தான். அவரோடு சூரியன், சனி, கேது ஆகிய மூன்று கிரகங்களும் இணைந்து சஞ்சரிக்கின்றன. சப்தம ஸ்தானத்தில் ராகு பகவான் அமர்ந்து உங்கள் இராசியைப் பார்க்கிறார். எனவே ஆரோக்கியத் தொல்லைகள் அதிகரிக்கும். ஆதாயத்தைக் காட்டிலும் விரயமே கூடுதலாக இருக்கும். பிரச்சினைகள் வீடு தேடி வரலாம். வழக்குகள் மனக்கவலையை அதிகரிக்கச் செய்யும்.

ஜென்ம குரு என்பதால் இடமாற்றம், ஊர் மாற்றம், உத்தியோக மாற்றம், குடும்பத்தை விட்டு தள்ளியிருக்கும் சூழ்நிலை, குழந்தைகளால் பிரச்சினை என்று ஏதாவது ஒன்று வந்து கொண்டேயிருக்கும். மாற்றுக் கருத்துடையோரின் எண்ணிக்கை அதிகரிக்காமல் பார்த்துக்கொள்ளுங்கள். விரயங்கள் அதிகரிக்கும் இந்த நேரத்தில், கடன்சுமை அதிகமாகும். இதுபோன்ற காலங்களில் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற இயலாது.

உங்கள் இராசிக்கு 2ஆம் இடத்தில் சுக்கிரன் சஞ்சரிக்கிறார். புதிய உத்தியோகத்திற்கு விண்ணப்பித்தவர்களுக்கு அது கிடைக்கலாம். பூர்வீகச் சொத்துத் தகராறுகள் மீண்டும் தலைதூக்கும். உடன்பிறப்புகளோடு அனுசரித்துச் செல்வதுடன் சுமுகமான முறையில் தீர்வு கண்டால் சொத்துக்களால் உங்களுக்கு இலாபம் கிடைக்கலாம்.

விரயாதிபதியான செவ்வாய் 11 ஆம் இடத்தில் சஞ்சரிக்கிறார். பஞ்சம ஸ்தானத்திற்கும், செவ்வாய் அதிபதியாவதால் பிள்ளைகளால் மனக்கவலைகளும், விரயங்களும் உருவாகலாம். உங்கள் குணமறிந்து அவர்கள் செயற்படமாட்டார்கள். அதே நேரத்தில் விலையுயர்ந்த பொருட்களை ஒருசிலர் விற்க நேரிடலாம். இம்மாதத்தில் ஆறு கிரக சேர்க்கை ஏற்படுகிறது. அதுவும் உங்கள் இராசியிலேயே அனைத்தும் சேருகிறது.

எனவே ஒரு சில நாட்கள் உங்கள் இராசிக்குள் அந்த கிரகங்கள் இருந்தாலும் மிகுந்த மனப்பயம் உருவாகும். எதையும் துணிந்து செய்ய இயலாது. தன்னம்பிக்கை குறையும். தட்டுப்பாடுகள் அதிகரிக்கும்.

இம்மாதம் மார்கழி அஷ்டமி அன்று 'இறைவன் படியழக்கும் திருநாள்' வருகிறது. தொடர்ந்து அனுமன் ஜெயந்தி, வைகுண்ட ஏகாதசி, ஆருத்ரா தரிசனம் ஆகியவையும் வருகிறது. அந்தந்த நாட்களில் அதற்குரிய தெய்வங்களை அர்ச்சனை செய்து வழிபட்டு வந்தால், பிரச்சினைகளில் இருந்து விடுபட இயலும்.

பொன்னான புதன் பெயர்ச்சி

உங்கள் இராசிக்கு 7, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். அவர் டிசம்பர்

### நிதானத்துடன் செயற்பட வேண்டிய நேரம்

21 ஆம் திகதி உங்கள் இராசியிலேயே அடியெடுத்து வைக்கப் போகிறார். இதன் விளைவாக வாழ்க்கைத் துணையால் வந்த பிரச்சினை அகலும். வருங்கால நலன்கருதி நீங்கள் தீட்டிய திட்டங்கள் வெற்றியாகும். கைநழுவிச் சென்ற ஒப்பந்தங்கள் மீண்டும் வரலாம். மாமன், மைத்துனர் வழியில் ஏற்பட்ட மனக்கசப்புகள் மாறும். ஜனவரி 7ஆம் திகதி மகரத்திற்கு புதன் செல்கிறார். அங்குள்ள சுக்கிரனோடு இணைந்து புத-சுக்கிர யோகத்தை உருவாக்குகிறார். விலையுயர்ந்த பொருட்களை வாங்கும் யோகம் உண்டு. உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு உயர்பதவிகிடைக்கலாம்.

விருச்சிக செவ்வாய் சஞ்சாரம்

டிசெம்பர் 28ஆம் திகதி விருச்சிக இராசிக்கு செவ்வாய் செல்கிறார். விரயாதிபதி விரயஸ்தானத்தில் சஞ்சரிக்கும் இந்த நேரத்தில், விரயங்கள் அதிகரிக்கத்தான் செய்யும். 'வாங்கிய இடத்தால் பிரச்சினை வருகிறதே' என்று அதை




விற்பதற்கு முன்வருவீர்கள். உடன்பிறப்புகள் உங்களுக்கு எதிர்கருத்துக்களை தெரிவிக்கலாம். ஊர் மாற்றங்களும், உத்தியோக மாற்றங்களும் தானாக வந்து சேரும்.

கும்ப சுக்கிரன் சஞ்சாரம்!

இதுவரை மகரத்தில் சஞ்சரித்து வந்த சுக்கிரன், ஜனவரி 10ஆம் திகதி கும்ப இராசிக்கு செல்கிறார். 6, 11 க்கு அதிபதி 3 இல் சஞ்சரிக்கும் பொழுது, உத்தியோகத்தை எதிர்பார்த்துக் காத்திருந்த சகோதரர்களுக்கு இப்பொழுது உத்தியோகம் கிடைக்கும். தூர தேசப் பயணங்கள் வருவதற்கான அறிகுறிகள் தென்படும். சொந்த வீட்டை விற்றுவிட்டு, வாடகை வீட்டில் குடியேறும் சூழல் சிலருக்கு ஏற்படும்.

ஆறு கிரகங்களின் சேர்க்கை

25.12.2019 மாலை 5.10 மணி முதல் 27.12.2019 இரவு 12.19 மணி வரை உங்கள் இராசியிலேயே ஆறு கிரகங்கள் (சூரியன், சந்திரன், புதன், வியாழன், சனி, கேது) கூடுகின்றன. இந்த கிரகச்சேர்க்கை, ஒரே இராசியில் அதுவும் உங்கள் இராசியிலேயே கூடுவதால் மிகுந்த விழிப்புணர்ச்சி தேவை. வீண் பழிகள் வீடுதேடி வரலாம். ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கும். திடீர் செலவுகள் திக்குமுக்காட வைக்கும். மன இறுக்கம் ஏற்படும். இதுபோன்ற காலங்களில் எச்சரிக்கையாக இருப்பதுடன், இறைவழிபாட்டையும் மேற்கொள்வதுதான் நல்லது.

இம்மாதம் சனிக்கிழமை தோறும் ஆனைமுகப் பெருமானையும், அனுமனையும் வழிபட்டு வருவது நல்லது.

பெண்களுக்கான சிறப்பு பலன்கள்

இம்மாதம் உங்கள் இராசியில் ஆறு கிரகங்கள் கூடுகின்றன. அதோடு ஜென்மச் சனி மற்றும் ஜென்ம குரு ஆதிக்கம் இருப்பதால் நிதானத்தோடு செயற்படுங்கள். மனக் குழப்பங்கள் அதிகரிக்கும். இதைச் செய்வோமா, அதைச் செய்வோமா என்று சிந்தித்துக் கொண்டே இருப்பீர்கள். கணவன் - மனைவிக்குள் அன்பும், ஆதரவும் குறையாமல் இருக்க ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு செயற்படுங்கள். உறவினர் பகை அதிகரிக்கும். தாயின் உடல்நலம் தேறும். அவர்களின் ஆதரவு திருப்தி தரும். சகோதர-சகோதரிகளை புரிந்துகொள்ள இயலாது. குடும்ப விடயங்களை வெளியில் சொல்தால் பிரச்சினைகளைச் சந்திக்க நேரிடும். பிள்ளைகள் வழியில் கருத்து வேறுபாடுகள் ஏற்படாமலிருக்க, அவர்களின் போக்கிலேயே விட்டுப் பிடிப்பதுதான் நல்லது. பணிபுரியும் பெண்களுக்கு திடீரென இடமாற்றங்கள் வரலாம். முன்னோர் வழிபாடும், முருகப் பெருமான் வழிபாடும் முன்னேற்றம் தரும்.

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்

விகாரி வருடம் மார்கழி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் விரய ஸ்தானத்தில் விரயாதிபதி குரு, தனாதிபதியும் உங்கள் இராசிநாதனுமான சனி, அஷ்டமாதிபதி சூரியன், கேது ஆகிய 4 கிரகங்கள் வீற்றிருக்கின்றன. இந்தக் கிரகச் சேர்க்கையால் உள்ளத்தில் நினைத்ததை உடனடியாகச் செய்ய இயலாது. விரயங்கள் கூடும். வீடு மாற்றங்களும், இடமாற்றங்களும் எதிர்பாராத விதத்தில் வந்து சேரலாம். சேமிப்பு கரைகின்றதே என்று கவலைப்படுவீர்கள். சிக்கல்களையும், சிரமங்களையும் அதிகமாக சந்திக்க நேரிடும். அவற்றிலிருந்து விடுபட முறையான வழிபாடுகளை ல்வத்துக்கொள்ளுங்கள்.

தற்சமயம் ஏழரைச் சனியின் ஆதிக்கமும் நடைபெறுகிறது. எனவே மனக்கவலை அதிகரிக்கும். மாற்றுக் கருத்துடையோரின் எண்ணிக்கை உயரும். கூட்டாளிகள் உங்கள் குரலுக்கு செவிசாய்க்க மறுப்பர். குடியிருக்கும் வீட்டால் பிரச்சினைகள் உருவாகும். வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள அதிகப் பிரயாசை எடுக்க வேண்டியது இருக்கின்றதே என்று அங்கலாய்த்துக் கொள்வீர்கள்.

6, 9-க்கு அதிபதியான புதன், மாதத் தொடக்கத்தில் வலிமை இழந்திருக்கின்றார். எனவே தந்தை வழி உறவில் விரிசல்கள் ஏற்படலாம். உடன் பிறந்தவர்களால் ஓரளவே நன்மை கிடைக்கும். ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கும். என்னதான் ஆகாரத்தில் கட்டுப்பாடு செலுத்தினாலும், அலைச்சலின் காரணமாகவோ அல்லது வேறு ஏதேனும் ஒன்றின் காரணமாகவோ ஒவ்வாமை நோய்க்கு ஆளாக நேரிடும். ஆரோக்கியத்தில் சிறு அச்சுறுத்தல் ஏற்படும்போதே, மருத்து வரை அணுகுங்கள்.

செவ்வாய் 10 இல் இருப்பது ஒருவழிக்கு நன்மைதான். பூமி வாங்கும் யோகம் ஒருசிலருக்கு வாய்க்கும். அதே நேரம் விரய ஸ்தானம் பலம்பெற்றிருப்பதால் வில்லங்கங்களும், விவகாரங்களும் தலைதூக்கும். கொள்கைப் பிடிப்பை தளர்த்திக் கொண்டு செயற்பட வேண்டிய மாதம் இது.

இம்மாதம் மார்கழி அஷ்டமியில் 'இறைவன் படியளக்கும் திருநாள்' வருவதால், அன்றைய தினம் சிவாலய வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். அனுமன் ஜெயந்தி அன்று அனுமனுக்கு வெற்றிலை மாலை சூட்டி வழிபடுங்கள். வைகுண்ட ஏகாதசியன்று விஷ்ணுவை வழிபடுவதன் மூலம் நன்மை கிடைக்கும்.

பொன்னான புதன் பெயர்ச்சி

உங்கள் இராசிக்கு 6, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். அவர் டிசெம்பர் 21ஆம் திகதி உங்கள் இராசிக்கு 12ஆம் இடமான விரய ஸ்தானத்திற்கு வருகிறார். 6-க்கு அதிபதி 12இல் வரும் பொழுது 'கெட்டவன் கெட்டிடில் கிட்டிடும்




ராஜயோகம்' என்பதற்கு ஏற்ப, சில நல்ல தகவல்கள் இல்லம் தேடி வரலாம். சுபகாரியப்

### தன்னம்பிக்கையும் தைரியமும் தேவை

பேச்சுக்கள் நல்ல முடிவிற்கு வரும். தொழிலில் எதிர்பார்த்தபடி நல்ல வருமானம் கிடைக்கும். ஜனவரி 7 ஆம் திகதி உங்கள் இராசியான மகரத்திற்கு புதன் வருகிறார். இதன் விளைவாக பாகப்பிரிவினைகள் சுமுகமாக முடியும். பணிபுரியும் இடத்தில் அதிகாரிகளால் ஏற்பட்ட அல்லல்கள் அகலும். ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும். நட்பால் வளமான வாழ்வை அமைத்துக் கொள்வீர்கள்.

விருச்சிக செவ்வாய் சஞ்சாரம்

டிசெம்பர் 28ஆம் திகதி விருச்சிக இராசிக்கு செவ்வாய் வருகிறார். அதன் விளைவாக இலாப ஸ்தானம் பலப்படுகிறது. வரவிற்கேற்ற செலவு வந்து கொண்டே இருக்கும். ஏனென்றால் விரய ஸ்தானத்தில் நான்கு கிரகங்கள் வீற்றிருக்கின்றன. எந்த காரியத்தைத் தொடங்கினாலும் பணத்தை வைத்துக்கொண்டு செய்ய வேண்டுமென்று நினைக்க வேண்டாம். காரியத்தை தொடங்கிவிட்டால் தேவைப்பட்ட பணம்தேடி வந்து சேரும்.

கும்ப சுக்கிரனின் சஞ்சாரம்

இதுவரை மகரத்தில் சஞ்சரித்து வந்த சுக்கிரன், ஜனவரி 10ஆம் திபதி கும்ப இராசிக்குச் செல்கிறார். உங்கள் இராசிக்கு 5, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்கிரன், தன ஸ்தானத்தில் சஞ்சரிப்பது யோகம்தான். மண், பூமி, நகை, நட்டுக்கள் வாங்கும் யோகம் உண்டு. வரவேண்டிய பாக்கிகள் வசூலாகும். கல்யாண முயற்சிகள் கைகூடும். கடமையில் இருந்த தொய்வு அகலும். குடும்ப உறுப்பினர்களின் எண்ணங்களைப் பூர்த்தி செய்து மகிழ்வீர்கள்.

ஆறு கிரகங்களின் சேர்க்கை

25.12.2019 மாலை 5.10 மணி முதல் 27.12.2019 இரவு 12.19 மணி வரை உங்கள் இராசிக்கு 12-ம் இடமான விரய ஸ்தானத்தில் ஆறு கிகரங்கள் (சூரியன், சந்திரன், குரு சனி, புதன் கேது) கூடுகின்றன. இத்தனை கிரகங்கள் ஒரே இடத்தில் கூடும்போது மிகமிக நிதானத்துடன் செயற்பட வேண்டும். நினைத்தது ஒன்று நடந்தது ஒன்றுமாக இருக்கும். திடீர் இடமாற்றம், உத்தியோக மாற்றம் உருவாகிக் கவலை தரும். வீண் குழப்பங்களும் விரயங்களும் அதிகரிக்கும்.

இம்மாதம் சனிக்கிழமை தோறும் விநாயகப் பெருமானையும், சஷ்டி திதியில் சண்முகநாதரையும் வழிபடுவது நல்லது.

பெண்களுக்கான சிறப்பு பலன்கள்

இம்மாதம் விரய ஸ்தானம் பலப்படுவதால் வரவைக் காட்டிலும் செலவு கூடும். திடீர்



இடமாற்றங்கள், ஊர்மாற்றங்கள், வீடு மாற்றங்கள் அமையும். கொடுத்த வாக்கைக் காப்பாற்ற முடியவில்லையே என்று கவலைப்படுவீர்கள்.

சேமிப்பு கரையும். கணவன் - மனைவிக்குள் ஒற்றுமை பலப்பட விட்டுக்கொடுத்துச் செல்லுங்கள். குடும்ப விடயங்களை பிறரிடம் சொல்வதைத் தவிர்ப்பது நல்லது. வீடு கட்டும் முயற்சி அல்லது கட்டிய வீட்டைப் பராமரிக்கும் முயற்சி கைகூடலாம். தாய்வழி ஆதரவு திருப்தி தரும்.

உடன் பிறப்புகள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர். ஏழரைச் சனியின் ஆதிக்கம் நடைபெறுவதால் ஒரு கடனை அடைக்க மற்றொரு கடன் வாங்கும் சூழ்நிலை உருவாகும். புது முயற் சிகளில் ஈடுபடும் பொழுது குடும்ப உறுப் பினர்களை கலந்து ஆலோசித்து முடிவெ டுங்கள். பிள்ளைகளால் விரயம் உண்டு. சனீஸ்வரர் வழிபாடு சந்தோஷம் வழங்கும்.

(தொடரும்)

# அமெரிக்காவுக்கு இலங்கை அடிமையாக முடியாது

# எம்.சி.சி.ஐ முழுமையாக கிழித்தெறிய வேண்டும்!

## சஜித் ஆவேசம்-எட்கா, சோபாவுக்கும் கடும் எதிர்ப்பு



**(கிரில்லவல)**

**அமெரிக்காவின் மிலேனியம் சவால்கள் ஒப்பந்தத்தை (எம்.சி.சி.ஐ) முழுமையாக கிழித்தெறிய வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**

கிரில்லவல நகரில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

'காலநிலை மற்றும் வானிலை மாற்றத்தால், புவியின் வெப்பநிலை காரணமாக ஓசோன் மண்டலத்தில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

வருடாந்தம் கடல் மட்டம் அதிகரித்துச் செல்வதால் எமது நாட்டிற்கு என்ன நேரப்போகின்றது? இவை அனைத்தும் மிகவும் ஆழமாக சிந்திக்க வேண்டிய விடயங்கள்.

இவ்வாறான விடயங்களை எதிர்நோக்குவது தொடர்பாக நாட்டில் சிறந்த கொள்கையொன்றை வகுத்தல் வேண்டும். சூழலுக்கு மாத்திரமன்றி நாட்டை எதிர்காலச் சந்ததிக்கு முன்னோக்கி கொண்டு செல்வதற்கும் எதிர்காலத்திற்கும் இது அவசியம்.

எவ்வாறான நாட்டை நாம் நிர்வகிக்கின்றோம்? எவ்வாறான நாட்டை கையளிக்கின்றோம் என்பது தொடர்பாக கவனம் தேவை. வரையறுக்கப்பட்ட தரமான 60 வீதமான சந்தைக்கு எமது ஏற்றுமதி முன்னெடுக்கப்படுகின்றது.

ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் நாட்டின் காலநிலை தொடர்பான நிகழ்ச்சிநிரலை அடிப்படையாக வைத்து, அச்சுறுத்தல் விடுக்கக் கூடும். இதன்போது ஏற்றுமதிக்கும் தடைகள் விதிக்கக்கூடும்.

எங்களுடைய ஏற்றுமதியின் பல்வகை தன்மை பேணப்பட வேண்டும். எம்.சி.சி உடன்படிக்கையின் ஊடாக இந்த நாடு அமெரிக்காவுக்கு அடிமையாகவுள்ளது எனக் கூறப்படுகின்றது.

எம்.சி.சி. ஒப்பந்தத்தை முழுமையாக கிழித்தெறிய வேண்டும். எட்காவை கிழித்தெறிய வேண்டும். சோபா உடன்படிக்கையை கிழித்தெறிய வேண்டும்.

தேவை என்றால் சிங்கப்பூர் - இலங்கைக்கு இடையிலான வர்த்தக உடன்படிக்கையையும் முழுமையாக இல்லாமல் செய்ய வேண்டும்' எனத் தெரிவித்தார். (இ-7)

# மெத்தை, தலையணை இல்லை தரையில் உறங்கும் சம்பிக்க!

(கொழும்பு)

வெலிக்கடைச் சிறைச்சாலையில் அடைக்கப்பட்ட முன்னாள் அமைச்சர் சம்பிக்க ரணவக்க உறங்குவதற்கு மெத்தையோ, தலையணையோ வழங்கப்படவில்லை எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சிறையில் அடைக்கப்படும் கைதி, முள்ளந்தண்டு பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டிருந்தால், அவருக்குச் சிறைச்சாலை அதிகாரிகள் மெத்தை மற்றும் தலையணையை வழங்குவது வழக்கம்.



கடந்த 19 ஆம் திகதி சம்பிக்க ரணவக்க விளக்கமறியலில் வைக்கப்பட்டதையடுத்து, அவருக்கு தலையணை மற்றும் மெத்தையை வழங்க முடியுமா? என்ற, மருத்துவ அறிக்கை சிறைச்சாலை அதிகாரிகளிடம், சிறைச்சாலை மருத்துவமனையால் வழங்கப்பட்டது.


எனினும், சம்பிக்க ரணவக்கவுக்கு முள்ளந்தண்டு பிரச்சினைகள் ஏதும் இல்லை என்று சிறைச்சாலை மருத்துவர்கள், சிறைச்சாலை அதிகாரிகளுக்குத் தெரிவித்தனர்.

இதனால் அவர் வெறும் தரையிலேயே உறங்க வேண்டிய நிலை ஏற்பட்டது. (இ-7)

# தனி இசை நாட்டார் நடனத்தில் மாணவன் மூன்றாமிடம்

**(கண்டி)**

**அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையில் அண்மையில் கண்டியில் இடம்பெற்ற தேசிய மட்ட தமிழ்த்தினப் போட்டியில் ஆண்களுக்கான தனி இசை நாட்டார் நடனத்தில் யாழ். செம்பியன்பற்று அரசினர் தமிழ்க் கலவன்பாடசாலை மாணவன் ஏ.அபினாஸ் மூன்றாமிடத்தைப் பெற்றுள்ளார். (இ-64)**




# மட்டக்களப்பு-கொழும்பு

# நெடுஞ்சாலையை வழிமறித்த வெள்ளம்

## மக்கள் கடும் அவதி







(ஏறாவூர்)

மாதுறு ஓயா ஆறு நேற்று முன்தினம் திடீரென பெருக்கெடுத்து மட்டக்களப்பு மாவட்டத்தின் பல பகுதிகளை மூழ்கடித்தனால் போக்குவரத்தும் ஸ்தம்பித நிலையை அடைந்திருந்தது.

மட்டக்களப்பு - கொழும்பு நெடுஞ்சாலையில் சித்தாண்டி, புணானை, வெலிக்கந்தை, மன்னம்பிட்டி ஆகிய பகுதிகள் சுமார் 2 தொடக்கம் 4 அடி வரையான வெள்ள நீரில் மூழ்கியிருந்தது.

எதிர்பாராத விதமாக திடீரென ஏற்பட்டு வீதியை வழிமறித்த இந்த வெள்ளப் பெருக்கால் போக்குவரத்து பல மணி நேரம் ஸ்தம்பித்துப் போயிருந்தது.

சிறிய வாகனங்களில் பயணம் செய்தோர் தமது பயணத்தைத் தொடர முடியாமல் தடுமாறிப் போய் நின்றனர்.

அதேவேளை வெள்ளநீரில் சிக்கிக் கொண்ட சிறிய ரக வாகனங்களை கட்டி இழுத்து வந்து கரை சேர்த்து உதவும் வகையில் பல கனரக வாகனங்கள் ஈடுபட்டிருந்தன.

தடைப்பட்ட பயணத்தைத் தொடர்வதற்கு உதவும் விதமாக பெண்கள், குழந்தைகள், வயோதிபர்கள் ஆகியோர் உழவியந்திரங்களில் ஏற்றி கரை சேர்க்கப்பட்டனர். (இ-7)

# இனப்படுகொலைக்கு முற்றுமுழுதான சர்வதேச விசாரணையே தீர்வு!



## சட்டத்தரணி சுகாஷ் சுட்டிக்காட்டு

(குப்பிழான்)

ஈழத்தில் அரங்கேறிய இனப்படுகொலைக்கு முற்றுமுழுதான சர்வதேச விசாரணையொன்று தான் தீர்வைப் பெற்றுத் தருமெனவும், உள்நாட்டில் நடக்கக்கூடிய உள்ளக விசாரணையோ, கலப்பு விசாரணையோ எந்தவிதமான தீர்வையும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஒருபோதும் பெற்றுத் தராது என்பதையும் கடந்த-2010 ஆம் ஆண்டு முதல் பிரதான கோசமாக நாங்கள் ஆணித்தரமாக வலியுறுத்தி வருகின்றோம் எனத் தெரிவித்த தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் சட்ட ஆலோசகரும், சட்டத்தரணியுமான க.சுகாஷ் தெரிவித்தார்.

கொக்குவிலிலுள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

சுவிஸ் தூதரகப் பணியாளர் கடத்தப்பட்ட விடயம் ஓய்வதற்கிடையில் யாழ்.குடாநாட்டைச் சேர்ந்த தமிழ்க் குடும்பஸ்தர் ஒருவர் ரி.ஐ.டியினரின் விசாரணைக்காகச் சென்ற நிலையில் ,பல நாட்களாகியும் வீடு திரும்பவில்லை. இதனையடுத்து அவரது மனைவி இதுதொடர்பாக வல்வெட்டித்துறைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

சுவிஸ் தூதரகத்தின் பணியாளர் கடத்தப்பட்ட விடயத்தில் பாதிக்கப்பட்டதாகச் சொல்லப்பட்ட நபர் இன்று சந்தேக நபராக்கப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.


இந்நிலையில் சுவிஸ் நாட்டின் வெளிவிவகார இராஜாங்கத் திணைக்களத்தின் அறிக்கை இலங்கை அரசைக் கடுமையாகச் சாடியுள்ளது.

சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டிய நிறுவனங்கள் சரியான முறையில் தங்களுடைய செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதனைத் தான் நாங்கள் அன்று தொட்டு வலியுறுத்தி வருகின்றோம்.

சர்வதேச சட்டத்தினுடைய பாதுகாப்பு மிக்க இராஜதந்திரி என்ற வட்டத்துக்குள் வரக்கூடிய ஒரு தூதரகப் பணியாளரின் விடயத்திலேயே இலங்கை அரசு இந்தளவு மிலேச்சத்தனமாகச் சட்டத்தைக் கையிலெடுத்துச் செயற்படுகின்ற போது உள்நாட்டு யுத்தத்தில் பாதிக்கப்பட்ட தரப்பாக காணப்படும் தமிழ்மக்களும், குற்றம் சாட்டப்படும் தரப்பாக இலங்கை அரசும் காணப்படும் நிலையில் இலங்கை அரசினால் முன்னெடுக்கப்படும் விசாரணை எந்தளவுக்குப் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தீர்வைப் பெற்றுத் தருமென்பதை சுவிஸ்ம், சர்வதேச நாடுகளும் தெளிவாக உணர்வதற்கான வாய்ப்புத் தற்போது உருவாகியுள்ளது எனவும் சுகாஷ் தெரிவித்தார்.

இதேவேளை, மீண்டும் கடத்தல்களும், காணாமற் போதல்களும், வெள்ளைவான்களும் வருமோ என்கிறதொரு அச்சமானதொரு சூழ்நிலைக்குள் எமது மக்கள் தள்ளப்பட்டுள்ளனர் எனவும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (இ-18)

# அமெரிக்க-இந்திய உயர் மட்டப் பேச்சில் இலங்கை, ஆப்கான் குறித்தும் கவனம்



(வோஷிங்டன்)

வோஷிங்டன் கடந்த வாரம், இடம்பெற்ற அமெரிக்க- இந்திய உயர் மட்டப் பேச்சுவார்த்தைகளில், இலங்கை விவகாரம் குறித்தும் கலந்துரையாடப்பட்டதாக தகவல்கள் வெளியாகின.

அமெரிக்க இராஜாங்கச் செயலர் மைக் போம்பியோ மற்றும் அமெரிக்கப் பாதுகாப்புச் செயலர் மார்க் எஸ்பர் ஆகியோர், இந்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் மற்றும் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் ஆகியோருடன் வோஷிங்டனில் இரண்டாவது அமெரிக்க- இந்திய 2+2 அமைச்சர்கள் மட்ட பேச்சுக்களை நடத்தினர்.

இந்தப் பேச்சுக்களின் பின்னர் கடந்த 18ஆம் திகதி, கூட்டு செய்தியாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட இந்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங், இச்சந்திப்பின் போது, தாங்கள் இலங்கை ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், நேபாளம் மற்றும் இந்தியப் பெருங்கடல் பிராந்திய நிலைமைகள் தொடர்பான மதிப்பீடுகளைப் பகிர்ந்து கொண்டதாகக் குறிப்பிட்டனர்.

இலங்கை தொடர்பாக விவாதிக்கப்பட்ட விடயம் என்னவென்று அவர் குறிப்பிட்டுக் கூறவில்லை.

என்றாலும், இலங்கையில் சீனாவின் தலையீடுகள் குறித்து கவலைகள் எழுப்பப்பட்டதாக நம்பப்படுகிறது என, இராஜதந்திர வட்டாரங்கள் கொழும்பு ஆங்கில வாரஇதழ் ஒன்றுக்குத் தெரிவித்தன.

இலங்கை உள்ளிட்ட தெற்காசியாவில் அதிகரித்து வரும் சீனாவின் தலையீடுகள் குறித்து இந்தியாவும் அமெரிக்காவும் தொடர்ந்து கவலை வெளியிட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# கற்றல் உபகரணங்கள் வழங்கல்



(யாழ்ப்பாணம்)

சித்திரமேழி பழனியானந்தன் சனசமூக நிலையம் முன்னெடுத்து வரும் "மேழியூர் கரங்கள்"செயற்றிட்ட குழுவினர் அண்மையில் கொக்குவில் ஸ்தான சி.சி.த.க. பாடசாலையைச் சேர்ந்த ஒரு வருடத்திற்கு தேவையான கற்றல் உபகரணங்களை வழங்கினர். மேழியூர் செல்வக்குமார் முகுந்தினி (ஜேர்மன்) தனது பிறந்த நாளை முன்னிட்டு கற்றல் உபகரண கொள்வனவுக்கான நிதியை வழங்கினார். (இ-5)

# வயல் நிலங்களுக்குள் கால்நடைகள் நெற் செய்கையாளர்கள் விசனம்



(யாழ்ப்பாணம்)

போக்கறப்பு, வெற்றிலைக்கேணி, ஆழியவளை ஆகிய கிராமங்களில் உள்ள நெல் வயல் நிலங்களுக்குள் கால் நடைகள் நுழைவதால் நெற் செய்கையாளர்கள் பாதிக்கப்படுவதாக விசனம் வெளியிடப்பட்டது.

நெற் செய்கைக்குரிய மழை வீழ்ச்சி கிடைத்துள்ள போதும் கட்டவிழ்த்து விடப்படும் கால்நடைகளால் நெற்செய்கை பாதிக்கப்படும் அபாய நிலை ஏற்பட்டுள்ளது. எனவே நெல் அறுவடை காலப் பகுதிவரை கால்நடைகளைக் கட்டி வளர்க்குமாறு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-10-64)



நாவற்குழி மகா வித்தியாலயத்தின் 150 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் பரிசில் நாள் நிகழ்வும் சாந்தகுமாரி பிரார்த்தனை மண்டப திறப்பு விழாவும் அண்மையில் அதிபர் சி.பவளகுமாரன் தலைமையில் பிரதான மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகதென்மராட்சி வலயக்கல்வி பணிப்பாளர் த.கிருபாகரன், சிறப்பு விருந்தினர்களாக முத்துத்தம்பி மகா வித்தியாலயத்தின் ஆசிரியரும் கந்தையா கனகம்மா நிதியத்தின் குடும்ப உறுப்பினருமான ஆ.தீபன்திலீசன், சாவகச்சேரி பிரதேச சபை தவிசாளர் க.வாமதேவன், சாவகச்சேரி கோட்டக்கல்வி அதிகாரி வ.நடராசா, வலயக்கல்வி அலுவலக அதிகாரிகள், சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

(படங்கள்:- கொடிகாமம் செய்தியாளர்)

## அதிகாரத்தைப் பயன்படுத்தி சாரதியை மாற்றிய சம்பிக்க

# மூன்று உயர் பொலிஸ் அதிகாரிகளுக்கு சிக்கல்
# சி.சி.டி. சிறப்புக்குழு சாட்சிகளுடன் விசாரணை

## விளக்கமறியலிலுள்ள பூஜிதவுக்கு புதிய பிரச்சினை





(கொழும்பு)

வாகன விபத்தொன்றினை அடுத்து, தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி சாரதியை மாற்றி, உண்மையை மறைத்து சாட்சியங்களை சோடித்து மோசடி செய்தமை தொடர்பிலான குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்ட முன்னாள் அமைச்சர் சம்பிக்க ரணவக்கவுக்கு குறித்த குற்றத்தை புரிய உடந்தையாக இருந்தமை தொடர்பில் மூன்று உயர் பொலிஸ் அதிகாரிகள் கைது செய்யப்படவுள்ளதாக தெரிய வருகின்றது.

இதுவரை கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவு எனும் சி.சி.டி. முன்னெடுத்த விசாரணைகளில் வெளிப்படுத்தப்பட்ட தகவல்களுக்கு அமைய, சட்டமா அதிபர் வழங்கிய ஆலோசனைகளின் கீழ் அம்மூவர் தொடர்பிலும் இறுதிக் கட்ட விசாரணைகள் முன்னெடுக்கப் படுவதாக அறியமுடிகின்றது.

குறித்த சம்பவம் இடம்பெற்ற 2016 ஆம் ஆண்டு காலப் பகுதியில் மேல்மாகாணத்துக்கு பொறுப்பாகவிருந்த சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரும் தற்போது கட்டாய விடுமுறையின் கீழுள்ளவரும், உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களை தடுக்காமை தொடர்பிலான சந்தேக நபர்களில் ஒருவருமான பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தர இந்த விடயத்தில் கைது செய்யப்படவுள்ள முக்கிய சந்தேக நபராக அடையாளம் காணப்பட்டார்.

இதனைவிட அக்காலப்பகுதியில் வெலிக்கடை பொலிஸ் பொறுப்பதிகாரியாக இருந்த தற்போதைய உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஹஸ்மடல மற்றும் அப்போது வெலிக்கடை பொலிஸ் நிலையத்தின் போக்குவரத்து பிரிவு பொறுப்பதிகாரியாக இருந்த பொலிஸ் பரிசோதகர் பெரேரா உள்ளிட்டோரும் இச்சிக்கலுக்கு முகம் கொடுத்துள்ளதாகவும் அவர்களிடம் சி.சி.டி. விசேட விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாகவும் அறிய முடிகின்றது.

கடந்த 2016 ஆம் ஆண்டு பெப்ரவரி 28 ஆம் திகதி மின்சக்தி எரிசக்தி அமைச்சுக்கு சொந்தமான கே.பி.7545 எனும் ஜீப் வண்டியில் டபிள்யூ.பி.டபிள்யூ.ஏ.கே 2013 எனும் மோட்டார் சைக்கிள் மோதி இந்த சர்ச்சைக்குரிய விபத்துச் சம்பவம் பதிவாகியிருந்தது.

இந்நிலையில் 2016 பெப்ரவரி 28 அன்று வெலிக்கடை பொலிஸ் நிலையத்தில் வாக்கு மூலங்களைப் பதிவு செய்தவர் பொலிஸ் உத்தியோகத்தர் குமார என்பவரே.

அவரைப் பொலிஸ் உத்தியோகத்தர் லக்ஷான் என்பவரே மேற்பார்வை செய்தார். இதன் போது வாக்குமூலங்களைப் பதிவு செய்யும் போது தனக்கு லக்ஷான் கொடுத்த ஆலோசனைக்கு அமைய சம்பிக்க ரணவக்கவின் பெயரை தான் வாக்கு மூலத்தில் உள்ளடக்கவில்லை என உத்தியோகத்தர் குமார தற்போது வாக்கு மூலம் அளித்துள்ளார்.

தனக்கு அவ்வாறு செயற்பட ஆலோசனை கொடுத்தவர் வெலிக்கடை பொலிஸ் நிலையத்தின் போக்குவரத்து பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் பெரேரா என லக்ஷானின் வாக்கு மூலத்தில் குறிப்பிடப்பட்டது.


பொலிஸ் பரிசோதகர் பெரேரா அப்போது வெலிக்கடை பொலிஸ் பொறுப்பதிகாரி ஹஸ்மடலவே அதற்குரிய ஆலோசனைகளை தனக்கு கொடுத்ததாகக் கூறியுள்ளார். ஹஸ்மடல இப்போது உதவி பொலிஸ் அத்தியட்சகராவார்.

இந்நிலையிலேயே அவருக்கும், அப்போது இந்த வாகன விபத்து தொடர்பில் நேரடியாக செயற்பட்டதாகக் கூறப்படும் தற்போது விளக்கமறியலில் உள்ள பூஜிதவுக்கு புதிய சிக்கல் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1924

### கவிஷ்னா

ஆடு, மாடுக்க படிக்க தெரியாதுனு இவனுக்க எப்படி சொல்லிப் புரிய வைப்பேன்.



### றொஷாந்தன்

மத்த பசங்களோட சேர்ந்து கெட்டுப் போய்டாதேனு சொன்னா அது மம்மி



மத்த பசங்களையும் உன்னோட சேர்த்து கெடுத்துடாத என்று சொன்ன அது டாடி.


### டிலைக்சன்

முன்னாடி படத்தில சாராயம் காய்ச்சினவன வில்லனா காட்டுனாங்க... இப்ப ஸ்கூல் நடத்துறவனையும் ஹாஸ்பிடல் நடத்துறவனையும் வில்லனா காட்டுறாங்க...



### லக்ஷனா

வருசா வருசம் குளிர்காலம் வருது, வெயில் காலம் வருது, மழைகாலம் வருது...



ஆனா நமக்கு மட்டும் விடிவு காலம் வரமாட்டெங்குது!

### இன்பம்

வயிறு வலிக்குதும்மா... வயித்தில ஒண்ணுமில்லேன்னா அப்படித்தான் வலிக்கும்!



அப்ப நீ நேத்து தலை வலின்னு சொன்னியே...

### வவி

உன் மண்டைல இருக்கிற களிமண் வெளியே தெரியுது பாரு பக்கி



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# நீரில் மூழ்கிய கிராமங்கள்; முப்படையினர் உதவியுடன் மீட்பு



(ஏறாவூர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக பல பகுதிகள் நீரில் மூழ்கியதுடன் சில பகுதிகளில் முப்படையினர் மீட்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட ஈரளக்குளம், கித்துள், வேப்பவட்டுவான் ஆகிய பகுதிகள் நீரில் மூழ்கி வருவதன் காரணமாக அப்பகுதியில் உள்ள மக்களை அங்கிருந்து ஆகாய மார்க்கமாகவும் மீட்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. அப்பகுதிகளிலிருந்து 73பேர் பாதுகாப்பாக மீட்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று முன்தினம் பிற்பகல் மாவடியோடையூடாக மீட்புப் பணிக்காக உழவியந்திரத்தில் இயந்திரப்படகு கொண்டுசென்ற போது உழவியந்திரம் வெள்ளத்தில் அடித்துச்செல்லப்பட்டது. இதன்போது அதில் பயணித்த மட்டக்களப்பு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலைய உத்தியோகத்தர் ஒருவர் உட்பட எட்டு பேர் படையினரால் மீட்கப்பட்டனர்.

இதேபோன்று, மட்டக்களப்பு மாவட்டத்தின் கிரான் பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட பிரம்படித்தீவு, முறுக்கன் தீவு, சாராவெளி, அம்புஸ்குடா போன்ற கிராமங்களில் வெள்ள நீர் அதிகரித்து வருவதன் காரணமாக அங்கிருந்து பொது மக்களை பாதுகாப்பாக படகு மூலம் வெளியேற்றும் பணிகளில் படையினரும், அனர்த்த அபாயக் குறைப்புப் பிரிவினரும் பிரதேச இளைஞர்களும் ஈடுபட்டு வருகின்றனர். (இ-7)

# சீரற்ற காலநிலையால் இம்மாதம் இதுவரை 9,962 குடும்பங்களைச் சேர்ந்த 34,842 பேர் பாதிப்பு!

(கொழும்பு)

நாட்டில் கடந்த 2 ஆம் திகதி முதல் நேற்றுக் காலை 9 மணி வரையான காலப்பகுதியில் சீரற்ற காலநிலை காரணமாக ஏற்பட்ட அனர்த்தங்களால் 12 மாவட்டங்களில் 9962 குடும்பங்களைச் சேர்ந்த 34ஆயிரத்து 842 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்தது.

பதுளை, மொனராகலை, மட்டக்களப்பு, அம்பாறை, கண்டி, நுவரெலியா, மாத்தளை, அம்பாந்தோட்டை, குருநாகல், புத்தளம், கேகாலை, அநுராதபுரம் மற்றும் பொலநறுவை உள்ளிட்ட மாவட்டங்களைச் சேர்ந்தோரே இவ்வாறு பாதிக்கப்பட்டனர்.

அத்துடன் குறித்த மாவட்டங்களில் ஏற்பட்டுள்ள அனர்த்தம் காரணமாக 3 பேர் உயிரிழந்ததுடன், 6 பேர் படு காயமடைந்தனர்.

மேலும் 49 வீடுகள் முற்றாகவும், 1017 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்தன.

இதேவேளை இந்த அனர்த்தம் காரணமாக 4904 குடும்பங்களைச் சேர்ந்த 16 ஆயிரத்து 892 பேர் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டதாகவும் அனர்த்த முகாமைத்துவ மத் திய நிலையம் தெரிவித்தது. (இ-7)

# எம்.சி.சி.உடன்படிக்கையின் நோக்கம் விசாரணைக்கான காலப்பகுதி தொடர்பில் தெரிவிக்கப்படவில்லை-புதிய குழுவின் தலைவர்

(கொழும்பு)

அமெரிக்காவுடன் மேற்கொள்ளவுள்ள மிலேனியம் சவால்கள் ஒப்பந்தத்தை மீளாய்வு செய்வதற்காக புதிதாக நியமிக்கப்பட்ட குழுவுக்கான நோக்கம் மற்றும் விசாரணைக்கான காலப்பகுதி என்பன தற்போது வரை எமக்கு உரிய வகையில் தெரிவிக்கப்படவில்லை என எம்.சி.சி. தொடர்பில் ஆய்வு செய்ய நியமிக்கப்பட்ட குழுவின் தலைவர் கலாநிதி லலித் குணருவன் தெரிவித்தார்.

இலங்கை - அமெரிக்க நாடுகளுக்கு இடையில் செய்து கொள்ளவிருந்த மிலேனியம் சவால்கள் அபிவிருத்தி உடன்படிக்கையை மீளாய்வு செய்யும் நோக்கத்தில் அதனை தற்காலிகமாக இடைநிறுத்த அரசாங்கம் தீர்மானம் எடுத்தது.

ஏற்கனவே இந்த உடன்படிக்கையில் அடையாளம் காணப்பட்ட பல துறைகளின் வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக மிலேனியம் சவால்கள் திட்ட அலுவலகத்தால் வழங்கப்படும் முக்கிய நிதியை பெற்றுக்கொள்வதற்கு அமெரிக்காவின் மிலேனியம் சவால்கள் கூட்டுத்தாபனத்திற்கும் இலங்கைக்கும் இடையில் உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்காக 2019.10.29 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.

இருப்பினும் இந்தத் திட்டம் தொடர்பில் பல்வேறு தரப்பினரால் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்களை கவனத்தில் கொண்டு மிலேனியம் சவால்கள் திட்டம் தொடர்பில் முழுமையாக மீளாய்வு செய்து அரசாங்கத்திற்கு அறிக்கை சமர்ப்பிக்க குழு ஒன்றை நியமிப்பதற்கும் அந்தக் குழுவால் சிபாரிசுகளை சமர்ப்பிக்கும் வரையில் 2019.10.29 அன்று அமைச்சரவையினால் தீர்மானிக்கப்பட்ட வகையில் உடன்படிக்கை நடவடிக்கைகளை இடை நிறுத்துவதற்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் சமர்ப்பிக்கப்பட்ட பரிந்துரைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

அதற்கமைய இந்த உடன்படிக்கையை ஆராயும் வகையில் பேராசிரியர் லலித்த ஸ்ரீ குணருவன் தலைமையில் போக்குவரத்து அமைச்சின் முன்னாள் செயலாளர் டி.எஸ். ஜெயவீர, ஜனாதிபதி சட்டத்தரணி நிஹால் ஜெயவர்த்தன மற்றும் நாலக்க ஜயவீர என்பவர்கள் உள்ளடக்கிய நால்வர் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டது.

இந்தக் குழு உடன்படிக்கை குறித்து ஆராய்ந்து அமைச்சரவைக்கு உரிய பரிந்துரைகளை முன்வைத்த பின்னர் அடுத்த கட்டமாக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்றும் கடந்த வாரம் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் காட்டுமிராண்டித்தனமானவை

## இளவரசர் சாள்ஸ் கண்டனம்



(லண்டன்)

இலங்கையில் கிறிஸ்தவ தேவாலயங்களையும், நட்சத்திர ஹோட்டல்களையும் இலக்கு வைத்து உயிர்த்த ஞாயிறு தினத்தன்று நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல்கள் முற்றிலும் காட்டுமிராண்டித்தனமானவை என்றும், அவை பிரிவினையை விடுத்து சகிப்புத்தன்மையையும், வெறுப்பை விடுத்து அன்பை விரும்புவோர் மீதும் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் என்றும் பிரித்தானிய வேல்ஸ் இளவரசர் சாள்ஸ் தெரிவித்தார்.

பிரித்தானியாவின் கிழக்குப் பிராந்தியத்தில் இடம்பெற்ற கிறிஸ்தவ கூட்டமொன்றில் இலங்கையில் நடைபெற்ற பயங்கரவாதத் தாக்குதல்கள் பற்றிக் கருத்து வெளியிட்ட சாள்ஸ், அவை "உலகெங்கிலும் உள்ள மதச் சுதந்திரத்தின் மீதான தாக்குதலாகும்" என்றும் தெரிவித்தார்.

கடந்த ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தினத்தன்று கொழும்பிலுள்ள புனித அந்தோனியார் தேவாலயம், நீர்கொழும்பிலுள்ள புனித செபஸ்ரியன் தேவாலயம், மட்டக்களப்பு சீயோன் தேவாலயம் மற்றும் பிரபல நட்சத்திர ஹோட்டல்களை இலக்குவைத்து நடத்தப்பட்ட தற்கொலை குண்டுத்தாக்குதல்களில் 250 இற்கும் அதிகமானோர் கொல்லப்பட்டனர்.

"உயிர்த்த ஞாயிறு தினத்தில் இலங்கையில் நடத்தப்பட்ட காட்டுமிராண்டித்தனமான தாக்குதல்களின் காரணமாக கொல்லப்பட்டவர்களை நினைவுகூருபவர்கள் மற்றும் அத்தாக்குதல்களால் வாழ்க்கையில் பாரிய திருப்பத்தை எதிர்கொண்டவர்கள் ஆகியோருக்கான எனது ஒருமைப்பாட்டை வெளிப்படுத்தும் விதமாகவே நான் இங்கு வருகை தந்திருக்கிறேன். அன்றைய தினம் இடம்பெற்ற பயங்கரமான இழப்புக்கள் ஏப்ரல் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையை இந்த நவீன யுகத்தில் கிறிஸ்தவர்களை இலக்குவைத்து மேற்கொள்ளப்பட்ட பெரும் வன்முறைகள் அடங்கிய மிகமோசமான நாளாக மாற்றிவிட்டது" என்று இளவரசர் சாள்ஸ் அவருடைய உரையில் தெரிவித்தார்

"அச்சம்பவத்தால் நீங்களும், கிறிஸ்தவர்களும் தாங்கிக்கொண்ட காயங்களை எந்தவொரு வார்த்தைகளைக் கொண்டும் ஆற்றிவிட முடியாது. ஆனால் நானும், இந்த நாட்டில் வாழும் மேலும் பலரும் நீங்கள் அடைந்த வேதனை தொடர்பிலும் உங்களது நலன் குறித்தும் பெரிதும் அக்கறையுடன் சிந்திக்கின்றோம் என்பதை அறியத்தர விரும்புகின்றேன்.


இந்தப் பயங்கரவாதத் தாக்குதல்கள் உலகெங்கிலும் உள்ள மதச் சுதந்திரத் தின் மீதும், பிரிவினையை விடுத்து சகிப்புத் தன்மையை யும், வெறுப்பை விடுத்து அன்பை விரும்புவோர் மீதும் மேற் கொள்ளப்பட்ட தாக்குதல்களாகும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 280 | 250 | 200 | 220 | 250 |
| உருளைக்கிழங்கு | 180 | 190 | 180 | 155 | 200 |
| பச்சைமிளகாய் | 350 | 350 | 220 | 300 | 350 |
| தக்காளி | 160 | 140 | 140 | 150 | 240 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 120 | 220 | 90 | 100 |
| கோவா | 140 | 120 | 140 | 110 | 160 |
| கரட் | 300 | 360 | 240 | 240 | 400 |
| பூசணி | 60 | 50 | 50 | 70 | 80 |
| புபோல் | 180 | 200 | 160 | 110 | 160 |
| வாழைக்காய் | 80 | 80 | 80 | 100 | 120 |
| சின்ன வெங்காயம் | 500 | 450 | — | 400 | 600 |
| பெரிய வெங்காயம் | 160 | 180 | 160 | 160 | 150 |
| பாகற்காய் | 350 | 400 | 320 | 310 | 120 |
| வெண்டிக்காய் | 140 | 140 | 80 | 80 | 120 |
| கருணைக் கிழங்கு | 80 | 80 | 80 | 90 | 120 |
| பயற்றங்காய் | 200 | 250 | 200 | 180 | 240 |
| லீக்ஸ் | 350 | 380 | 360 | 350 | 400 |
| பீற்றூட் | 260 | 220 | 200 | 90 | 300 |
| கறிமிளகாய் | 300 | 280 | 220 | 240 | 280 |
| முருங்கைக்காய் | — | 1600 | 800 | 800 | 800 |
| போஞ்சி | 250 | 280 | 280 | 260 | 200 |
| கத்தரிதம்புள்ள | 250 | 160 | — | 200 | 240 |
| கீரை-1பிடி | 70 | 50 | 60 | 60 | 80 |
| தேசிக்காய் | 60 | 60 | 80 | 80 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 50 | 30-60 | 50 | 30-50 |
| இராசவள்ளி | 200 | 400 | 200 | 220 | 220 |
| வெங்காயப்பூ | 400 | 400 | — | — | — |
| முள்ளங்கி | 120 | 140 | 130 | 100 | 160 |
| பொன்னாங்காணி | 50 | 40 | 60 | 30 | 40 |
| வல்லாரை | 15 | 80 | 30 | 30 | 30 |
| ஈரப்பலா | — | 110 | — | 160 | 80 |




# எங்கிருந்தோ வந்தார்



இன்டர்வியூ அறையிலிருந்து வெளியே வந்தவனை நிறுத்தி வர்மா கேட்டான் "எப்படி இருந்தது இன்டர்வியூ?"

"ஈஸியாத்தான் இருந்தது. என் அனுபவத்தைப்பத்தித்தான் கேட்டாங்க."

"நீங்க பண்ணின தப்பையெல்லாம் சொன்னீங்களா?"

"அவங்ககிட்ட எதையும் மறைக்க முடியாது. அவங்ககிட்ட நம்மளைப் பத்தின எல்லா விபரங்களும் இருக்கு. என் அம்மா வயித்துல இருந்தபோது எடுத்த ஸ்கேனைக் கூட வச்சிருப்பாங்க போலிருக்கு!"

"எப்படி?"

"அங்கே குப்தான்னு ஒத்தரு இருக்காரு. அவர் லப்டொப்பில் நம்ம டோஸியே ஃபுல்லா இருக்கும் போலிருக்கு. நான் சொல்லாம மறைச்ச விடயத்தையெல்லாம் லப்டொப்பைப் பாத்துப் புட்டுப் புட்டு வச்சுட்டாரு!"

"அப்படியா?" என்றான் வர்மா ஆச்சரியத்துடன்.

"ஆமாம். "நீ போலி டிகிரி சர்ட்டிஃபிகேட் கொடுத்துத்தானே வேலையில சேர்ந்தே?"ன்னு கேட்டாங்க! நான் அசந்துட்டேன். அது எப்படி அவங்களுக்குத் தெரிஞ்சதுன்னே தெரியல. இதுவரைக்கும் அது யாருக்கும் தெரியாது. என்னோட முப்பது வருஷ கேரியர்ல இதை யாருமே கண்டு பிடிக்கல!"

"உங்களுக்குப் போலி சர்ட்டிஃபிகேட் தயாரிச்சுக் கொடுத்த ஆளே போட்டுக் கொடுத்திருக்கலாமே!"

"அவன் எத்தனையோ பேருக்குப் போலி சர்ட்டிஃபிகேட் தயாரிச்சுக் கொடுத்திருக்கான். அவனோட ஆயிரம் கஸ்டமர்கள்ள நானும் ஒருத்தன். என்னைப் பத்தி அவன் ஏன் சொல்லணும் - அதுவும் இவங்ககிட்ட? எனக்குப் புரியல."

"சரி. அதுக்கு என்ன சொன்னாங்க? அதுக்காக உங்களை தண்டிக்கப் போறாங்களாமா?"

"தெரியல. நான் நிறைய சாதனைகள், நல்ல விடயங்கள் பண்ணி இருக்கேனே! அதையும் அவங்க சொன்னாங்க. நான் மறந்து போன சில நல்ல காரியங்களைக் கூட அவங்க லப்டொப்பிலிருந்து பார்த்துச் சொல்லி என்னைப் பாராட்டினாங்களே!"

ஓ! என்றான் வர்மா ஆச்சரியத்துடன்.

அப்போது ஒரு இளம் பெண் அங்கே வந்து "மிஸ்டர் காசி! இப்படி வாங்க!" என்று சொல்லி அவனை அருகிலிருந்த ஒரு அறைக்குள் அழைத்துப்போனாள். அந்த அறைக்கதவு சில விநாடிகள் திறந்து மூடியபோது அந்த அறையின் பளபளப்பான தரையும் பளிச்சென்று துலங்கிய சுவர்களும் அதை ஒரு உயர் தரமான ஹோட்டல் சுவீட் போலத் தோற்றமளிக்கச் செய்தன. அறையிலிருந்து வெளிப்பட்ட குளிர்ந்த காற்றின் அற்புதமான மணமும், குளிர்ச்சியும் பல விநாடிகள் நீடித்தன. அறைக்கு வெளியே பாரடைஸ்-103 என்ற எழுத்துக்கள் வாயில் நிலைமீது எழுதப்பட்டிருந்ததை வர்மா கவனித்தான். "எங்கே அழைத்துப் போகிறார்கள் இவனை?"

சற்று நேரம் கழித்து வர்மா உள்ளே அழைக்கப்பட்டான்.

அரைமணி நேரத்துக்குப் பிறகும் இன்டர்வியூ முடியவில்லை. வர்மாவின் முகம் வியர்த்திருந்தது. "இது என்ன இன்டர்வியூவா, பொலிஸ்விசாரணையா?" என்று சில சமயம் அவனுக்குத் தோன்றியது.

"மிஸ்டர் வர்மா, ஒரு முக்கியமான விடயத்தை நீங்கள் மறைத்து விட்டீர்கள்" என்றார் இன்டர்வியூ செய்தவர்.

"எதைச் சொல்கிறீர்கள்?" என்றான் வர்மா. சொல்லும் போதே அவன் வியர்வைப் பெருக்கு அதிகரித்தது.

"ஒரு சமயம் உங்களுக்கு வேலை போய் விட்டது. அதற்குப் பிறகு நீங்கள் நீண்ட நாட்கள் வேலை கிடைக்காமல் மிகவும் கஷ்டப்பட்டீர்கள். நடுத்தெருவுக்கு வர வேண்டிய நிலைமை. அப்போது அர்த்தநாரி என்ற ஒருவர் உங்கள் மீது இரக்கப்பட்டு உங்களுக்கு வேலை கொடுத்தார். குறுகிய காலத்திலேயே உங்கள் மீது நம்பிக்கை வைத்து உங்களிடம் நிறையப் பொறுப்புகளை ஒப்படைத்தார். ஆனால் நீங்கள் அவர் தொழில் ரகசியங்களைத் தெரிந்து கொண்டபின் அவருடைய போட்டி நிறுவனத்தில் வேலைக்குச் சேர்ந்து அவருடைய வாடிக்கையாளர்களை உங்கள் புதிய நிறுவனத்துக்கு இழுத்து அவர் தொழிலையே அழித்து விட்டீர்கள். சிறிது காலத்தில் அவர் தன் தொழிலையே மூட வேண்டிய நிலைமை ஏற்பட்டது. உங்களுக்கு உதவி செய்ததற்கு அவரிடம் நன்றி காட்ட வேண்டிய நீங்கள் அவருக்கு துரோகம் செய்து விட்டீர்கள்."

"சேர்! தொழில், வியாபாரம் இவற்றில் இதெல்லாம் சகஜம் தான்.." என்று இழுத்தான் வர்மா.

"நன்றி மறப்பது மன்னிக்க முடியாத குற்றம். உதவி செய்தவருக்கு துரோகம் செய்வது தண்டிக்கப்பட வேண்டிய குற்றம்" என்று சொல்லி அவர் பஸ்ஸரை அழுத்தினார். ஒரு ஆள் உள்ளே வந்தான். அவர் தலையசைத்ததும், அவன் வர்மாவின் கையைப் பிடித்து இழுத்தான்.

"சேர்! விடுங்க. என்ன இது? நான் உங்கள் பின்னால் வருகிறேன். கையைப் பிடித்து இழுத்துப் போவது என்பது என்ன வ்ழக்கம்?" என்று முரண்டினான் வர்மா.

அவன் வர்மாவை இழுத்த வேகத்தில் வர்மா தரையில் விழ அவனைத் தரையிலேயே இழுத்துக்கொண்டு போனான் அந்த ஆள். வர்மா எழுந்து நிற்பதற்குக் கூட அவன் வாய்ப்புக் கொடுக்கவில்லை.

ஒரு அறையின் கதவைத் திறந்து வர்மாவை உள்ளே தள்ளினான் அவன். வர்மா தடுமாறி எழுந்து நின்றான். அறை வெளிச்சமில்லாமல் அரை இருட்டாக இருந்தது. தரை கரடு முரடாகக் காலில் குத்தியது. தான் இழுத்து வரப்பட்டபோது, தன் ஷூ நழுவி விழுந்திருக்க வேண்டும் என்று நினைத்தான் வர்மா. "இரண்டு காலிலிருந்துமா ஷூ கழன்று விழுந்திருக்கும்?"

அவனை யோசிக்க விடாமல் குப்பென்று ஒரு துர்நாற்றம் வீசியது.

"என்ன அறை இது? என்னை ஏன் இங்கே கொண்டு வந்திருக்கிறீர்கள்?"

"இதுதான் நீ இருக்கப்போகும் இடம்" என்றான் அந்த ஆள்.

"ஏன்?" என்றான் வர்மா கோபத்துடன்.

அப்போது அங்கிருந்த ஒரு ஃபோன் அடித்தது. அந்த ஆள் அதை எடுத்துப் பேசி விட்டு. "சேரிடமே உன் சந்தேகங்களைக் கேட்டுக்கொள்" என்றான்.

வர்மா ஃபோனை வாங்கிக் கொண்டு. "சேர்! ஏன் என்னை இங்கே அடைத்து வைக்கிறீர்கள்?" என்றான்.

"அதுதான் சொன்னேனே! நீ நன்றி மறந்த குற்றத்துக்கான தண்டனை இது. "

"நான் எவ்வளவோ நல்லது செய்திருக்கிறேனே, அதற்கெல்லாம் மதிப்பில்லையா?"

"வேறு குற்றமாக இருந்தால் நீ செய்த நல்லவற்றைக் கணக்கில் கொள்ள முடியும். ஆனால் நன்றி மறந்த செயலுக்கு நீ செய்த நல்லவற்றைப் பரிகாரமாகக் கொள்ள முடியாது."

போலிச் சான்றிதழ் கொடுத்து வேலைக்குச் சேர்ந்தவன் ஒரு சொகுசான அறைக்கு அழைத்துச் செல்லப்பட்டது வர்மாவின் நினைவுக்கு வந்தது. அந்த அறையின் வாசலில் பாரடைஸ்-103 என்று எழுதப்பட்டிருந்ததே! அப்படியானால் இது....?

"இது என்ன இடம் சேர்?" என்றான் வர்மா கலவரத்துடன்.

"நீ நினைப்பது சரிதான். நரகம் தான் அது" என்றார் அவர் சிரித்துக் கொண்டே "என்னை இங்கே தள்ள நீங்கள் யார்? உங்கள் பெயர் ?""தர்மராஜன்."

**குறள் 110**

**எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு**

**பொருள்:**

**எந்த அறத்தை மீறினாலும் அதன் விளைவிலிருந்து மீள வழி உண்டு. ஆனால், ஒருவர் செய்த உதவியைமறந்து நன்றி கெட்டதனமாக தொடர்ந்து கொள்பவர்களுக்கு மீட்சியே இல்லை.**

## பழமொழிகள்

- நல்ல மாட்டுக்கு ஒரு சூடு நல்ல பெண்டாட்டிக்கு ஒரு வார்த்தை.
- நிலவுக்கு அஞ்சிப் பரதேசம் போவது போல்.
- நிழலின் அருமை வெயிலில் தெரியும்.
- நிறைகுடம் தளம்பாது.
- பசி வந்தால் பத்தும் பறந்திடும்.
- படிக்கிறது தேவாரம் இடிக்கிறது சிவன் கோயில்.
- பணத்தைக் கண்டால் பிணமும் வாய் திறக்கும்.
- பந்திக்கு முந்து படைக்குப் பிந்து.
- பனங்காட்டு நரி சலசலப்புக்கு அஞ்சாது.



ரி.ராஜன்,
7, யாழ்.நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயம், ரேவதி வீடு, SOS சிறுவர் கிராமம்.

செருக்கு தேவர்களை அசுரர்களாக மாற்றுவது.
அடக்கம் மனிதர்களை தேவர்களாக்குவது.

– அகஸ்டின்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## வேலைவாய்ப்பில் தமிழர்களுக்கு ஓரவஞ்சகம் செய்ய விடாதீர்கள்

இலங்கையின் தமிழ் இனம் விடுதலைப் போராட்டத்தை முன்னெடுப்பதற்கு தமிழ் இளைஞர்களை கல்வி, வேலைவாய்ப்பு என்பவற்றில் வஞ்சித்த அரச செயலே மூல காரணம் எனலாம்.

கல்வியில் மிகத் திறமையாக விளங்கிய தமிழ் இளைஞர்களை தரப்படுத்தல் மூலமாக ஓரங்கட்டி விட, அவர்களால் எதுவும் செய்ய முடியாமல் போயிற்று.

திறமைக்கு முன்னுரிமை கொடுங்கள் என்று கேட்டபோது அது பற்றியெல்லாம் பேரினவாத ஆட்சியாளர்கள் கவனம் செலுத்தவில்லை. அதே போன்று வேலைவாய்ப்பிலும் தமிழ் இளைஞர்கள் கைவிடப்பட்டனர்.இதனால் ஏற்பட்ட பின்விளைவுகள் என்னவென்பது யாவரும் அறிந்ததே.

முப்பது ஆண்டு காலப் போர் இந்த மண்ணில் நடந்தேறியதால் ஏற்பட்ட உயிரிழப்புக்கள், சொத்தழிவுகள் கொஞ்சமல்ல. இவற்றோடு எல்லாம் முடிந்துவிட்டது என்றால் இல்லை. மீண்டும் பழைய பல்லக்கில் ஏறி பவனி வருவதை நல்லாட்சி அரசாங்கமும் செய்து முடித்தது.

தமிழர் தாயகத்தில் உள்ள அரச அமைப்புகளில் சிங்கள இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்பை வழங்குகின்ற திட்டமிட்ட சதி வேலையை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் செய்தது.

இவ்வாறாக அன்று தொடக்கம் இன்று வரை தமிழ் இளைஞர், யுவதிகள் கல்வியிலும் வேலைவாய்ப்பிலும் ஓரங்கட்டப்பட்டு வருகின்றனர்.

இந்நிலையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசு ஒரு இலட்சம் இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்போவதாக அறிவித்துள்ளது. வறுமை நிலையில் உள்ள குடும்பங்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குவது என்ற தீர்மானம் மனதிற்கு ஆறுதலை தருகிறது.

ஏழைக் குடும்பங்களில் ஒவ்வொரு அரச உத்தியோகம் வந்துவிட்டால் அந்தக் குடும்பத்தின் ஜீவனோபாயம் அச்சமின்றி நடந்தாகும்.

எனவே ஒரு இலட்சம் இளைஞர் யுவதிகளுக்கு வேலைவாய்ப்பை வழங்குதல் என்ற ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தீர்மானத்தை வரவேற்கும் அதே நேரம் இந்த வேலைவாய்ப்பில், தமிழர் தாயகத்தில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள், மாவீரர் மற்றும் முன்னாள் போராளிகளின் குடும்பங்கள், அங்கவீனமுற்றவர்கள் ஆகியோர் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டு அந்தக் குடும்பங்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட வேண்டும்.

உண்மையில் தென்பகுதியில் உள்ள இளைஞர் யுவதிகளுக்கான வேலைவாய்ப்புச் சந்தர்ப்பம் அதிகம்.தனியார் நிறுவனங்கள், உல்லாச விடுதிகள் என ஏகப்பட்ட அமைப்புகளில் அதிகரித்த வேதனத்துடன் சுவடிய வேலைவாய்ப்பு அவர்களுக்கு உண்டு.

ஆனால் எங்கள் தமிழ் இளைஞர்களைப் பொறுத்தவரை அவர்களுக்கான வேலைவாய்ப்பு என்பது மிகமிகக் குறைவு. எனவே இந்த ஏற்றத்தாழ்வை நிவர்த்தி செய்யும் பொருட்டு வடக்கு கிழக்கு தமிழர் தாயகத்தில் விசேட ஏற்பாட்டின் கீழ் வேலைவாய்ப்பு வழங்க ஜனாதிபதி கோட்டாபய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இது தவிர ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்த போது வடக்கு கிழக்கில் உள்ள அரச அமைப்பில் சிங்கள இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டமை மிகப்பெரும் அநியாயம் என்பதால் தமிழர் தாயகத்தில் வேலைவாய்ப்புப் பெற்ற சிங்கள இளைஞர்களை தென்பகுதிக்கு இடம்மாற்றம் செய்து அவர்களின் இடங்களுக்கு தமிழ் இளைஞர் யுவதிகளை நியமிக்க வேண்டும்.இவ்வாறு செய்வது தமிழ் மக்களிடையே மிகுந்த வரவேற்பைப் பெறும்.

# வடக்கில் சட்டவிரோத செயற்பாடுகள் தொடர்பில் விரைவில் உயர் மட்ட மாநாடு நடத்தப்படும்

### அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உறுதி

(யாழ்ப்பாணம்)

வடக்கில் இடம்பெறும் சட்டவிரோத செயற்பாடுகளை முடிவுக்குக் கொண்டு வரும் வகையில் உயர் மட்ட மாநாடு விரைவில் நடத்தப்படும் என கடற்றொழில் மற்றும் நீரியல் வள அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

யாழில் இடம்பெற்று வரும் சட்டவிரோத செயற்பாடுகள் தொடர்பில் கடந்த வெள்ளிக்கிழமை அவரது கட்சித் தலைமையகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் எனத் தங்களை அடையாளப்படுத்துவோர் கடந்த ஆட்சியில் தங்கள் பதவிகளைக் காப்பாற்றினார்களே தவிர மக்களைக் காப்பாற்றவில்லை.

யாழில் இடம்பெற்று வரும் சட்டவிரோத மணல் கடத்தல், போதைவஸ்து வியாபாரம், வாள்வெட்டு முதலான சமூக விரோதச் செயற்பாடுகள் கடந்த ஆட்சிக் காலத்திலே அதிகரித்துக் காணப்பட்டன.

தற்போது யாழ் மாவட்டத்தில் இடையிடையே சமூக விரோதக் கும்பலின் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றது.குறித்த சமூக விரோதச் செயற்பாடுகள் தொடர்பில் இலங்கைப் பொலிஸ்மா அதிபருடன் தொலைபேசியில் கலந்துரையாடி உள்ளதோடு சட்டவிரோதச் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவது தொடர்பில்மாநாடு நடத்துவதற்கு அமைச்சரவை அனுமதியும் பெற்றுள்ளேன்.

இவ் மாநாட்டிற்கான திகதி விரைவில் அறிவிக்கப்படவுள்ளதோடு குறித்த மாநாட்டில் சமூக அக்கறை கொண்ட ஊடகவியலாளர்களும், சமூக ஆர்வலர்களும் கலந்து கொள்ளலாம் என அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ஞா-10)

## போதைப்பொருளுடன் சிவனொளிபாத மலைக்கு சென்ற 14 பேர் கைது

(ஹட்டன்)

ஹட்டன் வழியாக போதைப்பொருளுடன் சிவனொளிபாதமலை யாத்திரையில் ஈடுபட்ட 14 இளைஞர்கள் ஹட்டன் பொலிஸ் தொகுதி ஊழல் ஒழிப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் பிரிவு நேற்று முன்தினம் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போது இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

ஹட்டன் பொலிஸ் அத்தியட்சகரின் ஆலோசனைக்கு அமைவாக சிவனொளிபாதமலை யாத்திரையில்போதைப் பொருளை எடுத்து வருவோரை கைது செய்வதற்காக ஹட்டன்-கொழும்பு பிரதான வீதியில் விசேட தேடுதல் நடவடிக்கை இடம்பெற்று வருகின்றது.

பொலிஸார் மோப்ப நாய் உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட இந்த நடவடிக்கையின் போது இந்த சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

ஹெரோயின், ஐஸ், கேரள கஞ்சா முதலானவை அவர்களிடம் இருந்து கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட இளைஞர்கள் 20-30 வயதிற்கு இடைப்பட்டவர்கள்.

இந்த சந்தேக நபர்கள் கொழும்பு, கம்பஹா, காலி, எல்பிட்டிய, அவிசாவளை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ஞா)

## வடமராட்சிப் பகுதியில் கால் நடைகள் திருட்டு

### பொலிஸில் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

கரணவாய் மற்றும் மத்தனிப் பகுதிகளில் கால் நடைகள் திருடப்பட்டுள்ளதாக நெல்லியடிப் பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

கரவெட்டிப் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட கரணவாய் தெற்கு ஜே/ 348 கிராம சேவையாளர் பிரிவில் கடந்த 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வீட்டு வளவில் கட்டப்பட்ட இரு பசுமாடுகளையும், ஒரு ஆட்டினையும் இனந்தெரியாத நபர்கள் களவாடிச் சென்ற நிலையில் ஆட்டினை மட்டும் குறித்த பிரதேசத்தில் உள்ள சோனப்பு இந்து மயானத்தில் கட்டிவிட்டுச் சென்றனர்.

அதனை அடுத்து நேற்று முன்தினம் சனிக்கிழமை மத்தனி என்ற பகுதியில் அதிக விலை கொண்ட பால் கொடுக்கும் பசு மாட்டையும் இனந்தெரியாத நபர்கள் களவாடிச் சென்றுள்ளனர்.

இச்சம்பவங்கள் தொடர்பில் நெல்லியடி பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்ட நிலையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டனர். (ஞா-10.60)

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

சுய புத்தியில்லாத மனிதன் வாழ்வில் என்றும் ஒளியைக் காண முடிவதில்லை. தன்னம்பிக்கை இருந்தால் சுயபுத்தி தானாக வந்துவிடும்.

-ரவீந்திரநாத் தாகூர்

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## ஆன்மாவின் மூன்று நிலைகள்



காமதேனு : தேனு என்பது பசு. ஆன்மீக உலகில் பசு என்ற சொல் ஆன்மாவைக் குறிக்கும். காமம் என்பது இச்சையைக் குறிக்கும் சொல். காமதேனு எனில் இச்சையை இயல்பாக உடைய ஆன்மா என்று பொருள். உடல் வரையில் எல்லை கட்டிப் புலன்கள் வழியே புறப்பொருள் கவர்ச்சியால் ஈர்க்கப் பெற்று ஆன்மா செயல் புரியும்போது விளைவுகள் பெரும்பாலும் சலிப்பும், துன்பமும் தரும். இவ்வகையில் இச்சைக்கே ஆன்மாவின் ஆற்றல் பயன்படும். முதல் கட்டம் காமதேனு.

கற்பகம் : கற்பூஅகம் என்ற சொற்களின் இணைப்புத் தான் கற்பகம். இங்கு ஆன்மா உயிர் வரையில் உணர்ந்து விரிந்து ஆற்றும் தகுதி பெற்ற நிலை இச்சித்து. இச்சித்து, துய்த்துத் துய்த்துச் சலிப்பும் துன்பமும் பெற்ற ஆன்மா சிந்தனையில் ஆழ்கின்றது. புற இயக்கம் விடுத்துத் தன்னடக்கம் உண்டாகி உயிர்நிலையின் சிறப்பை அறிகின்றது. அறிவைப் படர்க்கை ஆற்றலாகவே அறிந்து கொள்கிறது. விளைவறிந்து செயலாற்றும் தகைமை ஓங்குகிறது. செய்யத்தக்கன, தகாதன இவற்றை விளங்கி, விளக்க வழியில் தன்தேவை, பழக்கம் இவற்றை ஒழுங்குபடுத்திக் கொள்ளுகிறது. இந்த அளவில் அறிவு உறுதிபெற்ற போது ஒழுங்கும் இயல்பாகின்றது. உறுதியும், ஒழுக்கமும் பெற்ற ஆன்மாவின் அந்த மதிப்புள்ள உயர்நிலை தான் கற்பூஅகம். அகம் என்றால் உள்ளம். கற்பு எனில் உறுதியும் ஒழுக்கமும் பெற்ற நிலை. இது ஆன்மாவின் வளர்ச்சி நிலையில் இரண்டாவது கட்டம்.

சிந்தாமணி : சிந்தை மணியான நிலை. அதாவது சலனமற்று, புலனடக்கம் பெற்று, உறுதி பெற்ற நிலை. தன் உயிர்நிலை உணர்ந்த பின் அங்கு கிட்டிய ஆற்றலால் உயிருக்கு மூல நிலை அறியும் ஆர்வம் எழுகின்றது. சிந்தனை உயர்ந்து உயிர் விரைவைச் சிறிது சிறிதாகத் தவத்தின் மூலம் குறைத்துக் கொண்டே போய் முடிவாகத்தான் இயக்கமற்ற அமைதி நிலையைப் பெறுகின்றது. மெய்ப் பொருளாகி விடுகின்றது. தனது இருப்பு நிலை அணு முதற்கொண்டு அண்டங்கள் அனைத்துக்கும் அப்பாலுள்ள பெருவெளி வரையில் நிறைந்து இருக்கும் பெருமையினை உணர்ந்து கொள்கின்றது.

தேவைக்கும் இருப்புக்கும் இடையே உள்ள தெய்வீகத் தொடர்பும் அதன் ஒழுங்கமைப்பும் உணர்ந்து ஆன்மா முழு அமைதி பெறுகின்றது. இந்த நிலைதான் சிந்தாமணி. இதுதான் மனிதனின் முழுமைப்பேறு. இதற்கு ஆன்மா தன்னையறிய வேண்டும். அப்போது தான் அமைதி பிறக்கும்.

# வெற்றி நிச்சயம் – 2020

அமரர்களான வெக்டர் பொ.வேலாயுதம், ஆ.மகாதேவன் ஆகியோரின் ஞாபகார்த்தமாக நடைபெறும் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை

## உயிரியல் பாடத்தின் முதன்மைப் பெறுபேறுகள் - 2020 (உ/த) உயிரியல் பிரிவு

| சுட்டெண் | பெயர் | பாடசாலை | புள்ளிகள் | | | Averge Z | Rank |
|---|---|---|---|---|---|---|---|
| | | | செப் | ஒக் | நவ | | |
| 201541 | மாதங்கி சுந்தரகுமார் | யா/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை | 93.66 | 96.15 | 87.48 | 3.0173 | 1 |
| 201551 | கார்த்திகா சற்குணம் | யா/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை | 82.33 | 85.17 | 85.02 | 2.5712 | 2 |
| 202517 | சங்கவி மணிவண்ணன் | யா/ வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி | 85.76 | 78.98 | 85.25 | 2.5229 | 3 |
| 202508 | ஆர்த்திகா சாந்தரூபன் | யா/ உடுப்பிட்டி மகளிர் கல்லூரி | 85.79 | 78.59 | 78.88 | 2.3826 | 4 |
| 202523 | நிருஷா பூபாலசிங்கம் | யா/ மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை | 80.40 | 84.09 | 77.38 | 2.3579 | 5 |
| 202012 | சிறிகந்தசேகரம் ஆரணன் | யா/ ஹாட்லி கல்லூரி | 87.57 | 74.12 | 78.66 | 2.3276 | 6 |
| 201048 | சதீஸ்நாதன் தேனுஜன் | யா/ யாழ் மத்திய கல்லூரி | 84.20 | 70.43 | 84.10 | 2.3168 | 7 |
| 201814 | துளசிகா குலநாதன் | யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி | 82.00 | 83.00 | 74.50 | 2.3052 | 8 |
| 202007 | சந்திரராசா நிதுர்ஷன் | யா/ ஹாட்லி கல்லூரி | 86.55 | 82.39 | 69.68 | 2.2714 | 9 |
| 201708 | கவினா கனகேஸ்வரன் | யா/ மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி | 78.24 | 71.56 | 78.53 | 2.1176 | 10 |
| 201562 | கிருசங்கா சிவஞானம் | யா/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை | 79.69 | 74.71 | 71.38 | 2.0496 | 11 |
| 202565 | சாகித்தியா சிவயோகராஜா | யா/ வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி | 80.33 | 65.91 | 78.06 | 2.0413 | 12 |
| 202021 | தர்மசீலன் கலியுகன் | யா/ உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி | 80.40 | 70.12 | 74.15 | 2.0367 | 13 |
| 202528 | ஜிந்துகா பாலச்சந்திரன் | யா/ வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி | 75.67 | 69.69 | 77.45 | 2.0167 | 14 |
| 202569 | யுவஸ்திகா வேணுகோபாலவாணிதாசன் | யா/ வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி | 77.02 | 74.07 | 71.55 | 1.9955 | 15 |
| 202571 | அர்ச்சயா புவனேந்திரராசா | யா/ மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை | 77.86 | 73.17 | 69.81 | 1.9571 | 16 |
| 201610 | டினோஜா ஜெயபாலன் | யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி | 81.14 | 65.06 | 71.98 | 1.9122 | 17 |
| 201538 | டிலக்ஸ்னா அன்ரனி மரியதாஸ் | யா/ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி | 71.45 | 67.00 | 75.68 | 1.8580 | 18 |
| 201074 | சிவகுமாரன் யபிஷேக் | யா/ யாழ் இந்து கல்லூரி | 70.87 | 72.36 | 70.60 | 1.8385 | 19 |
| 202546 | ஜோதினி பீற்றர்ஜெயசீலன் | யா/ மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை | 74.00 | 63.24 | 72.78 | 1.7728 | 20 |
| 202516 | சாகித்தியா இந்திரலிங்கம் | யா/ மெதடிஸ்த பெண்கள் உயர்தரபாடசாலை | 77.42 | 59.91 | 71.55 | 1.7456 | 21 |
| 202525 | விவேகா இராஜகுமார் | யா/ நெல்லியடி மத்திய கல்லூரி | 73.63 | 72.42 | 63.46 | 1.7372 | 22 |
| 202025 | சுகுமாரன் துவாரகன் | யா/ ஹாட்லி கல்லூரி | 77.36 | 71.12 | 61.38 | 1.7343 | 23 |
| 202502 | ரிஷிரேகா குணநேசன் | யா/ உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி | 74.25 | 68.09 | 66.53 | 1.7339 | 24 |
| 202552 | வித்தியா சண்முகவசீகரன் | யா/ மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை | 73.57 | 70.91 | 63.65 | 1.7128 | 25 |
| 202023 | ஜெகநாதன் பிருந்தாபன் | யா/ ஹாட்லி கல்லூரி | 73.37 | 63.73 | 69.70 | 1.7062 | 26 |
| 201102 | ஜோசப் அனுரா ஷானுஜன் | யா/ யாழ்ப்பாணக் கல்லூரி | 68.43 | 70.82 | 67.60 | 1.7055 | 27 |
| 201650 | பிரியங்கா புஸ்பராஜ் | யா/ யாழ் இந்து மகளிர் கல்லூரி | 70.10 | 68.69 | 67.63 | 1.6963 | 28 |
| 202006 | சிவபாதராசா பிரியவர்ணன் | யா/ ஹாட்லி கல்லூரி | 69.83 | 66.99 | 69.15 | 1.6927 | 29 |
| 201076 | ஜனார்த்தனன் கிசோரன் | யா/ யாழ் இந்து கல்லூரி | 72.41 | 66.93 | 66.87 | 1.6882 | 30 |
| 201520 | லக்ஷிகா பத்மநாதன் | யா/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை | 56.99 | 75.02 | 70.29 | 1.6409 | 31 |
| 202020 | நவரத்தினம் டசிராஜ் | யா/ ஹாட்லி கல்லூரி | 69.37 | 64.92 | 68.60 | 1.6357 | 32 |
| 201008 | வாமதேவன் சுலக்ஷன் | மு/ பாண்டியன்குளம் மத்திய மகா வித்தியாலயம் | 56.49 | 78.00 | 67.51 | 1.6280 | 33 |
| 202004 | ஜெயரஞ்சிதன் தருஷன் | யா/ ஹாட்லி கல்லூரி | 75.36 | 67.66 | 60.75 | 1.6238 | 34 |
| 201722 | மாதுரி தில்லைநாதர் | யா/ அச்சுவேலி மத்திய கல்லூரி | 69.45 | 65.22 | 67.11 | 1.6112 | 35 |
| 202014 | யோகேந்திரன் மதுஷனன் | யா/ ஹாட்லி கல்லூரி | 59.42 | 72.45 | 67.90 | 1.5860 | 36 |
| 202518 | புகழினி தர்மராஜா | யா/ மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை | 66.58 | 74.96 | 59.10 | 1.5702 | 37 |
| 202562 | அபிநயா கெங்காதரன் | யா/ வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி | 75.53 | 62.72 | 61.00 | 1.5424 | 38 |
| 201628 | அனித்தா வசீகரன் | யா/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை | 61.30 | 70.00 | 66.27 | 1.5398 | 39 |
| 201033 | முத்துச்செல்வம் தனுஷியன் | யா/ சென்ஜோன்ஸ் கல்லூரி | 62.78 | 69.60 | 65.16 | 1.5347 | 40 |
| 201827 | கிஷானி பத்மநாதன் | யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி | 66.55 | 68.40 | 62.51 | 1.5223 | 41 |
| 201104 | சுப்பிரமணியம் கஜானன் | யா/ யாழ் இந்து கல்லூரி | 63.07 | 68.24 | 64.03 | 1.4913 | 42 |
| 203513 | Amuthavily Mahenderarajh | J/ Chundukuli Girls' College | 65.60 | 60.00 | 68.80 | 1.4857 | 43 |
| 201869 | சிவஷாயினி மகேந்திரன் | யா/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை | 67.01 | 65.00 | 62.73 | 1.4732 | 44 |
| 202539 | அஞ்சனா சரவணபவன் | யா/ வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி | 66.89 | 67.70 | 60.13 | 1.4655 | 45 |
| 201737 | தசாங்கி கிருபானந்தன் | யா/ யூனியன் கல்லூரி | 68.73 | 61.44 | 63.56 | 1.4557 | 46 |
| 203505 | Nithooshicka Ramesh | J/ Vembadi Girls' High School | 61.10 | 64.00 | 67.30 | 1.4491 | 47 |
| 201664 | கிருஸ்ணகோபி நவேந்திரன் | கிளி/ முருகானந்தா கல்லூரி | 60.20 | 61.83 | 69.82 | 1.4472 | 48 |
| 202520 | தஷானா இந்திரராசா | யா/ மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை | 68.14 | 60.48 | 64.08 | 1.4391 | 49 |
| 202018 | இரங்கநாதன் சுகந்தன் | யா/ ஹாட்லி கல்லூரி | 71.86 | 61.37 | 59.16 | 1.4160 | 50 |
| 201637 | சுனேகா திருநாவுக்கரசு | யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி | 63.20 | 66.02 | 62.18 | 1.4145 | 51 |
| 201712 | சாஜிகா பரமேஸ்வரன் | யா/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை | 62.72 | 69.70 | 59.38 | 1.4141 | 52 |
| 201507 | சாறுக்கா கணேசலிங்கம் | யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி | 62.11 | 60.45 | 67.85 | 1.4137 | 53 |
| 201678 | தர்ஷிகா குகானேஸ்வரானந்தம் | யா/ வேலணை மத்திய கல்லூரி | 64.00 | 47.79 | 75.13 | 1.3696 | 54 |
| 202557 | அபிசா கந்தமூர்த்தி | யா/ உடுப்பிட்டி மகளிர் கல்லூரி | 65.61 | 60.67 | 62.13 | 1.3579 | 55 |
| 202504 | ஜெய்கௌரி சோதீஸ்வரன் | யா/ உடுப்பிட்டி மகளிர் கல்லூரி | 66.13 | 54.60 | 65.78 | 1.3335 | 56 |
| 201097 | தெய்வேந்திரம் நிசாந் | யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி | 65.01 | 66.73 | 55.92 | 1.3271 | 57 |
| 202024 | யோகராஜா நிருஷிகன் | யா/ நெல்லியடி மத்திய கல்லூரி | 71.90 | 61.38 | 54.30 | 1.3148 | 58 |
| 202524 | கம்ஷாயினி சுபாஸ்கரன் | யா/ நெல்லியடி மத்திய கல்லூரி | 61.80 | 58.98 | 64.66 | 1.3147 | 59 |
| 201724 | வைஷ்ணவி ஜெயச்சந்திரன் | யா/ அச்சுவேலி மத்திய கல்லூரி | 65.25 | 61.59 | 59.33 | 1.3096 | 60 |
| 203504 | Soumiya Sivakumar | J/ Vembadi Girls' High School | 60.10 | 61.40 | 63.30 | 1.3007 | 61 |
| 202563 | மனுசா இரவிச்சந்திரன் | யா/ வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி | 63.89 | 52.64 | 67.71 | 1.2998 | 62 |
| 201070 | ஞானேஸ்வரன் சதேஸ் | பது/ பதுளை சரஸ்வதி மத்திய கல்லூரி | 57.92 | 59.78 | 64.17 | 1.2520 | 63 |
| 202547 | சிவதரிசினி சிறிதரன் | யா/ நெல்லியடி மத்திய கல்லூரி | 75.65 | 61.58 | 47.55 | 1.2414 | 64 |
| 202568 | குகவதனி நவரத்தினராசா | யா/ மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை | 63.75 | 63.60 | 54.98 | 1.2288 | 65 |
| 201040 | பூவலிங்கம் நிலக்ஷன் | யா/ யாழ் இந்து கல்லூரி | 64.36 | 49.00 | 66.95 | 1.2260 | 66 |
| 202564 | சாருஜா ரவீந்திரன் | யா/ உடுப்பிட்டி மகளிர் கல்லூரி | 59.98 | 66.96 | 54.85 | 1.2221 | 67 |
| 201807 | ஜெயகௌரி கந்தையா | யா/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை | 66.66 | 55.00 | 59.36 | 1.2150 | 68 |
| 203510 | Dilaxsi Rasathurai | J/ Chundukuli Girls' College | 59.80 | 65.90 | 54.90 | 1.2008 | 69 |
| 203512 | Jeya Thanisha Vickneswaran | J/ Jaffna Hindu Ladies' College | 56.50 | 57.20 | 64.50 | 1.1877 | 70 |

☞ ஆங்கிலமொழி மூலப் பரீட்சார்த்திகளின் விபரங்கள் ஆங்கிலத்தில் தரப்பட்டுள்ளன.

☞ பரீட்சைக்குத் தோற்றிய ஏனைய மாணவர்களின் பெறுபேறுகளை அறிய விரும்பும் பெற்றோர் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

பரீட்சை இணைப்பாளர்கள் யாழ்ப்பாணம் - +94777917611 வடமராட்சி - +94778884068

**New Science Hall**
Kannathiddy, Jaffna

**Beacon Study Centre**
Vathiry, Karaveddy

(சி-8621)






(மன்னார்)

2019 ஆம் ஆண்டுக்கான மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் வெற்றிக்கிண்ணத்திற்கான இறுதிநாள் விளையாட்டு நிகழ்வானது மன்னார் நகர சபை மைதானத்தில் மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் குணபாலன் தலைமையில் இடம் பெற்றது.

கடந்த ஒரு மாத காலத்திற்கு மேலாக மன்னார் மாவட்ட செயலகம் பிரதேச செயலகங்கள் மற்றும் அரச திணைக்களங்களை உள்ளடக்கி இடம் பெற்ற போட்டிகளில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு தெரிவாகியிருந்த மன்னாரில் உள்ள ஐந்து பிரதேச செயலகங்கள் மற்றும் திணைக்களங்களின் அணிகள் போட்டிகளில் பங்குபற்றியிருந்தன.

குறித்த இறுதி நாள் நிகழ்விற்கு சிறப்பு விருந்தினர்களாக மன்னார் மாவட்டச் செயலாளர் சி.ஏ.மோகன்றாஸ் மற்றும் அருட் சகோதரர் ஸ்ரெனிஸ்லாஸ், மன்னார், நானாட்டான், மாந்தை, மடு பிரதேச செயலாளர்கள், மடுவலயக் கல்வி பணிப்பாளர், மாவட்ட அனர்த்த முகாமைத்துவ அதிகாரி நடராசா திலீபன் மற்றும் மாவட்டச் செயலகத்தின் பதவிநிலை அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் என்று பலரும் கலந்து கொண்டார்கள். (க-285)







முல்லைத்தீவு மாவட்டத்தில் கராத்தே தற்காப்பு பயிற்சிபெற்ற 100பேர் மதிப்பளிக்கப்பட்டதுடன், அவர்களுக்கான தர உயர்வுகள் வழங்கப்பட்டு, புதிய பட்டிகளும் கையளிக்கப்பட்டன.

கோசின் ,சின்ரீயூ கராத்தே சம்மேளனத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட இந் நிகழ்வானது கடந்த 16 ஆம் திகதி முல்லைத்தீவு மகா வித்தியாலயத்தில் இடம் பெற்றது.

அக வணக்க நிகழ்வுடன் தொடங்கிய இந் நிகழ்வில், தொடர்ந்து கராத்தே நிகழ்வுகள், சிறார்களின் கலை நிகழ்வுகள், விருந்தினர்களது உரைகள் இடம்பெற்றதுடன், கராத்தே பயிற்சி பெற்றவர்களுக்கான மதிப்பளிப்பும், அவர்களுக்கான தர உயர்வு வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றது. (க)

## மயக்கமடைந்து...

காய்ச்சல் காரணமாக தனியார் வைத்தியசாலையில் மருந்து எடுத்து குணமாகியநிலையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை வேலைக்குச் சென்ற இடத்தில் மயக்கமடைந்துள்ளார். மயக்கமடைந்தவரை யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற போது குறித்த நபர் முன்னரே இறந்துள்ளதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ் போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இவரின் மரண விசாரணையை யாழ். போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ஞா)

## மோ.சைக்கிள்...

சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது, இம்மாதம் 13ஆம் திகதி காலை சாவகச்சேரி சந்தையில் மரக்கறி வாங்கி வீடு நோக்கி வந்து கொண்டிருந்த போது கைதடியில் பெற்றோல் நிரப்புவதற்காக மோட்டார் சைக்கிளை வலது பக்கம் திரும்பியபோது பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்திசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் நேற்றையதினம் காலை சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இவரின் மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ஞா)

## ஜெனிவா பிரே...

வர்தன தெரிவித்தார்.

ஜெனிவா கூட்டத்தொடர் ஆரம்பிக்க முன்னரே மனித உரிமைகள் பேரவையுடன் தனிப்பட்ட முறையில் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்து பிரேரணையை மீளப்பெறவே அரசாங்கம் முயற்சிக்கின்றது எனவும் அமைச்சர் கூறினார்.

அடுத்த ஆண்டு மார்ச்சில் ஆரம்பிக்கும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை அமர்வுகளில் இலங்கை விவகாரம் குறித்து ஆராய அரசாங்கம் இப்போதே மீளாய்வு நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது.

அரசாங்கமாக நாம் இந்த விடயங்களை எவ்வாறு கையாள வேண்டும் என்ற பலதரப்பட்ட பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டும் வருகின்றது. அமைச்சரவையில் ஜனாதிபதி - பிரதமருடன் நாம் இது குறித்து பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்து வருகின்றோம். அரசாங்கமாக நாம் எமது பணிகளை ஆரம்பித்துள்ளோம்.

கடந்த 2015ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட 30/1 தீர்மானம் இலங்கை அரசாங்கத்தின் இணை அனுசரணையில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஆனால் முன்னைய அரசாங்கம் இதனை ஏற்றுக்கொண்டாலும் கூட எமது அரசாங்கம் இதனை முழுமையாக நிராகரித்துள்ளது. எம்மால் இந்த விடயத்தில் சர்வதேச தேவைக்கான ஒரு வேலைத் திட்டத்தை ஆரம்பிக்க முடியாது.

பொய்யான குற்றச்சாட்டுக்கள் குறித்து எம்மால் இணக்கம் தெரிவிக்க முடியாது. ஆகவே 30/1 தீர்மானத்தை மீளப் பெறுவது குறித்து வெளிவிவகார அமைச்சு அதிகாரிகளால் மீளாய்வு செய்யப்பட்ட பின்னர் அரசாங்கம் இந்த விடயத்தில் உயர்மட்ட நடவடிக்கைகளை கையாளும்.

அதன் பின்னர் அடுத்த ஆண்டு மார்ச் மாதத்திற்கு முன்னரே மனித உரிமைகள் ஆணைக்குழுவுடன் நாம் இந்த விடயங்கள் குறித்து தனிப்பட்ட முறையில் பேச்சுவார்த்தை நடத்துவோம்.

இதேவேளை பிரேரணையை அரசாங்கம் வாபஸ்பெற உள்ள எமது நிலைப்பாடுகளை தெரிவித்து இதிலிருந்து விடுபட்டுக் கொள்ளவே நாம் நடவடிக்கை எடுக்கின்றோம்.

எவ்வாறு இருப்பினும் சவால்கள் நிறைந்த ஆண்டாக அடுத்த ஆண்டு எமக்கு அமையும். சர்வதேச நாடுகளின் அரச சார்பற்ற அமைப்புகள் பல இலங்கை விடயத்தில் அரசாங்கத்தை அழுத்தத்திற்கு உள்ளாக்கும் நோக்கத்தில் செயற்பட்டு வருகின்ற நிலையில் நாம் கடினமான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டியுள்ளது.

சர்வதேச அமைப்புகள் விடுதலைப்புலிகளை நியாயப்படுத்தவே இந்த போர்க்குற்றசாட்டுக்களை முன்வைத்து வருகின்றனர். புலிகளை அழித்தமையையே பொது மக்களை கொன்றதாக கூறி இராணுவத்தை பழிவாங்கும் விதத்தில் நகர்வுகளை முன்னெடுத்து வருகின்றனர். இதற்கு இலங்கை அரசாங்கம் இணக்கம் தெரிவிக்காது என்றார். (ஞா)

## சர்வதேசத்தின்...

கொண்டு சென்றனர்.

ஆனால் நாம் இன்று உருவாக்கியுள்ள அரசாங்கம் ஒருபோதும் சர்வதேச அமைப்புகளுக்கோ அல்லது அரச சார்பற்ற நிறுவனங்களுக்கோ புலம்பெயர் அமைப்புகளுக்கோ அடிபணிந்து செயற்படமாட்டோம்.

எமது கொள்கை தேசியத்தை கட்டியெழுப்பும் கொள்கையாகும். ஜனாதிபதியும் பிரதமரும் தெளிவான சிந்தனையில் உறுதியாக தேசியவாதக் கொள்கையில் இருந்தே செயற்பட்டு வருகின்றனர். அவ்வாறு இருக்கையில் நாம் சர்வதேச சக்திகளுக்கு அடிபணிய மாட்டோம் என்றும் அவர் கூறினார். (ஞா)

## அரசின் வரவு...

பாராளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாச தெரிவித்தார். கிரில்லவல பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

சமுர்த்தி திட்டத்தோடு, அத்தியாவசியப் பொருட்களும் வழங்கப்படும் என வாக்குறுதி வழங்கப்பட்டது. இதனை மக்கள் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

வெற்றி பெற்ற தரப்பினர் உடனடியாக வரவு - செலவு திட்டத்தைக் கொண்டுவரவேண்டும் என்று நாம் கேட்டுக்கொள்கிறோம்.

பாராளுமன்றில் நாம் பெரும்பான்மையாக இருப்பதால், நாம் வரவு - செலவுத் திட்டத்தை தோற்கடிப்போம் என்று சிலர் கூறிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், நாம் ஒருபோதும் அவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடமாட்டோம்.

மக்களின் நலனுக்காக, நாம் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைவிட அதிக ஆதரவை அரசாங்கத்துக்கு வழங்கவும் தயாராகவே இருக்கிறோம்.

எனினும். அந்த வரவு- செலவுத் திட்டத்தில் உள்ள சலுகைகள், தேர்தல் காலத்தின்போது மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியாக அமைய வேண்டும் என நாம் கேட்டுக் கொள்கிறோம் என அவர் தெரிவித்துள்ளார். (ஞா)

## ஆயுதம் ஏந்திய இராணுவம்...

இதற்கான அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கையெழுத்துடன் நேற்று ஞாயிற்றுக்கிழமை முதல் நடைமுறைக்கு வரும் வகையில் வெளியிடப்பட்டுள்ளது.

ஈஸ்டர் தாக்குதலின் பின்னர் பிறப்பிக்கப்பட்ட அவசர கால சட்டத்தை நீக்கியதன் பின்னர் பொது மக்களின் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் கீழ் ஜனாதிபதியால் நாட்டினுள் அமைதியைக்காக்கும் பொருட்டு இராணுவம், கடற்படை மற்றும் விமானப் படையினர் அழைக்கப்பட்டுள்ளனர்.

அதன்படி, பொது ஒழுங்கை தொடர்ந்தும் பராமரிப்பதற்காக 25 நிர்வாக மாவட்டத்தினை உள்ளடக்கும் வகையில் ஆயுதம் ஏந்திய இராணுவத்தினரை கடமையில் ஈடுபடுத்துவதுவதற்கு அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் ஜனாதிபதி நடவடிக்கை எடுத்துள்ளார். (ஞா)

## சர்வாதிகார ஆட்சியை முன்னெடுக்க...

தொடரை ஒத்திவைப்பதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்கின்றது.

இது முற்றிலும் ஜனநாயகத்திற்கு முரணானதாகும். பாராளுமன்றத்தை கூட்டும் அதிகாரத்தை எதிர்தரப்பினருக்கு தர வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளது.

ஐக்கிய தேசிய கட்சியின் தலைமை காரியாலயத்தில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது. இதன் போது உரையாற்றிய போதே அவர் இதனை தெரிவித்தார். இடைக்கால அரசாங்கத்தின் முறையற்ற செயற்பாடுகளை மறைப்பதற்காகவும் மக்களின் கவனத்தை திசைதிருப்புவதற்காகவுமே நீதிமன்றத்தினால் நிறைவுபெற்ற வீதி விபத்து வழக்கிற்கு அரசாங்கம் முக்கியத்துவம் கொடுத்து பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்கவை கைது செய்துள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரை கைது செய்யும் போது பாராளுமன்ற கோட்பாடுகளுக்கு அமைய பாரம்பரியமாக கடைப்பிடிக்க வேண்டிய விடயங்களை அரசாங்கம் கடைப்பிடிக்கவில்லை என்று சபாநாயகர் குறிப்பிட்டுள்ளார். (ஞா)

## கூட்டமைப்பு 16 ஆசனங்களை இம்...

மாற்று அணியின் பிரவேசம் கூட்டமைப்பை பாதிக்கும் எனவும் தெரிவித்தார்.

வவுனியாவில் புளொட் அமைப்பின் மத்தியகுழு கூடியதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர்,

மாற்று அணி ஒன்று உருவாகும் போது அது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பாதிக்க செய்யும். போட்டிகள் கூடுகின்ற போது கட்டாயமாக பாதிப்பு இருக்கும். அது தொடர்பில் நாங்கள் பேசுகின்றபோது கூடியவரையில் ஒத்த கருத்துள்ள கட்சிகளை கூட்ட முடியுமாயின் இன்னும் கூட்டவேண்டும் என்ற அபிப்பிராயமும் இருக்கின்றது. அது எவ்வளவு சாத்தியமென்று எனக்கு தெரியவில்லை. ஏனெனில் அந்த பிளவு இன்று கூடுதலாகவே இருக்கின்றது. அதனை மீண்டும் ஒற்றுமைப்படுத்துவது சாத்தியமில்லாவிட்டாலும் கூட இரண்டு மூன்று அணிகளாக பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடும் வாய்ப்புக்களே அதிகமாக உள்ளது.

எனவே மக்களே இனி தீர்மானிக்க வேண்டும். எனினும் எங்கள் கட்சியை பொறுத்தமட்டில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கான வாக்குவீதமே கூடுதலாக இருக் கும் என்றே நம்புகின்றோம். தமிழ் தேசியக்கூட்டமைப்பே கூடுதலான ஆசனங்களையும் பெறும். கடந்த காலங்களைப்போல் 16 ஆசனங் களை எடுக்குமா என்பது கேள்விக் குறியாக இருந்தாலும் கூட அதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டும் என்ற எண்ணப்பாடு தமிழ்த் தேசியக்கூட்டமைப்புக்குள் இருக்கின்றது.

தற்போதுள்ள கள நிலவரங்கள் எப்படி சாதக பாதகமாக மாறும் என்று கூற முடியாது விட்டாலும் கூட தேர்தலில் கணிசமான ஆசனங்களை பெறுவோம் என்ற நம்பிக்கை உள்ளது என தெரிவித்தார். (ஞா-250)

## சட்டத்தின் முன்...

வாறு குறிப்பிட்டார்.

பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க கைது செய்யப்பட்ட விவகாரம் தற்போதைய அரசியல் களத்தின் பிரதான பேசுபொருளாக காணப்படுகின்றது. அரசியல் பழிவாங்கலை அரசாங்கம் ஆரம்பித்து விட்டதாக எதிர்த்தரப்பினர் குறிப்பிட்டுக் கொள்கின்றார்கள்.

எந்நிலையிலும் தனிப்பட்ட மற்றும் அரசியல் ரீதியான பகைமையை தீர்த்துக்கொள்ள சட்டத்தினை கருவியாக பயன்படுத்திக் கொள்ளவில்லை.

பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க கைது செய்யப்பட்டமை அரசியல் பழிவாங்கல் என்று குறிப்பிட்டுக் கொள்பவர்கள் கைது செய்தமைக்கான காரணம் குறித்து கவனம் செலுத்துவது கிடையாது என அவர் தெரிவித்துள்ளார். (ஞா)


சீட்டிழுப்பு வாரம்: 536
வர்ணம்: மஞ்சள்
திகதி: 22/12 2019 ஞாயிற்றுக்கிழமை
S 05 18 45 64
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 82,355,725
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk

அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 829
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி: 2019.12.22
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 76,264,075/-
வெற்றி இலக்கங்கள் 30 58 61 77
ஆங்கில எழுத்து N

SUPER BALL சுப்பர் போல்
சீட்டிழுப்பு வாரம் ▶ 1096
சீட்டிழுப்பு திகதி ▶ 22.12.2019 ஞாயிற்றுக்கிழமை
M 13 16 21 42
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.87,493,948
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>S9 என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

ராசி அதிர்ஷ்டம்
திகதி 22/12/2019 வெற்றி வாரம் 2715 வர்ணம் ஊதா
வெற்றி இலக்கங்கள் துலாம் 07 15 36 56
திங்கட் கிழமை வெற்றிப் பொதி ரூ. 3,462,134
2019/12/23 ம் திகதி திங்கட் கிழமை மஞ்சள் நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

தன நிதானய
திகதி - 2019.12.22
சீட்டிழுப்பு இலக்கம் - 242
Q 04 50 55 72
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
NATIONAL LOTTERIES BOARD
தொலைபேசி : 011 460 7000 / 011 232 4324
உத்தியோகபூர்வ முடிவுகளுக்கு : 011 456 9416

மஹஜன சம்பத
திகதி 2019/12/22
சீட்டிழுப்பு இலக்கம் 4075
B 5 9 6 5 2 7
தேசிய லொத்தர் சபை

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள் NLB
சீட்டிழுப்பு திகதி 22-12-2019
சீட்டிழுப்பு இலக்கம் 2338
ஆங்கில எழுத்து C
வெற்றி இலக்கங்கள் 61 66 68 78
தேசிய லொத்தர் சபை

நீரோகா
திகதி 2019/12/22
சீட்டிழுப்பு இலக்கம் 639
லக்கினம் கன்னி
வெற்றி இலக்கங்கள் 13 17 28 30

FLC FRENCH LANGUAGE CENTRE

Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட

பிரெஞ்ச் Courses

V. Jegan (Trained in France) DELF A1,A2,B1,B2

40, பலாலி வீதி, ஆரியகுளம். 0779 789 456 / 021 221 7781 ஆரம்பம்: 04.01.20 சனி 10 மணி

181, பிரதான வீதி, நெல்லியடி 0779 789 456 ஆரம்பம் :20.01.20 3.30 மணி

திருமணமாகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1, Spoken English மற்றும் IELTS வகுப்புக்களும் நடைபெறுகின்றன. (C-8555)

# Techno World

(பெருமாள் கோவில் வீதி, யாழ்ப்பாணம்)

**A/L - 2022 தொழில்நுட்பபிரிவு புதிய பிரிவு ஆரம்பம்**

**23.12.2019 காலை 9.15 am**

- பொறியியல் தொழில்நுட்பவியல்
- உயிர் முறைமைகள் தொழில்நுட்பவியல்
- தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம்
- ICT, கணிதம், விவசாய விஞ்ஞானம், புவியியல், சித்திரம்.

நவீன ஆய்வுகூட வசதிகளுடன்

தொடர்புகளுக்கு : 077 017 5346, 077 170 3549 (C-8628)

# Auto CAD

**Personal & Group Classes**

பொறியியலாளர்-படவரைஞர்
கட்டிட கலைஞர்-நிலஅளவையாளர்
தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கான
விரைவான சிறப்பு பயிற்சி நெறி (8627)

LINK: 076 9000064 - 071 8617972

# CCTV Technician Course

100% தொழில் சார் - செயன்முறை பயிற்சிநெறி



**Approved Certificate**

வேலைவாய்ப்பு உத்தரவாதம்

29th Batch : 21-DEC-2019 (Conditions Apply)

Computer Hardware & Networking

Start on : 11.01.2020 (C-8616)

iCS EDUCATION

77, மணிக்கூட்டு கோபுர வீதி யாழ்ப்பாணம். (பெருமாள்கோவில் அருகாமையில்)

021-7306000, 077-6656778

## யாழில் விபத்து இருவர் படுகாயம்

(கொடிகாமம்)

யாழ்ப்பாணத்தில் இருந்து கேரதீவு நோககி சென்ற மோட்டார் சைக்கிள் வேகக கட்டுப்பாட்டை இழந்ததால் தட்டுப்பாட்டி பாலத்திற்கு அருகாமையில் மோட்டார் சைக்கிளில் சென்ற இருவர் படுகாயமடைந்த நிலையில யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று ஞாயிற்றுக் கிழமை மாலை 6.00 மணிக்கு இடமபெற்றுள்ளது. (ஞா-114)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603 021 567 1532

பௌதிகவியல்

**T.K.KAJAN B.Sc**

077 653 1177 (1567)

## வாகனம் விற்பனைக்கு

10 Wheel டிப்பர் வாகனம் விற்பனைக்குண்டு

தொடர்பு: (1566)

077 717 7245

# D.C.M (N)

யாழ்.நகர்

(வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை அருகாமை)

**A/L 2022**

**கலை, வர்த்தகப் பிரிவு**

ஆரம்பம்

**05.01.2020**

**காலை 9.00**

(C-1555) நிர்வாகி

இன்று ஆரம்பம்

# NEW SCIENCE HALL

KANNATHIDDY. JAFFNA

## 2022 A/L கணித, உயிரியல் பிரிவு

**தமிழ்மொழி மூலம்**

**PHYSICS**

திரு.S.சோதிலிங்கம்
திரு.N. கபிலன்
திரு.G.பிரபா
திரு.K.செல்வன்

**CHEMISTRY**

திரு.K.சிவத்திரன்
திரு.N.மகேஸ்வரன்
திரு.G.BENO
திரு.T.சுசாந்தன்

**BIOLOGY**

திரு.V.S.குணசீலன்
திரு.T. கெங்காதரன்
திரு.K.ராகவன்

**COM.MATHS**

திரு.P.செந்தில்நாதன்
திரு.S.சிவகரன்

**AGRICULTURE**

திரு.K.அரசிளங்குமரன்

**ICT**

திரு.K.கேதீஸ்வரன்

**ENGLISH MEDIUM**

**PHYSICS**

MR.S.SOTHILINGAM
MR.M.KUGANESWARAN

**CHEMISTRY**

MR.G.BENO
MR.N.MAHESWARAN

**BIOLOGY**

MR.V.S.GUNASEELAN
MR.S.P.NAGANATHAN

**COM.MATHS**

MR.P.SENTHILNATHAN
MR.S.SIVAKARAN

ஆரம்பம்: **23.12.2019 திங்கள் பி.ப 1.00 மணி**

தொ.பே: **077 791 7611** (C-8623)

விசேட இறுதிக் கருத்தரங்குகள்

**SLAS**

மாதிரி வினாத்தாள்கள்
திங்கள்–வெள்ளிவரை
பி.ப 5.00 - பி.ப 7.00

**புகையிரத பாதுகாவலர்**

திங்கள் – வெள்ளி வரை
பி.ப 4.30 - 7.00

T.P:0766883394

யாழ்ப்பாணக் கல்லூரி, பட்டப்படிப்புகள் பிரிவு (யாழ்.ஆஸ்பத்திரி வீதி கொமர்ஷல் வங்கியருகில்) (C-8630)

## விரைவு பொதிகள் சேவை

**விசேட விலை குறைப்பு**



DELIVERY IN 3-5 DAYS

UK – 550 /=Kg
கனடா - 950 /=Kg
ஜேர்மனி - 650 /=Kg
நெதர்லாந்து- 700 /=Kg
இத்தாலி- 700 /=Kg (நிபந்தனைகளுக்கு உட்பட்டது) (C-8115)

0768226240

- யாழ்ப்பாணம்
- கிளிநொச்சி
- நெல்லியடி
- கொடிகாமம்
- வல்வெட்டித்துறை
- பருத்தித்துறை
- மானிப்பாய்
- திருகோணமலை
- சாவகச்சேரி
- சுன்னாகம்
- மருதங்கேணி

V2 TRAVELS

# கணினி, சிங்களம்

**O/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பம்.**

* அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படும்.
* உங்களுக்கு விரும்பிய நேரத்தைத் தெரிவுசெய்து கற்க முடியும்.

**New Sky Computer Training Centre**

இல.716, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

தொ.பே. 021 221 5992 (C-8620)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

# றாஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

*வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.*

தொடர்பு: றாஜ் - 077 679 6623 (1568)

# சாவகச்சேரியில்...

வெளிநாடுகளுக்கான துரித தபால் பொதிகள் சேவை

| | |
|---|---|
| லண்டன் - 540/= | கனடா - 950/= |
| ஜேர்மனி - 640/= | நெதர்லாந்து - 690/= |
| இத்தாலி - 690/= | |

சலுகை அட்டை (Discount Card) பெற வேண்டும் எனும் நிபந்தனை இல்லை.

**076 443 1576**



# அருள்

இல.01, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. (C-8397)

## வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை

- ஆகாய மற்றும் கடல் மார்க்கமாக, அதி விரைவு, விரைவு, சிக்கன பொதிகள் சேவை.
- கடலுணவு, இறைச்சி, எண்ணை வகை, மருந்துப் பொருட்கள், பழ வகைகள்,
- பால் மா வகைகள் என்பனவற்றையும் அனுப்பிக் கொள்ள முடியும்.
- நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.

**20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை வென்ற நாம்**

# அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்

10, மாநகர சபை புதிய கட்டடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

021 222 3536 (C-8614)

நெல்லியடியில் - இல.01, பெற்றோல் செற் லேன், நெல்லியடி. 076 443 1576

சாவகச்சேரியில் - இல.01, NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.12.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.